விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 10 வியாழக்கிழமை (24.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 156



கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே


## சீரற்ற காலநிலை காரணமாக பலி எண்ணிக்கை 13ஆக உயர்வு

### 84 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு


(கொழும்பு)

அடை மழை மற்றும் வெள்ளம் காரணமாக இதுவரை நாடளாவிய ரீதியில் 14 மாவட்டங்களுள் 18 ஆயிரத்து 542 குடும்பங்களைச் சேர்ந்த 84 ஆயிரத்து 943 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தென்மேல் பருவப்பெயர்ச்சி காலநிலை காரணமாக நாட்டில் நிலவும் கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் 14 மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அம் மாவட்டங்களி 24

## மின்சார தாக்குதலுக்கு இலக்காகி தந்தையும் மகனும் உயிரிழப்பு



### கரணவாய் கிழக்கில் நேற்று சோகம்

(கரணவாய்)

மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி தந்தையும் மகனும் மரணமடைந்த சம்பவம் ஒன்று வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுப் புதன்கிழமை கரணவாய் கிழக்கு நாவலர்மடம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மயில்வாகனம் ஜெகநாதன் (வயது 58) மற்றும் அவருடைய மகனான ஜெகநாதன் சஞ்சீவன் (வயது31) ஆகிய இருவரும் மரணமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் 23

## எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள்

# ரணில் - மைத்திரி அரசு வீட்டுக்கு அனுப்பப்படும்

### ஒன்றிணைந்த கூட்டு எதிரணி அறிவிப்பு

(கொழும்பு) எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் ரணில் - மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த கூட்டு எதிரணி அறிவித்துள்ளது.

(23-ம் பக்கம் பார்க்க...)

### தீக்காயத்துக்குள்ளான குடும்பப்பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயத்துக்குள்ளான இளம் குடும்பப்பெண் ஒருவர், ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். 23

### ரயில் கடவையில் கார் விபத்து

மயிரிழையில் தப்பிய சாரதி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்த ரயிலுடன் பாதுகாப்பற்ற கடவையில் வீதியை கடக்க 23

### வட பகுதியில் இன்றும் மழை

(யாழ்ப்பாணம்)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்து 23

### 50ஆயிரம் குடும்பங்களுக்கு வடக்கில் கல்வீடு அமைக்க

அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் போரால் பாதிக்கப்பட்ட 50 ஆயிரம் குடும்பங்களுக்கு செங்கல் மற்றும் சீமெந்திலான பாரம்பரிய நிலையான வீடுகளை அமைத்து வழங்குவதற்கான வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தக்கா 24

### சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கீரிமலை நகுலேஸ்வர ஆலய கோபுரத்தில் மின்னல் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மகளிர் கல்லூரி கணனி ஆய்வுகூடம் மற்றும் கீரிமலை நகுலேஸ்வர ஆலய கோபுரத்தின் மீது நேற்று மின்னல் தாக்கியுள்ளது.

தென்மராட்சி - சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கணனி ஆய்வுகூடத்தில் நேற்று மதியம் மின்னல் தாக்கியுள்ளது.

கணனி ஆய்வுகூடத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்மானியில் மின்னல் தாக்கியது. மின்மானியில் தீப்பிடித்த போதும் அது அணைக்கப்பட்டது. சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணம் மாநகர சபை 24

### தர்மபுரத்தில் வெடிபொருட்களை அடையாளம் காட்டும் கருவி மீட்பு



(மல்லாவி)

தர்மபுரத்தில் வெடி பொருட்களை அடையாளம் காட்டும் கருவி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் தர்மபுரம் பகுதியில் உள்ள முன்னாள் போராளியின் வீட்டில் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக விமானப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப் 24

### கிளிநொச்சி முரசுமோட்டை பகுதியில்

## நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த பெருமளவு வெடிபொருள் மீட்பு

(பரந்தன்)

கிளிநொச்சி, முரசுமோட்டைப் பகுதியில் பொதுமகன் ஒருவருடைய வீட்டு வளவில் நிலத்துக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு வெடிபொருள்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

முரசுமோட்டையில் 24





## அச்சுவேலியில் உள்ள உணவகத்தின் மீது வாள்வெட்டு குழு தாக்குதல்

### இரு பணியாளர்கள் மீதும் வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தோப்பு பகுதியில் உள்ள உணவகத்தின் மீது நேற்று இரவு தாக்குதல் நடத்திய வாள் வெட்டு குழுவினர் அங்கு பணியாற்றிய ஊழியர்களை வாளால் வெட்டி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

வாள்வெட்டுக்கு இலக் 23



### நல்லாட்சி அரசாங்கத்துக்கு "கோத்தா" பயம் பிடித்துள்ளது!

மகிந்தானந்த அளுத்கமகே

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்திற்கு தற்போது "கோத்தா" பயம் பிடித்துள்ளது. அரசாங்கத்திலுள்ள சகல தரப்பினரும் தற்போது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை பற்றியே பேசிக்கொண்டிருக்கின்றனர் என 23

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கணபதிப்பிள்ளை மாணிக்கம்

சித்திராங்கர் வளவு நெல்லியடி கரவெட்டியை பிறப்பிடமாகவும் தற்பொழுது விக்னேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை மாணிக்கம் அவர்கள் நேற்று (23.05.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிநாதர் கணபதிப்பிள்ளை (பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, கிருஷ்ணபிள்ளை, சின்னம்மா, கந்தசாமி, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவாம்பிகை, தேவ தாசன், தேவரட்ணம், காலஞ்சென்ற தேவமனோகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர் களான நடராசா, தங்கம்மா மற்றும் ஜேந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுரேஸ் (வலயக்கல்வி அலுவலகம்-வடமராட்சி), தனுஜா (பிரதேச சபை-பருத்தித்துறை), யோகேந்திரா, குகேந்திரா, அனோஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்னேஸ்வரா கல்லூரி வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
T.P:0778998578, 0212264995

தகவல்:-
குடும்பத்தினர்

(சி-2695)

## திருமதி நல்லதம்பி பராசக்தி
(காரைநகர்)

மண்ணில்
28
-
02
-
1935



விண்ணில்
20
-
05
-
2018

காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகவும் கருங்காலி, நாவற்கண்டி மற்றும் பண்டாரவளை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி பராசக்தி அவர்கள் 20.05.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகசிவம்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது மகளும், காலஞ்சென்றவர்களான வள்ளிகந்தையா-சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் விவேகானந்தன் (பண்டாரவளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலகுமார் (கமநல திணைக்களம்-வவுனியா), சசிகலா (பொபி இம்பெக்ஸ் ஸ்ரீமுத்துமாரி-பண்டாரவளை) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாந்தசொரூபி, பிரேமமயரேசன், துஷ்யந்தி, கஜவர்த்தினி, விஷால் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவஞானவதி, சிவசிதம்பரம், சிவகௌரி, கற்பகவதி, சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மீனாட்சியின் மைத்துனியுமாவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் 22.05.2018 செவ்வாய்க்கிழமை பண்டாரவளையில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டாரவளை (4189) தகவல்:-குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு சிவசிவா

தோற்றம்
20
-
07
-
1935



மறைவு
21
-
05
-
2018

அல்வாய் வடமேற்கு திக்கத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சிவசிவா 21.05.2018 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு-அருமைப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கந்தையா-செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தர்மாவதியின் அன்புக் கணவரும், சாந்தகுமாரி (யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர்), சிவகுமாரி (சுவிஸ்), திருவாதரன் (சிவதர்மா ஸ்ரோஸ் திக்கம்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், மகேந்திரன் (யாழ்.இந்துக் கல்லூரி பிரதி அதிபர்), உதயகுமார் (சுவிஸ்), சாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்ஜீவன், அட்சயா (வேம்படி உயர்தர பாடசாலை) ஆகியோரின் அம்மப்பாவும், துவாரகா, துளசி ஆகியோரின் அம்மப்பாவும், ஜனன், விதுஷன், தனுஷன், விதுர்சிகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), ஐதுஷன் (வேலாயுதம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி, ஓம்சிவா ஆகியோரின் அன்பு தமயனாரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், வள்ளிப்பிள்ளை, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், நித்திவேல் (லண்டன்), சுமதி (கனடா), கிருஷ்ணா ஆகியோரின் பெரியதந்தையாரும், வாணி (சுவிஸ்), விஜிதா, வாசுகி, கஜேந்திரர் (லண்டன்), விஜயேந்திரன் ஆகியோரின் மூத்தமாமாவும், நிரஜா, சத்தியரூபி, சிவா சங்கர், பார்த்தீபன், பாலேந்திரன், சிவானி, சங்கீதா ஆகியோரின் பெரியமாமாவும், இந்திரகுமாரியின் ஆசை ஐயாவும், ஜபி, ஜது, ஜபர்ணா, கம்சா, கமிசா, விதுஷன், தர்சிகா, ஒளிநிலா, டிலானி, பிரகலாதன், தர்மிளா, சிந்துஜா, கயல்விழி, ஐங்கரன், மிதுலா ஆகியோரின் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3.00 மணியளவில் திக்கம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


திக்கம், அல்வாய் வடக்கு, அல்வாய்.
தொடர்பு:0771335673

(சி-2697)

தகவல்:-
குடும்பத்தினர்

## மயில்வாகனம் ஜெகநாதன்    ஜெகநாதன் சஞ்சீவன்





மத்தொனி, கரவெட்டியை பிறப்பிடமாகவும் கரணவாய் கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் ஜெகநாதன் அவர்களும் (உரிமையாளர், வானகம் போன் சொப், தலைவர் கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ சங்கம்) அவரது அன்பு மகன் ஜெகநாதன் சஞ்சீவன் அவர்களும் நேற்று (23.05.2018) புதன்கிழமை அகால மரணமானார்கள்.

அமரர் மயில்வாகனம்-சிவபாக்கியம் தம்பதிகளின் மூத்த மகனும், சாந்தினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சஞ்சீவன் மற்றும் அர்ச்சனா, கானகன் ஆகியோரின் அன்பு தந்தையும், மாலதி, குகநாதன் (சுவிஸ்), பத்மநாதன் ஆகியோரின் சகோதரனும், சிதம்பரநாதன், ஜெயகாந்தன், ஜெயமோகன், மதனரூபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இருவரினதும் இறுதிக் கிரியைகள் நாளை (25.05.2018) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு இல.41/1, கரணவாய் கிழக்கு, கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்கள் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.41/1 கரணவாய் கிழக்கு,
கரவெட்டி. 0778470610

(சி-2699)

தகவல்:-
குடும்பத்தினர்

# மாணவர்களுக்கு ஏற்படும் அநீதிகள் குறித்து கல்வி அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி என்ற வகையில் தனக்கு வரும் கடிதங்கள், தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் சில கலந்துரையாடல்களின் போது தெரிவிக்கப்படும் விடயங்களுக்கேற்ப ஆசிரியர், மாணவர் தொடர்பு குறித்தும் ஆசிரியர்களின் மூலம் மாணவர்களுக்கு ஏற்படும் தொந்தரவுகள், அநீதிகள் குறித்தும் பல்வேறு தகவல்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். இந்த நிலைமை குறித்து அதிகாரிகள் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிங்கிரிய வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரி விஞ்ஞான பீடத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர் தொழிலை ஒரு உன்னதமான பணியாக கருதிய அன்றைய யுகத்திற்கும் ஆசிரியர் தொழிலை தொழிலாக மட்டுமே கருதுகின்ற இன்றைய யுகத்திற்குமுள்ள வேறுபாட்டை விளக்கிய ஜனாதிபதி ஆசிரியர் தொழில் என்பது தேசத்தை கட்டியெழுப்புகின்ற பொறுப்பு வழங்கப்பட்டுள்ள எந்தவொரு தொழிலுக்கும் இரண்டாம் பட்சமாக கருத முடியாத உன்னதமான தொழிலாகும் என்றும் தெரிவித்தார்.

இன்று ஆசிரியர் சேவையிலுள்ள 250,000 இற்கும் மேற்பட்டவர்களிடையே அந்த உன்னதமான தொழிலுக்கு பொருத்தமற்ற எட்டு அல்லது ஒன்பது வீதமானவர்கள் இருப்பதாக ஆய்வுகளின் மூலம் தெரியவந்திருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி அது கல்வித் தகைமைகளுக்கேற்ற வகையில் அல்லாது தமது சேவையின் மீது இருக்கும் மதிப்பு, அர்ப்பணிப்பு மற்றும் திறன்கள் மீது காட்டும் பலவீனத்தின் அடிப்படையிலாகும் என்றும் தெரிவித்தார்.

ஆசிரியர் தொழிலிலும் அரசாங்க சேவையிலும் அரசியல் துறையிலும் உள்ள இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து முன்னேற்றத்தை நோக்கி பயணிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். எந்தவொரு துறையினதும் அங்கீகாரமும் கௌரவமும் பாதுகாக்கப்படுவது அத்துறையிலிருக்கின்றவர்கள் சமூகத்திற்கு வழங்கும் பண்பாடு மற்றும் முன்மாதிரியின் மூலமேயாகும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

## அவன்கார்ட் நிறுவனத் தலைவர் நிஸங்கவின் மனு பிற்போடல்



(கொழும்பு)

இரகசியப் பொலிஸாரால் தான் கைது செய்யப்படுவதை தடை செய்து உத்தரவிடுமாறு கோரி அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு ஜூன் மாதம் 08ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

அந்த மனு நேற்று பிரியந்த ஜயவர்தன மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிபதி முர்து பெர்னாண்டோ இந்த வழக்கை விசாரிக்க விரும்பாத காரணத்தால் மனுவை பிற்போடுவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காலி துறைமுகத்தில் மிதக்கும் ஆயுதக் களஞ்சிய சாலையை நடத்திச் சென்ற சம்பவத்தில் தன்னை கைது செய்து விளக்கமறியலில் வைப்பதற்கு இரகசியப் பொலிஸார் முயற்சிப்பதாக நிஸங்க சேனாதிபதி தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆயுதக் களஞ்சிய சாலையை நடத்திச் செல்வதற்கு அமைச்சரவையின் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்திருந்ததாக நிஸங்க சேனாதிபதி தனது மனுவில் கூறியுள்ளார்.

தனக்கு எதிராக இரகசியப் பொலிஸார் விசாரணை செய்துள்ள விதம் தன்னிச்சையான மற்றும் சட்டவிரோதமான முறையில் இருப்பதாகவும், இதனூடாக தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அவர் தனது மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன் காரணமாக தனக்கு எதிரான விசாரணை ஊடாக தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்றும், தன்னை கைது செய்வதற்கு தடை விதித்து உத்தரவிடுமாறும் நிஸங்க சேனாதிபதி உச்ச நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது (இ-7)

## ஆளுநர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்





(திருமலை)

திருகோணமலை, கோமரங்கடவெல வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட மதவாச்சி சிங்கள மகா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரி, கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால், பிரதான கதவை மூடி, நேற்றுக் காலை ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தாம் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருவதாகவும் தங்களுடைய பிள்ளைகளைக் கல்வியாளர்களாக உருவாக்க வேண்டுமென நினைக்கின்ற போதிலும் தங்களுடைய பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்கு எதுவித அபிவிருத்திகளும் செய்யப்படவில்லையென, அப்பெற்றோர்கள் குற்றஞ்சாட்டினர்.

மதவாச்சி சிங்கள மகா வித்தியாலயத்தில் தரம் 1 தொடக்கம் 11 வரை வகுப்புகள் காணப்படுவதாகவும் 294 மாணவர்கள் கல்வி கற்று வருவதாகவும் தெரிவித்த பெற்றோர்கள், அங்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு, இந்த ஆர்ப்பாட்டத்தின்போது கோரி நின்றனர்.

இதேவேளை, இவ்வார்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் திருகோணமலை - கண்டி பிரதான வீதியையும் வழி மறித்தமையால் அவ்வழிக்கான போக்குவரத்தும் சில மணி நேரம் தடைப்பட்டது. (இ-7)

## மரணமடைந்தவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் இழப்பீடு

(கொழும்பு)

அனர்த்தங்களில் சிக்குண்டு மரணமடைந்த நபர்களுக்கு, ஆகக் கூடியது தலா 10 இலட்சம் ரூபாய் வரையிலும் இழப்பீடு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, வெள்ளத்தில் சிக்குண்ட வீடுகளை சுத்தப்படுத்துவதற்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (இ-7)

## போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் 21.04.2018 ஆம் திகதி போட்டிப் பரீட்சை நடத்தப்பட்ட இணைந்த சாரதிகள் சேவை தரம் III இற்கான பெறுபேறுகளும் 28.04.2018 ஆம் திகதி போட்டிப் பரீட்சை நடத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர் தரம் III இற்கான பெறுபேறுகளும் நேற்று 23.05.2018 வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இப்பெறுபேறுகளினை வடக்கு மாகாணத்தின் www.np.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம். மேலும் நேர்முகப் பரீட்சை தொடர்பிலான ஏனைய மேலதிக நடவடிக்கைகளின் பொருட்டு பெறுபேறுகள் உரிய அமைச்சுக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதாவது இணைந்த சாரதி சேவைக்குரிய பெறுபேறுகள் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) மற்றும் முன்பள்ளி ஆசிரியர் சேவைக்குரிய பெறுபேறுகள் வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பிலான ஏனைய விபரங்கள் தேவைப்படின் உரிய அமைச்சு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். அத்துடன் பரீட்சார்த்திகளுக்குரிய தனிப்பட்ட பெறுபேறுகள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.ஏ.மோகன்ராஸ் அறிவித்துள்ளார். (இ)

## இலங்கைக்கும்-சிங்கப்பூருக்கும் இடையிலான உடன்படிக்கையின் பின்னணியில் மகேந்திரன்

(கொழும்பு)

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் முக்கிய பங்கை வகித்துள்ளதாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர குற்றஞ் சாட்டியுள்ளார்.

பிணைமுறி மோசடியில் தேடப்பட்டு வரும் ஒருவர், எவ்வாறு இந்த செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டார் என்ற கேள்வியையும் அவர் எழுப்பியுள்ளார். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் நீதிமன்றத்தால் தேடப்பட்டு வருகின்றார்.

அவ்வாறான நிலையில், இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான நடவடிக்கையில் அவர் முக்கிய பாத்திரத்தை வகித்துள்ளார்.

அத்தோடு, சிங்கப்பூருடனான உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள போதும், அதனை அவசரமாக செய்து கொள்ள வேண்டிய தேவை காணப்பட்டதால் விரிவாக கலந்துரையாடப்படவில்லை. அத்தோடு, சட்டமா அதிபரின் பரிந்துரைகள் இந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே அமைச்சரவை அனுமதி வழங்கியது. எனினும், அது பின்பற்றப்பட்டதா?

குறிப்பாக, இலங்கை பணியாளர்களின் தொழிலுக்கு உத்தரவாதமளிக்கும் செயற்பாடுகளும் இந்த உடன்படிக்கையில் இல்லை. குறித்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறும் வகையிலான சட்ட ஏற்பாடுகளும் இல்லை. இவ்வாறு இருந்தால், பிரச்சினைகளை தீர்க்க நாம் சிங்கப்பூருக்குத்தான் செல்ல வேண்டும்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான தேசிய கொள்கையொன்று இலங்கையில் இல்லை. இந்நிலையில், இந்த உடன்படிக்கை தொடர்பாக ஆராயவும், கொள்கைத் திட்டமொன்றை வகுக்கவும் குழுவொன்றை நியமிப்பது அவசியம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொல்கத்தா கொண்டாட்டம்; ராஜஸ்தான் பரிதாபம்

ஐ.பி.எல்., 'எலிமினேட்டர்' போட்டியில் அசத்திய கொல்கத்தா, 25 ஓட்டங்களால வெற்றி பெற்று, இறுதி வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டது. ராஜஸதான் அணி தொடரிலிருந்து பரிதாபகரமாக வெளியேறியது.

இந்தியாவில், 11ஆவது ஐ.பி.எல்., சீசன் நடக்கிறது. நேற்று, கொல்கத்தாவில் நடந்த 'எலிமினேட்டர்' போட்டியில், புள்ளிப்பட்டியலில் 3, 4ஆவது இடங்களை பிடித்த கொல்கத்தா, ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணியின் தலைவர் ரகானே, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**கார்த்திக் அரைச்சதம்**

கொல்கத்தா அணிக்கு கௌதம் தொல்லை கொடுத்தார். இவரது 'சுழலில்' சுனில நரைன் (4), ராபின் உத்தப்பா (3) சிக்கினர். நிதிஷ் ராணா (3) ஏமாற்றி னார். அடுத்து வந்த அணித் தலைவர் தினேஷ் கார்த்திக், உனத்கட் பந்தில் தொடர்ச்சியாக 2 பவுண்டரிகள் விளாசினார். கிறிஸ் லின் (18) நிலைக்கவில்லை. சுப்மன் கில் (28) ஆறுதல் கொடுத்தார். உனத்கட் பந்தை சிக்சருக்கு அனுப்பிய கார்த்திக், 35 பந்துகளில் அரைச்சதமடித்தார். இவர், 52 ஓட்டங்களில ஆட்டமிழந்தார். உனத்கட் வீசிய 17ஆவது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விளாசிய ரசல், லோக்லின் வீசிய 18ஆவது ஓவரில், 2 சிக்சர்கள் பறக்கவிட்டார். சியர்லஸ் (2) ஏமாற்றினார்.

20 ஓவர்களில் கொல்கத்தா 7 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்கள் எடுத்தது. ரசல் (49 ஓட்., 25 பந்து) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் ராஜஸ்தான் அணி சார்பில் கௌதம், ஆர்ச்சர், லோக்லின் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**சாம்சன் ஆறுதல்**

ராஜஸ்தான் அணிக்கு அணித் தலைவர் ரகானே, ராகுல் திரிபாதி ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. ரசல் பந்தை சிக்சருக்கு அனுப்பிய ரகானே, பிரசித் வீசிய 4வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரிகள் விளாசினார். நரைன் வீசிய 5ஆவது ஓவரில் 2 சிக்சர் பறக்கவிட்ட திரிபாதி (20), பியுஸ் சாவ்லா 'சுழலில்' சிக்கினார். குல்தீப் வீசிய 9ஆவது ஓவரில், 2 பவுண்டரி அடித்த சஞ்சு சாம்சன், சியர்லஸ் பந்தில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 62 ஓட்டங்களைச் சேர்த்த போது குல்தீப் 'சுழலில்' ரகானே (46) ஆட்டமிழந்தார். பொறுப்பாக ஆடிய சாம்சன், 37 பந்துகளில் அரைச் சதமடித்தார். இவர், 50 ஓட்டங்களுடன் சாவ்லா பந்தில் ஆட்டமிழந்தார். ஸ்ரூவேர்ட் பின்னி, 'டக்-அவுட்' ஆனார்.



கடைசி ஓவரில் ராஜஸ்தானின் வெற்றிக்கு 34 ஓட்டங்கள் தேவைப்பட்டது. பிரசித் வீசிய 20ஆவது ஓவரில், 8 ஓட்டங்கள் மட்டுமே கிடைக்க,

ராஜஸ்தான் அணி, 20 ஓவர்களில், 4 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. கிளாசன் (18), கௌதம் (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


பந்துவீச்சில் கொல்கத்தா சார்பில் பியுஸ் சாவ்லா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**ஹைதராபாத்துடன் மோதல்**

கொல்கத்தாவில் நாளை நடக்கவுள்ள தகுதிச்சுற்று-2ல் கொல்கத்தா அணி, ஹைதராபாத்தை சந்திக்கிறது. இதில் வெற்றி பெறும் அணி, வரும் 27ல் மும்பையில் நடக்கவுள்ள இறுதிப் போட்டியில் சென்னை அணியை எதிர்கொள்ளும்.

## சோகம், அதிர்ச்சி... 360 டிகிரி...

# ஏபி டி வில்லியர்ஸ் திடீர் ஓய்வு



கிரிக்கெட் இரசிகர்களின் உள்ளத்தை கொள்ளை கொண்ட டி வில்லியர்ஸ், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்றார். 'மிஸ்டர் 360' என வர்ணிக்கப்படும் இவர், ஆடுகளத்தில் சுழன்று ஆடும் அசாத்திய திறன் பெற்றவர். சோர்வு காரணமாக ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் டி வில்லியர்ஸ், (வயது-34). கடந்த 2004ல் போர்ட் எலிசபெத் நகரில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் மூலம் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் காலடி வைத்தார். ஆரம்பத்தில் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய டி வில்லியர்ஸ், பின் துடுப்பாட்டத்தில் அதிரடி காட்டினார். எதிரணி பந்துவீச்சை மைதானத்தின் நாலாபுறமும் சிதறடித்த இவர், 'மிஸ்டர் 360' என அனைவராலும் செல்லமாக அழைக்கப்பட்டார். இவருக்கு 'ஏபிடி', 'சுப்பர்மேன்' என்ற செல்லப் பெயர்களும் உண்டு.

**தலைமைப் பொறுப்பு**

டி வில்லியர்ஸின் சிறப்பான செயறபாட்டால், டெஸ்ட் (2015-16, 2 போட்டி, ஒரு வெற்றி, ஒரு தோல்வி), ஒருநாள் (2012-2017, 103 போட்டி, 59 வெற்றி, 39 தோலவி, ஒரு 'டை', 4 முடிவு இல்லை), சர்வதேச 'ரி20' (2012-17, 18 போட்டி, 8 வெற்றி, 9 தோல்வி, ஒரு முடிவு இல்லை) என, மூன்று வித போட்டிகளுக்கும் தலைவராக நியமிக்கப்பட்டார். இவரது தலைமையிலான தென்னாபிரிக்க அணி, 2015இல் நடந்த உலக கிண்ணத் தொடரில் அரையிறுதி வரை சென்றது.

**திடீர் ஓய்வு முடிவு**

இந்நிலையில் நேற்று, டி வில்லியர்ஸ் திடீரென சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்தார். இது குறித்து டி வில்லியர்ஸ் கூறியதாவது, சர்வதேச போட்டிகளில் இருந்து விலகும் முடிவு திடீரென எடுக்கப்பட்டது. கடந்த 14 ஆண்டுகளாக விளையாடியதில் சோர்வடைந்து விட்டேன். இதுதான் ஓய்வுபெறுவதற்கு சரியான நேரமாக கருதுகிறேன். இது கடினமான முடிவு என்றாலும், சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கும் போது ஓய்வு பெறுவதில் பெருமை கொள்கிறேன்.

சமீபத்தில் இந்தியா, அவுஸ்திரேலியா அணிகளுக்கு எதிராக டெஸ்ட் தொடரை வென்றது மகிழ்ச்சியான தருணம். வெற்றி, தோல்விகளின் போது பயிற்சியாளர்கள், கிரிக்கெட் தென்னாபிரிக்காவின் நிர்வாகிகள் மற்றும் சக வீரர்கள் நல்ல முறையில் ஒத்துழைப்பு வழங்கினர். இவர்களால்தான் என்னால் போட்டியில் சிறப்பாக செயற்பட முடிந்தது. தவிர, தென்னாபரிக்கா மற்றும் உலகெங்கிலும் உள்ள ரசிகர்கள் வழங்கிய ஆதரவு சாதிக்க உதவியது. இதற்காக அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு டி வில்லியர்ஸ் கூறினார்.

**ஐ.பி.எல். சந்தேகம்**

ஐ.பி.எல். தொடரில், ஆரம்பத்தில் டில்லி அணிக்காக (2008-2010, 28 போட்டி, 671 ஓட்., ஒரு சதம், 3 அரைச்சதம்) விளையாடிய டி வில்லியர்ஸ், தற்போது பெங்களூர் அணியில் (2011-2018, 113 போட்டி, 3,282 ஓட்., 2 சதம், 25 அரைச்சதம்) இடம்பெற்றுள்ளார். இதேபோல தென்னாபிரிக்காவில் நடக்கும் உள்ளூர் போட்டிகளில் நோர்தர்ன்ஸ் (2003-), டைட்டன்ஸ் (2004-) அணிகளுக்காக விளையாடி வரும் இவர், மே.தீவுகளில் நடக்கும் கரீபியன் பிரிமியர் லீக் தொடரில் பார்படோஸ் அணிக்காக (2016) பங்கேற்றுள்ளார்.

சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்துள்ள இவர், ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்பாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது குறித்து இவர் கூறுகையில், "உள்ளூர் போட்டிகளில் டைட்டன்ஸ் அணிக்காக தொடர்ந்து விளையாடுவேன். வெளிநாடுகளில் நடக்கும் தொடர்களில் பங்கேற்கும் எண்ணம் இல்லை," என்றார்.

**உலக சாதனை**

கடந்த 2015ல் ஜொகனஸ்பேர்க் நகரில் நடந்த மே.தீவுகளுக்கு எதிரான போட்டியில், துடுப்பாட்டத்தில் அசத்திய டி வில்லியர்ஸ், சர்வதேச ஒருநாள் போட்டியில், அதிவேக அரைச்சதம் (16 பந்து), அதிவேக சதம் (31 பந்து) அடித்து புதிய உலக சாதனை படைத்தார்.

தவிர இவர், டெஸ்டில் அதிவேக சதம் (75 பந்து, எதிர் இந்தியா, 2010-11), சர்வதேச 'ரி20'இல் அதிவேக அரைச் சதமடித்த (21 பந்து, எதிர் இங்கிலாந்து, 2016) தென்னாபிரிக்க வீரனென்றபெருமை பெற்றுள்ளார்.

**'சுப்பர்மேன்'**

பொதுவாக டி வில்லியர்ஸ், களத் தடுப்பில் சிறப்பாக செயற்படுவார். சமீபத்திய ஐ.பி.எல்., போட்டியில் ஹைதராபாத் அணியின் அலெக்ஸ் ஹேல்ஸ் தூக்கி அடித்த பந்தை பவுண்டரி எல்லைப் பகுதியில் களத்தடுப்பு செய்து கொண்டிருந்த டி வில்லியர்ஸ், அந்தரத்தில் பறந்து ஒற்றை கையால பிடித்தார். இதனால் இவரை, பெங்களூர் அணியின் தலைவர் ஹோலி, 'சுப்பர் மேன்' என புகழாரம் சூட்டினார்.

**20,000 ஓட்டங்கள்**

சர்வதேச அரங்கில் 20,000 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார் டி வில்லியர்ஸ. இவர் 420 போட்டிகளில் 47 சதம், 109 அரைச்சதம் என 20,014 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

## 'ஃபிபா' கால்பந்து கவுண்ட்டவுண் 21

# முரட்டு ஆட்டம்: பிரேசில் 'கிரீடம்'

ஏழாவது உலக கிண்ணத் தொடர் 1962ல் சிலியில் நடந்தது.



இதில, வீரர்கள் இடையே முரட்டு ஆட்டம் தலைதூக்கியது. இத்தாலி, சிலி அணிகள் இடையே ஜூன் 2ல் சான்டியாகோவில் நடந்த தொடக்க சுற்றுப் போட்டி, கால்பந்து வரலாற்றில் மிக மோசமானதாக அமைந்தது.

போட்டியின் 12ஆவது நிமிடத்தில் இத்தாலியின் ஜியார்ஜியா பெரினி, சிலியின் லாண்டாவுடன் மோதினார். நடுவர் வெளியேறச் சொல்ல மறுத்தார்.

உடனே பொலிஸ் வந்து பெரினியை இழுத்துச் செல்லும் அளவுக்கு நிலைமை மோசமானது. பின் சிலியின் லியோனல் சான்சஸ், இத்தாலியின் மரியோ டேவிட் முகத்தில் குத்து விட்டார். இதற்கு பதிலடியாக சான்சஸ் தலையை நோக்கி உதைத்தார் டேவிட். இப்படி அடிதடியுடன் முடிந்த இப்போட்டியில் சிலி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

**பீலே காயம்**

செக்கோஸ்லோவேகியாவுக்கு எதிரான போட்டியில் பிரேசிலின் நட்சத்திர வீரரான பீலே காயம் அடைந்து, விலகினார். இருப்பினும் ஜகாலோ, கரின்சா கூட்டணியின் சிறப்பான ஆட்டம், பிரேசிலை அரையிறுதிக்கு அழைத்துச் சென்றது.

காலிறுதியில் சோவியத் யூனியனை வென்ற சிலி, அரையிறுதியில் பிரேசிலிடம் தோல்வி அடைந்தது. இப்போட்டியில் சிலி ரசிகர் ஒருவர் போத்தலை வீச, அது பிரேசிலின் முக்கிய வீரரான கரின்சாவின் தலை மீது பட்டு பெரும் சர்ச்சை ஏற்பட்டது. மற்றொரு அரையிறுதியில் யுகோஸ்லோவியாவை வீழ்த்திய செக்கோஸ்லோவேகியா இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

**பிரேசில் சம்பியன்**

இறுதிப் போட்டியில் பிரேசில் அணி, செக்கோஸ்லோவேகியாவை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, உலக கிண்ணத்தை தக்கவைத்துக் கொண்டது.

**'பிரீ கிக்'**

கடந்த 1960ல் சிலி நாட்டில் மிகப் பெரிய பூகம்பம் ஏற்பட்டது. இது 'ரிக்டர்' அளவு கோலில் 9.5 ஆக பதிவு ஆனது. போட்டிகள் நடக்க உள்ள மைதானங்கள் பெருமளவில் சேதமடைந்தன. இருப்பினும் கட்டுமானப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட, 1962 உலக கிண்ணத் தொடர் வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

# கண்ணீர் அஞ்சலி


பிறப்பு 04-02-1960



அமரர் **ம.ஜெகநாதன்**

இறப்பு 23-05-2018

பிறப்பு 25-12-1986



அமரர் **ஜெ.சஞ்சீவன்**

எமது சங்க தலைவரும் அவர்தம் சிரேஷ்ட புதல்வரும் அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஆற்றொனா துயர் அடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

நா.கிருஷ்ணமூர்த்தி, ச.பாலச்சந்திரன், கா.சிவநேசன், ஆ.சங்கர்.

கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி.

(ரி-3698)

# தூத்துக்குடியில் மீண்டும் துப்பாக்கிச்சூடு

## இளைஞன் ஒருவன் பரிதாபமாக உயிரிழப்பு

(தூத்துக்குடி)

தூத்துக்குடியில் ஸ்டெர் லைட் எதிர்ப்புப் போராட்டக் குழுவினர் மீது பொலிஸார் மீண்டும் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

தூத்துக்குடியில் ஸ்டெர் லைட் ஆலைக்கு எதிராக நேற்று முன்தினம் மக்கள் பெருமளவில் திரண்டு ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் வன்முறை வெடித்தது. பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 11 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

துப்பாக்கிச்சூடு சம்பவத்தைக் கண்டித்து பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அதேசமயம் தூத்துக்குடியிலும் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் தடியடி நடத்தி கலைத்தனர். இதையடுத்து தூத்துக்குடி பகுதியில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸ் வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டது. இதையடுத்து அனைத்துப் பகுதிகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் தீவிரமாக ரோந்து சுற்றி வருகின்றனர்.

இந்நிலையில் தூத்துக்குடி அண்ணா நகர் பகுதியில் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நேற்று மோதல் ஏற்பட்டது.

அப்போது போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் முயன்றனர். ஆனால் வாக்குவாதம் முற்றிய நிலையில், பொதுமக்கள் கற்களை வீசித் தாக்கினர். பொலிஸாரும் தடியடி நடத்தினர்.

ஒரு கட்டத்தில் பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதனால் போராட்டக்காரர்கள் சிதறி ஓடினர். இதில் காளியப்பன் (வயது-22) என்ற இளைஞர் உயிரிழந்தார். மேலும் 4 பேர் பலத்த காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். போராட்டக்காரர்கள் கல் வீசித்- தாக்கியதில் பொலிஸ் தரப்பில் எஸ்.பி. உள்ளிட்ட சிலருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. (7)

# மேஜர் புலத்வத்த பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபரான இராணுவப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியான மேஜர் பிரபாத் புலத்வத்த பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கம்பஹா இம்புல்கொடவில் கடந்த 2013ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி ஊடகவியலாளர் உபாலி தென்னக்கோனும் அவரது மனைவியும் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு, மேஜர் சீவலி புலத்வத்த கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டார்.

2017 ஏப்ரல் 7ஆம் திகதி கம்பஹா நீதிமன்றம் அவரை பிணையில் விடுவித்திருந்தது.

• கடந்த வெள்ளிக்கிழமை கம்பஹா நீதிமன்றம் மேஜர் புலத்வத்தைக்கு அழைப்பாணை விடுத்திருந்தது. எனினும் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில், கடந்த திங்கட்கிழமை சரணடைந்தார்.

இதையடுத்து அவரை நிபந்தனைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. (இ-7)

# நிறைமதி கலைவிழா

(கரணவாய்)

வடமாகாணகல்வித் திணைக்களத்தின் அனுசரணையில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் நிறைமதி கலைவிழா-2018 எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி கலை அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் கலந்து கொள்வார். (இ-60)

# மரண அறிவித்தல்

## கணகசபாபதி கௌரிதரன்



ஏழாலை மேற்கு சுன்னாகத்தைப்பிறப்பிடமாகவும் அச்சுவேலி இடைக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கணகசபாபதி கௌரிதரன் 21.05.2018 அன்று காலமானார்.

அன்னார் கணகசாபதி - ஜெயகௌரிதேவி தம்பதியரின் அன்பு மகனும், நடராசா கமலாதேவி தம்பதியரின் மருமகனும், சசிகலாவின் பாசமிகு கணவரும், டக்சாயினி, திருசிகன், தனுசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌதா, கௌசலா, ஜெயபிரதா, கௌரீஸ்வரன், தனஞ்சயன், ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.05.2018 இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி, இடைக்காடு. (4166) தகவல் - குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சண்முகம் கனகம்மா



அழகாபுரி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வைத்தியசாலை வீதி மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம்-கனகம்மா அவர்கள் 22.05.2018 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி செல்லாச்சி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான தில்லையர் - தெய்வானை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், கமலாதேவி, குணவதி ஆகியோரின் தாயாரும், கிருஸ்ணமூர்த்தி, மனோகரன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, சுப்பிரமணியம் மற்றும் பாக்கியம், தம்பிராசா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகமணி - மாரிமுத்து மற்றும் சதாசிவம், காலஞ்சென்றவர்களான செல்லம்மா - சுந்தையா மற்றும் பூமணி ஆகியோரின் மைத்துனியும், பாலசுப்பிரமணியத்தின் சின்னம்மாவும், ஜீவானந்தன், சுரேஸ், ஜெயந்தி, சதீஸ், நமசிலன், சங்கீதா, குணசீலன், காலஞ்சென்ற நிவாசன், தனுசன் ஆகியோரின் பேர்த்தியும் தர்சிகா, திலோஜன், தர்சிகன், சஸ்வின், சஜலன், கோபிகன், துளசிகரன், செர்லின், ஹரிணி, வினித், கனிஷா, நமித், ஜெயானி, ஜெனிக்கா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.05.2018 நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக மூளாய் பித்தனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைநகர் வீதி, மூளாய். (4185) தகவல் - குடும்பத்தினர் கிருஷ்ணமூர்த்தி : 077 767 3225, மனோகரன்

# இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| | | சூரி புத | சுக் |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம், பூரட்டாதி | | ராகு |
| கேது, செவ் | | | |
| சனி | | குரு | சந் |

**24.05.2018**

வைகாசி 10, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு

தசமி முன்னிரவு 9.05 மணிவரை

உத்தரம் முற்பகல் 10.22 மணிவரை

சுபநேரம் 7.22-8.52 மணிவரை

இராகுகாலம் 1.22-2.52 மணிவரை

வள்ளுவன்

**மேடம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**இடபம்:** காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மிதுனம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்:** பயணங்களால் பலனுண்டு, உடன் பிறப்புக்கள் உங்கள் கருத்துக்களை ஏற்க முன்வருவர், செய் தொழில் மேன்மையுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகை; விருப்பத்தை நிறைவேற்றும், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** விருப்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** பணப்புழக்கம் அதிகமானவும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கலாம்.

**விருச்சிகம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், வருமானம் திருப்தரும்.

**தனுசு:** கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், குடும்ப ஒற்றுமை மேலோங்கும், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர்.

**மகரம்:** குறை சொல்லியவர்கள்கூட பாராட்டும் நாள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**கும்பம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.

**மீனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம்.



பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தின் நடமாடும் சேவை கடந்த 20 ஆம் திகதி யாழ்.வண்ணார்பண்ணை வள்ளுவர் சனசமூக நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஒரு மாதகாலமாக இயங்கவுள்ள இந்த நடமாடும் சேவையில் கல்வி, விளையாட்டு, சிரமதானம், மதவழிபாடு, கலைகலாசாரம் போன்ற 5 விடயங்கள் உள்ளடக்கப்பட்டு பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.யாழ்.வண்ணார்பண்ணைப் பகுதியை அண்மித்த 10 கிராம உத்தியோகத்தர் பிரிவை உள்ளடக்கி இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளதுடன் இங்கு முறைப்பாடுகள் மற்றும் முறைப்பாட்டு பிரதிகள் பெறுதல், ஆலோசனைகள் என்பவற்றை பொலிஸாரிடம் இருந்து பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆரம்ப நிகழ்வில் சர்வமத தலைவர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள், அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

## திருக்குறள் தேர்வு முடிபுகள் வெளியீடு

### அருணோதய மாணவன் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், பாடசாலைகளில் உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களிடையே கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்திய திருக்குறள் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி முதலாம் இடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் நி.சிவாஜனும் இரண்டாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி ர.நிவேதாவும் மூன்றாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி கோ.யனோவாவும் நான்காம் இடத்தை கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவி யோ.நிவேதிதா மற்றும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மாணவி ர.நிவோதினி ஆகியோரும் பெற்றுள்ளனர்.

இவர்களுடன் ஜே.ஜெறின் (வேலணை மத்திய கல்லூரி), வி.விக்னா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பி.ராதிகா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ந.தேனுஜா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), சு.சஞ்சிகா (மகாஜனக் கல்லூரி), க.நிதுசா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ப.சுதர்மினி (சங்கானை சிவப்பிரகாச வித்தி), சி.பவதர்ஜினி (இளவாலை மெய்கண்டான் ம.வி.), செ.கீர்த்தனா (யாழ்ரன் கல்லூரி), க.கிந்துஷா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோர் திறமைச் சித்திகளைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கான பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தமிழ்ச்சங்கமும் சிவகணேசன் புடைவையகமும் இணைந்து நடத்தவுள்ள வள்ளுவர் விழாவின் போது வழங்கப்படவுள்ளதாக தமிழ்ச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர். தேர்விற்குத் தோற்றிய அனைவரது பெறுபேறுகளையும் தமிழ்ச்சங்கத்தின் இணையத்தளத்தில் (www.thamilsangam.org) பார்வையிட முடியும் எனவும் அறிவித்துள்ளனர். (இ-7)

## சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் அறிவுறுத்தலுக்கமைய திடீர் மரண விசாரணை அதிகாரியினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் 22.05.2018 ஆம் திகதி ஆணொருவரின் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சடலமானது கே.கே.எஸ்.வீதியிலுள்ள இணுவில் மக்கிலியட் வைத்தியசாலை முன்பாகவுள்ள பேருந்து தரிப்பிடத்தில் இருந்ததாகவும் இவரது உடலில் பெயின்ற் இடைக்கிடையே இருப்பதுடன் இவரது வயது 65 ஆக மதிக்கத்தக்கதாகும்.

அத்துடன் இவர் நீல நிற நீளக்காற்சட்டையுடன் சாம்பல் புள்ளியுடைய மேற்சட்டையினையும் அணிந்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே இச்சடலத்தினை உரியவர்கள் 14 நாட்களினுள் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

# தமிழக அரசு காட்டுமிராண்டித்தனம்

## 11 பேர் துப்பாக்கிச் சூட்டில் பலியானது குறித்து ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் அமைந்துள்ள "ஸ்டெர்லைட்" செப்புத் தொழிற்சாலையை மூடக்கோரி அந்தப் பகுதி மக்கள் அமைதியான முறையில் போராடி வருகின்றனர். அந்தப் போராட்டத்தின் நூறாவதுநாளான நேற்று முன்தினம் தடையை மீறி முற்றுகைப் போராட்டம் நடத்திய மக்கள் மீது தமிழக அரசு பொலிஸ் மூலமாக வன்முறையைக் கட்டவிழ்த்துள்ளது. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இதுவரை 11 பேர் பலியாகியுள்ளனர். தமிழக அரசின் இந்த காட்டுமிராண்டித்தனத்தை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.என கட்சியின் மத்திய குழுவின் சார்பில் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




சுற்றுச் சூழலுக்கும் மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கும் பேராபத்தை ஏற்படுத்தி வரும் "ஸ்டெர்லைட்" தொழிற்சாலைக்கு எதிராக மக்கள் நீண்டகாலமாகப் போராடி வரும் நிலையில் தொழிற்சாலையை விஸ்தரிப்பதற்கான அனுமதியை தமிழக அரசு வழங்கி இருந்ததைக் கண்டித்து மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். கடந்த நூறு நாட்களாகத் தொடர்ச்சியாகப் போராடி வந்த நிலையிலும் பாராமுகமாய் இருந்த அரசின் மக்கள் விரோதப் போக்கினை எதிர்த்து முன்னெடுக்கப்பட்ட முற்றுகைப் போராட்டமே இப்போது கொலைக் களமாக்கப்பட்டு 11 பேரை பலியெடுத்திருக்கிறது.

பெருந் தொகையிலான மக்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கும் தடியடிக்கும் வன் முறை வெறியாட்டத்திற்கும் உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஒட்டுமொத்த வன்முறைகளுக்கும் "ஸ்டெர்லைட்" தொழிற்சாலை நிர்வாகத்திடம் விலைபோயிருக்கும் தமிழக அரசின் மக்கள் விரோதப் போக்கே காரணம் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

இந்நிலையில் தமிழக அரசு, தொழிற்சாலை நீர்வாகத்துக்கு ஆதரவாக செயற்படுவதை உடன் நிறுத்தி மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் "ஸ்டெர்லைட்" தொழிற்சாலையை நிரந்தரமாக மூடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நியாயத்தையும் இழப்பீட்டையும் பெற்றுத்தர வேண்டும் என்பதையும் எமது கட்சி வலியுறுத்துகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஆவணக் காப்பகத்தின் 58 ஆவது நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தின் நிகழ்ச்சித் தொடரின் 58 ஆவது நிகழ்வாக இலங்கையின் கலை வரலாற்றாளருள் ஒருவரான பிரசன்னரணபாகு "டம்புல சுவரோவியங்கள்: எல்லாளன் - துட்டகெமுனு மோதல்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.

கீர்த்தி சிறி ராஜசிங்கனது அரசியல் நோக்கம், பௌத்த மறுமலர்ச்சி முதலியவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்சி ரீதியாக வாசிப்பதாகவே இவ்வுரை அமையும்.

இந் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 வரை சமகாலக் கலை கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தில் (இல 91 கோவில் வீதி நல்லூரில்) இடம்பெறவுள்ளது. (இ-7)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்




(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் சமூகசேவை பிரிவால் பொன்னம்பல வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபனால் வழங்கப்பட்டன. (இ-6)



பருத்தித்துறை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலைக்கு வேலும்மயிலும் பவுண்டேசன் நிறுவுநர் வேலும்மயிலும் தயானந்தராஜாவின் பணிப்பிற்கமைய நேற்று தூய குடிநீர் தொகுதியொன்று அமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. பாடசாலை அதிபர் செல்வி.தே.தேவதயாழினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமராட்சி வலயகல்விப் பணிப்பாளர் ந.நந்தகுமார் தூய குடிநீர்த்தொகுதியை திறந்துவைத்தார். இந்நிகழ்வில் பவுண்டேசன் பொது முகாமையாளர் தே.சிவகுமாரசாமி, பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.




# அரச கடன் நிலைமை குறித்து மகிந்தவுடன் பகிரங்க விவாதம் அழைக்கிறார் அமைச்சர் மங்கள

Mangala Samaraweera @MangalaLK Following

I would like to invite @PresRajapaksa for a public debate on national debt stock and debt servicing as the former Finance Minister. #lka



(கொழும்பு)

அரச கடன் நிலைமை தொடர்பாகவும், கடன் சேவை குறித்தும் விவாதிக்க தன்னுடன் பகிரங்கவிவாதத்திற்கு வருமாறு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை அமைச்சர் மங்கள சமரவீர தனது டுவிட்டர்பக்கத்தில்விடுத்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ முன்னாள் நிதியமைச்சர் என்பதன் காரணமாகத்தான் இந்த அழைப்பை விடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிதியமைச்சராக 10 ஆண்டுகள் பணியாற்றியவர் என்பதால், யாரோ எழுதிக் கொடுக்கும் அறிக்கையை வெளியிடாது, அரச கடன் மற்றும் ஏனைய நிதி விவகாரங்கள் தொடர்பில் தன்னுடன் விவாதத்திற்கு வர வேண்டும் எனவும் மங்கள சமரவீர நேற்று முன்தினம் ஊடக சந்திப்பிலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மங்களவுடன் விவாதம் நடத்த மகிந்தவுக்கு நேரமில்லை

## மகன் நாமல் பதில்



(கொழும்பு)

நிதியமைச்சர் மங்கள சமரவீர மகிந்த ராஜபக்ஷ விடம் விவாதத்திற்கு வரும் முன் வேலையை செய்து காட்டுமாறும், விவாதம் செய்து கொண்டிருக்க மகிந்தவுக்கு நேரமில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரச கடன் சம்பந்தமாக விவாதத்திற்கு வருமாறு அமைச்சர் மங்கள சமரவீர விடுத்துள்ள அழைப்பு தொடர்பாக பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மங்கள சமரவீரவுடன் விவாதம் நடத்திக்கொண்டிருக்க மகிந்த ராஜபக்ஷவிற்கு நேரமில்லை. மகிந்த ராஜபக்ஷ இன்னும் மக்களுக்கு சேவையாற்றி வருகிறார்.

அத்துடன் மகிந்த ராஜபக்ஷ செயலில் வேலை செய்து காட்டிய தலைவர். அரசாங்கம் கடந்த மூன்று ஆண்டுகளாக கதைகளை பேசியதே தவிர செய்தது எதுவுமில்லை.

விவாதங்களை நடத்தும் முன்னர் வேலையை செய்து காட்டுங்கள். வேலைகளை செய்யாது விவாதங்களுக்கு வருமாறு கூறுவது கேலிக்குரியது. தென் மாகாணத்தில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென் மாகாணத்தில் பரவி வரும் வைரஸ் காரணமாக குழந்தைகள் பலியாகி வருகின்ற நேரத்தில் அரசாங்கத்தால் தெளிவான வேலைத் திட்டத்தை முன்வைக்க முடியாது போயுள்ளது.

அத்துடன் பாதாள உலகக் குழுக்கள் தலைதூக்கியுள்ளன. இளைய வயதினருக்கு இடையில் போதைப்பொருள் பாவனையும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் அரசாங்கம் வீணாக பேசிக்கொண்டிருக்காது, இந்த பிரச்சினைகளையாவது தீர்க்க வேண்டும். அபிவிருத்தி என்பது தற்போதைய அரசாங்கத்திற்கு கனவு மட்டுமே எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# மின்னல் தாக்கி மீனவர் பலி!

(கொழும்பு)

புத்தளம் - கல்பிட்டி களப்பில் தெப்பம் ஒன்றில் இருந்தவாறு மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் நேற்றுக் காலை மின்னல் தாக்கி பலியாகியுள்ளார்.

கல்பிட்டி நரிகுடா பகுதியை சேர்ந்த 63 வயது வர்ணகுலசூரிய தோன்ஜோர்ஜ் மேர்வினக் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மீனவரின் உடல் கல்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மரண விசாரணைகள் நடைபெறவுள்ளன. (இ-7)



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

அறிவித்தல்

**2018 உயர் திருவிழாக் காலத்தில்- தற்காலிக கடைகள் அமைத்தல், உடை தேங்காய் பெற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றுக்கான ஏலம் கூறுதல்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் வருடாந்த உயர் திருவிழா 2018.06.14ஆம் திகதியன்று ஆரம்பமாகி 2018.06.29 ஆம் திகதியன்று நிறைவுபெறவுள்ளது. இக் காலப்பகுதியில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு, நிர்வாகத்தினால் சுட்டிக்காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும், உடை தேங்காய்க்கான பகிரங்க ஏலம் கூறுதலும் 03.06.2018 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறும். ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:

1. குளிர்பானக் கடைகள் நடத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

2. ஏலத்தில் முதல் நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத் தொகையின் மூன்றில் ஒரு (1/3) பங்கினைச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை பத்தாவது நாள் திருவிழாவுக்கு முன்னதாகச் செலுத்தி முடிக்க வேண்டும்.

(சி-2669)

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

அன்னையின் பணியில்
நா.யோகநாதன்
செயலாளர்.

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:28<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/LகனடாPR<br>தொ.இ: B/7697 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2ம்பாதம்<br>தகைமை/தொழில்:BSC அரசதொழில்<br>தொ.இ: G/7855 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணிசெவ் 2 இல்<br>தகைமை/தொழில்:BSC TO<br>தொ.இ: B/7702 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் திருவாதிரை<br>கி.பா: 11சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/Lஅரசதொழில்<br>தொ.இ: G/7859 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 53 செவ் 8 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:A/Lதனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/7703 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2ம்பாதம்<br>கி.பா: 83செவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:DIPLOMA அரசதொழில<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: .G/7861 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1ம் பாதம்<br>கி.பா: 51<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:MASTER OF ELECTRIC.ENGகனடா<br>எதிர்பார்ப்பு: எழுத்துடன் குழம்பியது<br>தொ.இ: B/7704 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 2ம்பாதம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSC. Agre., SLASஉதவிஅரசஅதிபர்<br>தொ.இ: G/4636 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# 'நிறுத்து நிறுத்து விலையேற்றத்தை நிறுத்து'

# பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்






(குருமன்காடு)

எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சமூக விழிப்பிணர்வுக்கான மக்கள் அமைப்பினர் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது,

"நிறுத்து நிறுத்து விலையேற்றத்தை நிறுத்து. அரிசி, தேங்காய்க்கு விலையேற்றம், பியருக்கோ விலை குறைப்பு, குடிக்கக் கொடுத்து குடி கெடுக்கும் அரசாங்கம், எரிபொருளின் விலையேற்றத்தை மீளப்பெறு" போன்ற கோசங்களை எழுப்பியதுடன் பதாகைகளையும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதில் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (2-250)

# பனங்காமம் குளத்தின் வான்பகுதியை உயர்த்துவதற்கு பாரிய நிதி தேவை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பனங்காமம் குளத்தின் நீர் கொள்ளளவை அதிகரிக்கும் வகையில் குளத்தின் வான் பகுதியை ஒரு அடியால் உயர்த்துவதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளன. அதற்கு பாரிய நிதியொதுக்கீடு தேவையென வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட பனங்காமம் குளத்தின் நீர் கொள்ளளவை அதிகரிக்கும் வகையில் குளத்தின் வான் பகுதியை ஒரு அடியால் உயர்த்துவதன் மூலம் மேலதிக நீரைத்தேக்கி வைக்க முடியும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் இக்குளத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி கிடைக்கப்பெற்றதாகவும் அதன் மூலம் குறித்த அபிவிருத்தி வேலை முன்னெடுக்கப்படவில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தை தொடர்புகொண்டு வினவிய போது, கடந்த ஆண்டில் கிடைக்கப் பெற்ற நிதியில் அணைக்கட்டில் ஏற்பட்ட நீர்க்கசிவைத் தடுப்பதற்கான வேலைகளும் குளத்தின் கீழான நீர்விநி யோக வாய்க்கால்களின் புனரமைப்புப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த குளத்தின் வான் பகுதியை உயர்த்தி நீர்க்கொள்ளளவை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளபோதும், அதற்கு பெருந்தொகை நிதி தேவைப்படுகின்றது.

எமது திணைக்களம் ஊடாகவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளபோதும் அதற்கான நிதி கிடைக்கவில்லை.

அதற்கான நிதி கிடைக்கும் பட்சத்தில் இவ்வேலையை முன்னெடுக்க முடியும் என்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (2-315)




# முல்லைத்தீவில் இடி மின்னல் தாக்கம்; பல வீடுகள் சேதம்



முல்லைத்தீவில் தொடர்ச்சியாக பெய்த கடும் மழை மற்றும் இடி மின்னல் தாக்கத்தில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.முள்ளியவளை பிரதேசத்தில் வீசிய கடும் காற்றினால் தென்னை மரங்கள் சாய்ந்துள்ளன.

குறித்த பகுதியில் வயோதிப தாயார் ஒருவரின் காணிக்குள் நின்ற தென்னை மரம் ஒன்று மலசலகூடத்தில் வீழ்ந்து மலசலகூடம் கூரை முற்றாக சேதமடைந்துள்ளது.

கணுக்கேணி கிழக்கு பகுதியிலுள்ள பனை ஓலை வீடு ஒன்றின் மீது இடி மின்னல் தாக்கி வீடு தீப்பற்றி எரிந்துள்ளது

இதன்போது வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளார்கள். வீட்டின் கூரை தீப்பற்றி எரிந்த வேளை அயலவர்களின் உதவியுடன் அதனை அணைத்துள்ளார்கள். சம்பவம் அறிந்து வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினர் குறித்த வீட்டிற்கு தறப்பாள் கொடுத்து உதவியுள்ளார்கள்.(2-281)

# பார்த்தீனியச் செடியின் பரம்பல் வவுனியாவில் அதிகரிப்பு

## அழித்தொழிக்க நடவடிக்கை எடுங்கள்

(பனிக்கன் குளம்)

வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் பார்த்தீனியச் செடியின் பரம்பல் அதிகமாகக் காணப்படுகின்றது. இதனை அழித்தொழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பாடசாலைகள் செல்லும் வீதிகள், பிரதான வீதிகள், குளக்கட்டுப்பகுதிகள், கோவில்கள், வழிபாட்டுத்தலங்கள் போன்ற மிகவும் முக்கியமாக மக்கள் ஒன்று கூடும் இடங்களிலும் இச் செடியின் பரம்பலைக் காணக்கூடியதாக உள்ளது. இதனைக்கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த காலங்களில் அதிக முக்கியத்துவம் வழங்கி பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்த பல நடவடிக்கையை மேற்கொண்டுள்ள வடமாகாண சபை இவ்விடயத்தில் தற்போது கவனமற்றுள்ளதைக் காணக் கூடியதாக இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பல பகுதிகளிலும் பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு விழிப்புணர்வு விளம்பரப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்ட போதிலும் அதனைக் கட்டுப்படுத்தி அழித்தொழிப்பதற்கு போதியளவில் முக்கியத்துவம் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன் பார்த்தீனியம் அதிகம் காணப்படும் இடங்களை அப்பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச்சங்கம், பொது அமைப்புக்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள், பாடசாலைச்சமூகம் ஒன்றிணைந்து அழித்தொழிப்பதற்கு முன்வர வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2-281)

# இளைஞர் கூட்டுறவுச்சங்க நிர்வாகத் தெரிவு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கூட்டுறவு சங்க நிர்வாக தெரிவு அண்மையில் மாங்குளம் கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இளைஞர்களின் சுய தொழில் முயற்சிக்கான பயிற்சிகள் மற்றும் கடன்களை வழங்கும் நோக்கோடு இயங்கிவருகின்ற முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கூட்டுறவு சங்க நிர்வாக தெரிவு முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கூட்டுறவு சங்க முகாமையாளர் செல்வி ஜே.யூட்பிறீடா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக திருமதி கு.சறோயா,உப தலைவராக ச.தவசீலன், செயலாளராக, செல்வி ஜே.யூட்பிறீடா உப செயலாளராக செ.சுஜிதரன், பொருளாளராக எஸ் ஜெனகன், உறுப்பினர்களாக ஏ. விஜிதரன். ரி.இறதீசன். பி. பேரின்பராசா. சங்கீதன். நிசாக். எஸ்.கஸ்தூரி, எஸ்.திருச்செல்வி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு கூட்டுறவு உதவி ஆணையாளர், அலுவலக உத்தியோகத்தர்,தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட உதவிப்பணிப்பாளர் திருமதி கு.சறோயா மற்றும் பிரதேச இளைஞர் கூட்டுறவு சங்க நிர்வாக உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-281)

# மன்னார் மடு திருத்தலத்தில் இந்திய அரசின் நிதியுதவியில் யாத்திரிகர்களுக்கு தற்காலிக வீடுகள்

(மடு)

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் மன்னார் மடு திருத்தலம் அமைந்திருக்கும் பகுதியில் யாத்திரிகர்களுக்கான தற்காலிக வீடுகள் அமைப்பது தொடர்பாக உயர் மட்ட கலந்துரையாடல் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குறித்த உயர்மட்ட கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன் போது மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ் பிள்ளை, கிறிஸ்தவ மத விவகார அமைச்சின் பணிப்பாளர் எம்.குனவர்தன,சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர்,இந்திய துணைத் தூதரகத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் டி.சி.மஞ்சுநாத்,மடு பிரதேசச் செயலாளர் வி.ஜெயகரன். மன்னார் உதவி திட்டமிடல் பணிப்பாளர் எச்.ஜே.றொசன் குரூஸ் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம் பெற்ற குறித்த உயர் மட்ட கலந்துரையாடலின் போது இந்திய அரசாங்கம் வழங்கும் 300 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மடு திருத்தலத்துக்கு வரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு யாத்திரிகர்களுக்கான 300 தற்காலிக வீடுகள் அமைப்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அதனைத்தொடர்ந்து 300 வீடுகள் அமைக்கப்படவுள்ள இடத்தினை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையிலான குறித்த குழுவினர்நேரடியாகசென்றுபார்வையிட்டனர்.

இறுதியாக குறித்த வீட்டு திட்டம் அமைக்கும் பணிகளை ஆரம்பிக்கும் வகையில் எதிர்வரும் யூன் மாதம் 1 ஆம் திகதி அடிக்கல் நாட்டி வீட்டுத்திட்டத்தை ஆம்பிப்பதாகவும்,அதற்கான துரித நடவடிக்கைகளை உரிய திணைக்களங்கள் முன்னெடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# பொங்கல் உற்சவம்

பச்சிலைப்பள்ளி முகாவில் திரியாய் அம்மான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பகல், இரவு அபிஷேக ஆராதனைகள்நடைபெறும்.

இரவு காவடி, பாற்செம்பு, பறவைக் காவடிகள் என்பன நடைபெறும். (2-60)

# மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்



(குருமன்காடு)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் வறுமைக்கோட்டிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியாவிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் இவ் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. வடக்கு மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசாவின் 2018 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான 868, 000 ரூபா மூலதன நன்கொடை நிதியில் இருந்து போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், பெண் தலைமைக் குடும்பங்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 40 பேருக்கு துவிச்சக்கரவண்டிகள், தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன், பிரதேச சபை உறுப்பினர்களான சிவராஜா, ரமணி மற்றும் தொழில்திணைக்கள மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# தென்னை மரங்களில் செவ்வண்டின் தாக்கம் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தென்னைச் செய்கையாளர்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தென்னை மரங்களில் செவ்வண்டின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனைத்தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தென்னைச்செய்கையாளர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வைத்தொடர்ந்து யுத்தத்தினால் தென்னைச் செய்கை முழுமையாக அழிவடைந்த நிலையில் தற்போது தென்னை மீள்நடுகை செய்யப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, புதுக்குடியிருப்பு, விசுவமடு, உடையார்கட்டு ஆகிய பிரதேசங்களில் தென்னை மீள் நடுகை மேறகொள்ளப்பட்டு வருகின்றது. இந் நிலையில் தென்னைப் பயிர்களில் செவ்வண்டின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது. இதனால் பெருமளவான தென்னை மரங்கள் அழிக்கப்படுகின்றன எனவும் இதனைக்கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தென்னைச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் தெங்கு அபிவிருத்திச்சபையின் அலுவலகம் இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்படவில்லை எனவும் இதனை முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கும் போது அதன் மூலம் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)




# உப தபாலகத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் உள்ள உபதபாலகம் இதுவரை ஆரம்பிக்கப்படாமையினால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளுக்கு யாழ்.தென்மராட்சி எழுதுமட்டுவாழ் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

முகமாலை பகுதியில் இயங்கி வந்த முகமாலை உப தபாலகம் கடந்த 2009 ஆம் ஆண்டின் பின்னர் இதுவரை இயங்காத நிலை காணப்படுகின்றது. இதனால் இப்பகுதி மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு தென்மராட்சி எழுதுமட்டுவாழ் ஆகிய பிரதேசங்களுக்கே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக முகமாலைப்பகுதியில் இருந்து சுமார் எண்பதிற்கும் மேற்பட்டவர்கள் முகமாலை உப தபாலகத்தில் பெற்றுக்கொள்ளவேண்டிய மாதாந்த உதவிப்பணக்கொடுப்பனவு தொகையை பெற்றுக்கொள்வதற்கு அதிக பணம் செலவு செய்து எழுதுமட்டுவாழ் செல்லவேண்டியுள்ளது. எனவே குறித்த தபாலகத்தை உரிய இடத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# புளியங்குளம் மாதிரி கிராமத்தில் மொழியுரிமை மீறப்பட்டு சிங்கள மயமாக்கல்

## மக்கள் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வவுனியா, புளியங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி கிராமத்தில் மொழியுரிமை மீறப்பட்டு சிங்களமயமாக்கல் இடம்பெறுவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி வீடமைப்பு நிர்மாண அமைச்சர் சஜித் பிரேமதாசாவினால் வவுனியா புளியங்குளம் பகுதியில் மாதிரி வீட்டுத் திட்டம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. "பாரதி கோட்டம்" என்ற பெயரில் திறந்து வைக்கப்பட்ட குறித்த மாதிரி கிராமத்தில் நினைவுக்கல் ஒன்றும் நாட்டப்பட்டுள்ளது.




குறித்த நினைவுக் கல்லடியில் சந்திர வட்டக்கல் போன்ற வடிவம் பதிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த நினைவுக் கல்லில் உள்ள எழுத்துக்கள் தமிழ் மொழி மூலமான அர்த்தத்தின் பிரகாரம் அமையவில்லை என்று அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீட்டுத்திட்ட செயற்றிட்டமானது "கம் உதாவ" மற்றும் "செமட்ட செவண" என்ற பெயரிலேயே அமைக்கப்பட்டு வருகிறது. இதன் தமிழ் அர்த்தம் முறையே "கிராமசக்தி" மற்றும் "அனைவருக்கும் நிழல்" என்றவாறாக அமைய வேண்டும். ஆனால் இங்கு சிங்கள மொழி மூலமான அர்த்தத்தையே பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் குறித்த கிராமத்தின் வீடுகளுக்கு பொருத்தப்பட்டுள்ள வீட்டு இலக்கத் தகட்டிலும் சிங்கள மொழியே காணப்படுகிறது. இது அப்பகுதியில் வாழும் தமிழ் மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், சந்திர வட்டக்கல் என்பது பௌத்த மதத்தின் அடையாளங்களில் ஒன்றாக காணப்படுகிறது. இதனை தமிழர் வாழும் பகுதியில் ஏன் அமைக்கவேண்டும் என்ற கேள்வியையும் மக்கள் எழுப்பியுள்ளனர்.

அரசாங்கம் நல்லிணக்கம் பேசிக்கொண்டு தமிழர் பகுதியில் பௌத்த மயமாக்கல் மற்றும் சிங்களமயமாக்கல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கிராமத்தில் 23 வீடுகள் வீடமைப்பு அதிகார சபை யின் 90 வீத நிதியுதவியுடனும் பொது மக்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# வர்த்தக நிலையம் உடைத்து திருட்டு

(பனிக்கன்குளம்)

வவுனியா புகையிரத நிலைய வீதியிலுள்ள வர்த்தக நிலையத்தை உடைத்து திருட்டு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

வவுனியா புகையிரத நிலைய வீதியிலுள்ள புகையிரதக் கடவைக்கு அருகிலுள்ள வர்த்தக நிலையத்தில் கடந்த 21 ஆம் திகதி இரவு திருட்டுப்போயுள்ளதாக வர்த்தக நிலைய உரிமையாளர் தெரிவித்துள்ளார். வர்த்தக நிலையத்தை திறப்பதற்குச் சென்றபோதே திருடப்பட்டுள்ளது தெரியவந்துள்ளதாகவும் குறித்த வர்த்தக நிலையத்தில் கோர்லீப், மீள் நிரப்பு அட்டைகள், சிறுதொகைப்பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-281)

# காற்றினால் வீடுகள் சேதமடைந்த குடும்பங்களுக்கு தறப்பாள்கள்

(முல்லைத்தீவு)



புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த வாரம் வீசிய கடும் காற்றினால் வீடுகள் சேதமடைந்த இரண்டு குடும்பங்களுக்கு தறப்பாள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் கடந்த வாரம் வீசிய கடும் காற்றினால் இரண்டு குடும்பங்களின் வீடுகள் சேதமடைந்துள்ளன. இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு மாவட்ட கிளையினர் நேரில் சென்று பார்வையிட்டு விபரம்திரட்டியுள்ளதுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினரும் விபரங்களை திரட்டியுள்ளார்கள். இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த இரண்டு குடும்பங்களு க்கும் கிராம சேவகர் முன்னிலை யில் தறப்பாள்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (2)

# பனை தென்னை வள உற்பத்திகளின் அபிவிருத்தி வேலைகளுக்கு நிதியொடுக்கீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பனை தென்னை வளக்கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்தவும் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையிலும் தேசிய நல்லிணக்க அமைச்சினூடாக 27.20 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி,பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேசங்களில் கூடுதலான குடும்பங்கள் பனைசார் உற்பத்தி பொருட்களின் மூலம் வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இவர்களது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் வகையில் பல்வேறு அபிவிருத்திச்செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கையையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தேசிய நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவஞானசோதியிடம் நேரடியாக சென்று முன்வைத்த கோரிக்கையையடுத்து பனை வெல்லம் தயாரித்தல் மற்றும் போத்தலில் கள் அடைப்பதற்கான செயற்றிட்டங்கள், அதற்கான உபகரணங்கள் என்பவற்றுக்காக மேற்படி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதாவது கிளிநொச்சி,கரைச்சி பனை தென்னை வளக் கூட்டுறவுச்சங்கத்திற்கு 10.20 மில்லியன் ரூபாவும் பூநகரி பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 5 மில்லியன் ரூபாவும் பளை பனை தென்னை வளக்கூட்டுறவுச் சங்கத்திற்கு 11 மில்லியன் ரூபாவும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (2-315)

# கலைத்தரிசனம்





## கலைவாருதி மாணிக்கம் ஏரம்பு அவர்களுடனான சந்திப்பு

1962 இல் "சீதன ஒழிப்பு" எனும் சமூக நாடகத்தில் துணை நடிகராக நடிக்கத் தொடங்கியது முதல் தமது கலைப் பயணத்தை ஆரம்பித்தார். 1994 இல் உயிர்ப்பூ, 2007 இல் கடலோரக் காற்று, 2003 இல் அம்மா நலமா ஆகிய முழு நீள எழுச்சித் திரைப்படங்களில் நடித்து தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தார். 1998 இல் சண்டியன் ஜேசிக்குறு தெருவெளி நாடகத்தில் சண்டியன் ஜேசிக்குறுவாக 1500 தடவைகளுக்கு மேல் நடித்தார். இவர் திரைப்படம், குறும்படம், ஆவணப்படம், பாடல், நடிப்பு, நெறியாள்கை போன்ற துறைகளிலும் சிறந்து விளங்குகின்றார். இவரின் குறும்படங்களான பத்து நிமிடங்கள், ஆரடித்து நீ அழுகிறாய், துலைக்கோ போறியள், கருவறைத் தோழன், தாத்தா என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவர் 2018 இல் வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் முதலமைச்சர் விருதையும் 2017 இல் யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பேரவையினால் யாழ் முத்து விருதையும், 1998, 2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனினால் இவரின் கலைப்பணிக்காக பரிசு வழங்கப்பட்டன. 1942.04.23 ஆம் திகதி சங்கானை, வட்டுக்கோட்டையில் பிறந்த கலை வாருதி மாணிக்கம் ஏரம்பு அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது.

**❖ தாங்கள் திரைப்படம், குறும்படம், ஆவணப்படம், தெருவெளி நாடகம், வில்லிசை, நெறியாள்கை எனப் பல்துறைகளில் சிறந்து விளங்கும் தாங்கள் கலைத்துறைக்குள் எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது?**

என்னுடைய பரம்பரையில் சித்தப்பா, அத்தான், பேரன், மாமா ஆகியோர் மிகச் சிறந்த அண்ணாவிமார்களாகத் திகழ்ந்தார்கள். எனது பேரன் கந்தப்பு அண்ணவியார் இராம நாடகங்களைப் பயிற்றுவித்து வந்தார். 1960 ஆம் ஆண்டு அப்போது எனக்கு 18 வயது. அவருடைய இந்த நாடகத்தில் முதல்முதலாக வரதர் பாத்திரத்தை ஏற்று நடித்தேன். அந்தக்காலத்தில் நாடக எழுத்துருக்கள் எனது பேரன் கந்தப்பு அண்ணாவியாரிடம் ஓலைச்சுவடியில்தான் எழுதப்பட்டு இருந்தது. படிப்பதற்கு மிகவும் சிரமம். ஆனாலும் நாடகத்தில் ஏற்பட்ட ஆர்வத்தாலும் சமூகத்திற்கு நல்லது சொல்ல வேண்டும் என்பதற்காகவும் நாடகத்தில் நடித்தேன். பின்னர் 1965 இல் காத்தவராயன் சிந்து நடைக்கூத்துக்களில் சிவனாக, காத்தானாக நடித்தேன். பவளக்கொடி, சத்தியவான் சாவித்திரி, அரச நாடகங்களான சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்றவற்றிலும் மேடை நாடகங்களான கசந்த வாழ்வு, மின்னல்கொடி, முல்லை நாட்டு இளவரசி, சீதன ஒழிப்பு போன்ற நாடகங்களிலும் நடித்தேன். அராலி வடக்கு பாரதி சனசமூக நிலையத்தின், ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பாடல் போட்டி வைத்தார்கள். அதில் 32 பேர்கள் கலந்து கொண்டோம். அதில் எனக்குத்தான் முதலாமிடம் கிடைத்தது. இதற்குரிய பரிசை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமிர்தலிங்கத்தின் துணைவியார் மங்கையற்கரசி வழங்கி வைத்தார். 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கலைப்பண்பாட்டுப் பேரவையினால் வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு பிரதேசக் கலைஞர்களைத் தெரிவு செய்து தமது காரியாலயமான கோண்டாவிலுக்கு வரச் சொன்னார்கள். நானும் போனேன். அங்கே எனக்கு மூன்று பாத்திரங்கள் தந்தார்கள். நான் சிறப்பாக நடித்துக் காட்டினேன். அவர்களுக்கும் பிடித்து விட்டது. பின்னர் 1995 ஆம் ஆண்டு வன்னிக்கு இடம்பெயர்ந்து போனேன். அங்கு எனக்கு கலைக்கான களம் அதிகமாகவிருந்தது.

**❖ தாங்கள் ஈழத்தில் முழுநீள எழுச்சித் திரைப்படங்களில் நடித்து, தேசியத் தலைவரின் கைகளினால் பரிசுகளைப் பெற வைத்தது. தாங்கள் நடித்த முழுநீளத் திரைப்படங்கள் பற்றி...**

1994இல் உயிர்ப்பூ. இதில் சம் மாட்டியாக நடித்தேன். 2002 இல் கடலோரக் காற்று. இதிலும் சம்மாட்டியாக நடித்தேன். 2003 இல் அம்மா நலமா? இதில் தமயனாக நடித்தேன். 2006 இல் குருதிச் சின்னம். இதில் பொது மகனாக நடித்தேன். 2007 இல் எல்லாளன். இதில் பொது மகனாக நடித்தேன். இவை முழுநீள எழுச்சித் திரைப்படங்களாகும். 2016இல் செம்புலம். இதில் தகப்பனாக நடித்தேன். 2016 இல் பனைமரக்காடு. இதில் முதலாளியாக நடித்தேன். 2016 இல் காதல் கனவு. இதில் பொது மகனாக நடித்தேன்.

**❖ தாங்கள் நடித்த முழுநீளத் திரைப்படங்களில் அம்மா நலமா? மிகவும் பேசப்பட்ட ஒரு படம். அந்தப் படத்தின் அனுபவத்தைப் பற்றிக் கூறுங்கள்?**

இந்தப் படத்தின் பிரதான பாத்திரம் தாய். இந்தப் பாத்திரத்தின் தமயனாக நடித்தேன். இந்தத் தாய்க்கு இரண்டு ஆண் போராளிகள். அவர்கள் போராடிக் கொண்டிருக்கும் போது தந்தையார் இறந்து விடுவார். அந்தச் செய்தியை இருவருக்கும் அறிவிக்க அவர்கள் களமுனையிலிருந்து வந்து கொண்டிருக்கும் போது இடையில் ஒரு மகன் வீரச்சாவைத் தழுவி விடுவார். தாய் மகன்கள் வருவார்கள் என்று பார்த்துக்கொண்டிருக்க மகனின் இறந்த உடல்தான் வரும். மட்டக்களப்பிலிருந்து அடுத்த மகனாவது உயிரோடு வந்து தனது தந்தையின் உடலைப் பார்ப்பான் என்றிருக்க அந்த மகனும் வீரச்சாவடைந்து விடுகிறான். இருவரும் தந்தையின் உடலைப் பார்க்கவில்லை. எப்படி ஒரு தாயால் இந்தக் காட்சியை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். அந்தக் காட்சியைப் பார்த்து கண்கலங்காதவர்கள் என்று யாரும் இல்லை. நெஞ்சுருக்கும் காட்சி, அற்புதமான படம். இந்தப்படத்தில் அம்மா வின் வீடு நாற்சதுர வீடு. இந்தக் காட்சியை எடுப்பதற்காக எனது நண்பரின் வீடான அராலிக்கு வந்து எடுத்தோம். அரைவாசிக் காட்சிக்கு மேல் இங்குதான் எடுத்தோம். "அம்மா நலமா" திரைப்படம் மிகவும் அற்புதமானதும் மண்ணின் விடுதலைக் கான பங்களிப்பையும் எடுத்தியம்பும் படம்.

**❖ தாங்கள் பல குறும்படங்களிலும் நடித்துள்ளீர்கள். பத்து நிமிடங்கள் என்ற குறும்படத்தின் இயக்குநராகவும் இருந்துள்ளீர்கள். தாங்கள் நடித்த குறும்படங்கள் பற்றி...**

2000- "பத்து நிமிடங்கள்" என்ற குறும்படத்தை இயக்கி இருந்தேன். இந்தப் படத்தில் பொதுமகனாகவும் நடித்துள்ளேன். பத்து நிமிடத்திற்குள் இராணுவ காவலரண்களை கடந்து புலிகள் தமது காவலரண்களுக்கு வரவேண்டும் என்பதை இப்படம் விளக்குது. 2003 இல் ஆரடித்து நீ அழுதாய். இதில் தகப்பனாக நடித்தேன், 2013 இல் துலைக்கோ போறியள். இதில் தகப்பனாக நடித்தேன், 2014 இல் கருவறைத்தோழன். இதிலும் தகப்பனாக நடித்தேன். 2015 இல் தாத்தா படத்தில் பேரனாக நடித்தேன். இப்படங்கள் யாவும் சமூக சிந்தனைகளையும் விதைக்கின்ற படங்களாகும். ஏனைய குறும் படங்கள் போராட்டம், மண்பற்று, மண்ணுக்கான தியாகம் என்பவற்றை எடுத்துக்கூறுகின்ற குறும்படங்களாகும்.

**❖ தாங்கள் வீதி நாடகங்கள் நடிப்பதில் அதிசிறந்த விற்பனராகும். தாங்கள் இதுவரை நடித்த வீதி நாடகங்கள் பற்றிக் கூறுங்கள்?**

1962 இல் சீதன ஒழிப்பு நாடகத்தில் புறோக்கராகவும் 1998 இல் சண்டியன் ஜேசிக்குறு நாடகத்தில் சண்டியன் ஜேசிக்குறுவாகவும் 1998 இல் புயல் ஆடு நாடகத்தில் பணக்காரனாகவும் 2000 இல் நெருப்பு நதியில் நீந்திய மனிதர்கள் நாடகத்தில் அரசனாகவும் 2014 இல் அவலம் நாடகத்தில் தகப்பனாகவும் நடித்தேன். இந்நாடகங்கள் எழுச்சி நாடகங்கள். புதிய போராளிகளை இணைப்பதற்காகவும் மண்ணின் விடுதலையை வலியுறுத்துகின்ற நாடகமாகவும் உள்ளன. இவற்றோடு 1960 இல் ராம நாடகத்தில் வரதனாகவும் 1965 இல் காத்தவராயன் கூத்தில் சிவனாகவும் காத்தானாகவும் 1980 இல் மயான காண்டத்தில் மந்திரியாகவும் 1981 இல் பண்டாரவன்னியன் நாடகத்தில் பண்டார வன்னியனாகவும் 1982 இல் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் சத்தியவானாகவும் 1985 இல் சங்கிலியன் நாடகத்தில் சங்கிலியனாகவும் 1970 இல் முல்லைநாட்டு இளவரசி நாடகத்தில் வில்லனாகவும் 1972 இல் ராச துரோகி நாடகத்தில் வில்லனாகவும் நடித்தேன்.

**❖ தாங்கள் நடித்த தெருவெளி நாடகங்களில் சண்டியன் ஜேசிக்குறு நாடகம் பிரதான நாடகமாகும். இந்நாடகம் 530 நாட்களுக்கு மேலாக நடிக்கப் பெற்ற நாடகம். இந்நாடகத்தின் அனுபவத்தைக் குறிப்பிடுங்கள்?**

இந்நாடகம் புதுவை அன்பனின் நெறியாள்கையில் உருவாக்கம் பெற்றது. இந்நாடகத்தின் பிரதான பாத்திரத்தை நான் நடித்தேன். வன்னியில் பல இடங்களிலும் போடப்பட்ட நாடகம் கிட்டத்தட்ட 530 நாட்களுக்கு மேலாக போடப்பட்ட நாடகம். இந்நாடகத்தைப் பார்த்த எத்தனையோ இளைஞர்கள், யுவதிகள் புதிய போராளிகளாக மாறினார்கள். ஜேசிக்குறு படை எடுத்து வந்த சம்பவத்தை நாடகமாக நடித்தோம். நாடகம் நடந்து கெண்டிருக்கும் போது பார்வையாளர்களுக்குள்ளே இருந்து தான் சண்டியன் ஜேசிக்குறு நான் வருவேன். எல்லோரும் பயந்தே ஓடுவார்கள். ஒரு முறை யோகபுரம் பாடசாலையில் இந்த நாடகத்தைப் போட்டோம். நாடகத்திற்கு மக்களும் நிறையப் பேர் வந்திருந்தார்கள். அப்பொழுது பதற்றமான சூழல் தானே. நான் பாடசாலையின் அரை மதில் இருந்து ஏறிக்குதித்து "டே" என்ற பலத்த தொனியுடன் வந்தன். நான்கு ஆசிரியர்கள் பிடறி அடிபட விழுந்து சிறிது நேரம் அறிவில்லாமல் போய்விட்டார்கள். எல்லோரும் பயந்து போட்டார்கள். ஆயிரத்து 500இற்கு மேற்பட்ட தடவைகள் இந்த நாடகத்தைப் போட்டோம். ஒரு நாளைக்கு எட்டு இடங்களில் போடுவோம். இதுவரை நான் கிட்டத்தட்ட தெருவெளி நாடகங்களில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட தடவைகள் நடித்தேன்.

**❖ கலைத்துறையில் உச்சமாக விளங்கும் தாங்கள் பல்வேறுபட்ட விருதுகளைப் பெற்றுள்ளீர்கள். தாங்கள் இதுவரை பெற்ற விருதுகள் பற்றி...**

2018 இல் வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் "முதலமைச்சர் விருதும்" 2017 இல் யாழ். மாவட்டக்கலை கலாசாரப் பேரவையினால் யாழ். முத்து விருதும். 2015 இல் தாத்தா குறும் படத்தில் நடித்தமைக்கு Baluma hendran Film Festival Vers Award 2014 இல் யோகபுரம் மகாவித்தியாலயத்தால் வாழ்நாள் சாதனையாளர் விருதும் 2014 வலி. மேற்கு பிரதே கலாசார பேரவையினால் கலைவாருதி விருதையும் 2002 இல் AAA movice International நிறுவனத்தினால் Special award Contribution to art and Drama எனும் விருதினையும் 1998, 2000 ஆம் ஆண்டுகாலப்பகுதிகளில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் கைகளினால் இரண்டு தடவைகள் பரிசையும் பெற்றேன்.

**❖ கலையுலக வாழ்வில் தாங்களால் மறக்க முடியாத அனுபவம் ஒன்றை பகிருங்கள்...**

ஒரு முறை முக்கிய கலைஞர்களை தேசியத் தலைவர் சந்தித்தார். அதில் நானும் ஒருவன். அந்த இடத்தில் பிரிகேடியர் பால்ராஜ் அண்ணாவும் தளபதி சூசையும் இருந்தார்கள். எனக்கோ தேசியத் தலைவரைத் தொடவேண்டும் என்று விருப்பம். ஒரு மாதிரி கிட்ட நெருங்கிச் சென்று அவரது முழங்காலைத் தொட்டுக் கும்பிட்டன். அவரும் இரண்டு கைகளால் கும்பிட்டார். அவரைத் தொட்டது இனியில்லை என்ற சந்தோசம். அந்த இடத்தில் சாவு நேர்ந்தாலும் வலு சந்தோசமாகச் செத்திருப்பன். அப்படி மகிழ்ச்சியாக இருந்தது. மற்றது அவரது கைகளினால் கலைப் பணிக்காகப் பரிசு பெற்றது. இவை இரண்டையும் மறக்க முடியாது.

**❖ இறுதியாக நீங்கள் கலையுலகிற்கு மனந்திறந்து கூறுவது...**

நாங்கள் தயாரிக்கின்ற நாடகங்கள் சமூக அக்கறை கொண்டதாக இருக்க வேண்டும். நாடகம் என்பது நடிப்பு. அந்த நடிப்பைச் சரியாக வெளிப்படுத்தும் போது தான் நாம் சொல்ல வந்த விடயம் வாசகரைச் சென்றடையும். சமூக சீர்திருத்தங்களைக் கொடுக்க வேண்டும். கலைஞர்கள் வளர்வதற்கான களத்தை உருவாக்கிக் கொடுக்கவேண்டும். தெரியாத விடயங்களைத் துறைசார்ந்தவர்களிடம் கேட்டுக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# காட்டுப்புலத்தில் இலவச படிப்பகம் ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் - காட்டுப்புலத்தில் வெண்கரம் இலவசப் படிப்பகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு இதற்கான சம்பிரதாய பூர்வ நிகழ்வு இடம்பெற்றது.

வெண்கரம் நிறுவனம் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்களைக் கல்வியில் முன்னேற்றி, அந்தக் கிராமங்களை வலுப்படுத்தும் நோக்கத்துடன் கல்விச் செயற்பாட்டை முதன்மையாகக் கொண்டு சமூகநலச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

பொன்னாலையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட படிப்பகம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக பாண்டவெட்டை மற்றும் காட்டுப்புலத்தில் உள்ள மாணவர்களின் நன்மை கருதி அங்குள்ள கிராமமட்ட அமைப்புக்கள், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களின் அனுசரணையுடன் வெண்கரம் படிப்பகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அளுள்தீபம் சனசமூக நிலையத் தலைவர் எஸ்.ஜங்கரன் தலைமையில் நடைபெற்ற இதன் ஆரம்ப நிகழ்வில், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான சி.இதயகுமாரன், செ.கிருஸ்ணா, வெண்கரம் பிரதான செயற்பாட்டாளர் மு.கோமகன், வலிகாமம் கல்வி வலய தமிழ்பாட ஆசிரிய ஆலோசகரும் வெண்கரம் ஆலோசகருமான திருமதி ச.சுகுணா, காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் எஸ்.சிவானந்தராசா, கிராம சேவையாளர் ஜீவராசா மற்றும் கல்வியியலாளர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (இ-9)

# 1.3 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க பிஸ்கட்டுக்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தங்க பிஸ்கட்டுகள் இரண்டை எடுத்து வந்த பிரித்தானிய பிரஜா உரிமையை கொண்ட இலங்கையர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர். குறித்த நபர் பிரித்தானியவை சேர்ந்த 55 வயதுடையவர் என தெரிவிக்கப் படுகின்றது.

நேற்று அதிகாலை 5.20 மணியளவில் டுபாயில் இருந்து வந்த fly dubai விமான சேவைக்கு சொந்தமான FZ 547 விமானத்தில் குறித்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தார்.

இந்நிலையில் பயணிகள் வருகை தரும் ஒழுங்கின் ஊடாக குறித்த நபர் வருகை தரும்போதே சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபருடைய பணப் பையில் மற்றும் பாதணியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 100 கிராம் எடை கொண்ட இரண்டு தங்க பிஸ்கட்டுக்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்க பிஸ்கட்டுகள் 13 இலட்சம் ரூபா பெறுமதியுடையவை என சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகள் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# தென்மராட்சியில் தமிழமுதம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மண்ணில் இளையோரிடையே இலக்கிய ஆர்வத்தை உண்டு பண்ணும் பொருட்டு, காத்திரமான இலக்கிய நிகழ்வுகளை முன்னெடுத்துவரும் தென்மராட்சி இலக்கிய அணி ஆண்டுதோறும் கம்பன் விழா, வள்ளுவர் விழா, பாரதி விழா என்பவற்றோடு இரண்டு மாதங்களுக்கொரு தடவை தமிழமுதம் என்ற பெயரில் இலக்கிய நிகழ்வுகளை நடத்தி வருகிறது.

அத்தமிழமுதத் தொடரில் பத்தாவது தமிழமுத நிகழ்வு நாளை மறுதினம் 26.05.2018 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானையில் அமைந்துள்ள (கம்பன் கல்லூரி வளாகம்) தென்மராட்சி இலக்கிய அணியின் தமிழ்க்கோட்ட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சாவகச்சேரி தபால் நிலைய தபாலதிபர் அ.இன்பராஜ் தம்பதியர் மங்கல விளக்கேற்றவுள்ளனர்.

இந்நிகழ்விற்கான தலைமை உரையினை யாழ்.பல்கலைக்கழக பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.எஸ்.உதயகுமார் ஆற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து ஜப்பான் கக்சுயின் பல்கலைக்கழக ஓய்வுநிலை ஆய்வு இயல் பேராசிரியை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் "வண்ணக் கோலங்கள்" என்ற பொருளில் எழிலுரை நிகழ்த்தவுள்ளார். அதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக முன்னை நாள் தமிழ்த்துறைத் தலைவரும் வாழ்நாள் பேராசிரியருமான அ.சண்முகதாஸ் நடுவு நிலைமையில் "அறம் நிலைக்க பெரிதும் காரணமாக அமைவது ஆண்களின் அறிவே! பெண்களின் உணர்வே!" என்ற பொருளிலான சிறப்புப் பட்டி மண்டபம் இடம்பெறவுள்ளது. இப்பட்டிமண்டபத்தில் வலம்புரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம், ஆசிரியர் த.நாகேஸ்வரன், ஆசிரியர் அ.வாசுதேவா, ஆசிரியர் செ.செல்வரமணன், ஆசிரியர் க.கருணாகரன், ஆசிரியர் என்.கே.கஜரூபன் ஆகியோர் விவாதிக்கவுள்ளனர். (இ-7)

# ஆலயங்களுக்கு இராணுவம் உதவி




(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள போரால் பாதிக்கப்பட்ட ஆலயங்களின் கட்டுமானப் பணிக்கு உதவும் இராணுவத்தின் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 30 ஆலயங்களுக்கு தலா 20 சீமெந்து பொதிகள் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியால் ஆலய பிரதிநிதிகளிடம் நேற்று யாழ்.வயாவிளான் மத்திய மகா வித்தியாலய முன்றலில் வைத்து வழங்கப்பட்டன.

பாதுகாப்புப் படைகளின் யாழ்.மாவட்ட கட்டளை தலைமையகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட 100 ஆயலங்களின் கட்டுமானப் பணிகளுக்கு சீமெந்து பைக்கற்றுக்கள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத் திட்டத்தின் முதற்கட்ட நிகழ்வு நேற்று ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து குறித்த வேலைத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஏனைய ஆலயங்களுக்கான சீமெந்து பைக்கற்றுக்கள் கட்டம் கட்டமாக எதிர்வரும் தினங்களில் வழங்கி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# சிங்கப்பூர்-இலங்கை இடையே விசேட வர்த்தக ஒப்பந்தம் ஏன்?

## நாடாளுமன்றில் டக்ளஸ் கேள்வி



(கொழும்பு)

இலங்கையிலிருந்து சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்கென விசேட வரி விதிப்புகள் மேற்கொள்ளப்படாதிருக்கும் நிலையில், அந்த நாட்டுடன் விசேட வர்த்தக ஒப்பந்தம் ஒன்றுக்குச் செல்ல வேண்டிய பாரிய அழுத்தங்கள் என்ன என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழான இருகட்டளைகள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரினால் இந்த கட்டளைகள் இந்தச் சபையிலே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இந்த நாட்டில் மிக அண்மைக் காலமாக பெரும் குழப்ப நிலையினைத் தோற்று வித்துள்ள'சிங்கப்பூர் வர்த்தக ஒப்பந்தம்' தொடர்பிலும் எனது கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ள சந்தேகங்கள் இந்த நாட்டிலே மருத்துவ அதிகாரிகள் மத்தியிலும் ஏற்பட்டதனால், கடந்த17ஆம் திகதி மருத்துவர்கள் மேற்கொண்டிருந்த ஒரு நாள் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக இந்த நாட்டிலே வடக்கு, கிழக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலுமுள்ள நோயாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்ததை, பாதிக்கப்பட்டதை எவராலும் மறந்து விட இயலாது.

நோயாளிகளின் தரப்பிலிருந்து சிந்திக்கின்ற எவருக்கும், இந்த பணிப் பகிஷ்கரிப்பினை மேற்கொண்டிருந்த மருத்துவர்கள் மீது கோபம் வரலாம். என்றாலும், எந்த ஒரு விடயம் தொடர்பிலும், உரிய அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடாமல் இத்தகைய சந்தேகங்களை ஏற்படுத்தி விட்டு, அந்த சந்தேகங்களை அடிப்படையாகக் கொண்டு, ஒருதரப்பினர் - அதுவும் மக்களது அன்றாட, அடிப்படை - அதாவது மக்களது உயிருடன் சம்பந்தப்பட்ட தொழிற்றுறை சார்ந்த தரப்பினர் பணிப் பகிஷ்கரிப்பினை மேற்கொண்டால் தான், குறித்த தரப்புகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்கின்ற நிலையை நீங்கள் உருவாக்கி, அதனை ஒரு வழமையாகவே முன்னெடுத்து வருகின்ற நிலையில், இத்தகைய பணிப் பகிஷ்கரிப்புகள் இந்த நாட்டில் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகியுள்ளது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஏற்கனவே 'எட்கா' ஒப்பந்தம் காரணமாக நாட்டில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலையினையும், அதன் காரணமாக எமது மக்கள் சந்தித்திருந்த பல்வேறு பாதிப்புகள் குறித்தும் நாம் மறக்கவில்லை. அந்த நிலையிலிருந்து மீண்டு வரும் நிலையில், இப்போது இன்னொரு குழப்பத்தினையே இந்த சிங்கப்பூர் ஒப்பந்தம் இந்த நாட்டில் ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக மருத்துவர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதன் பின்னர்தான், அது குறித்த தெளிவுபடுத்தல்களை நீங்கள் மேற்கொள்கின்றீர்கள். இந்த நிலையில், ஏன் இதனை முன்கூட்டியே செய்திருக்கக் கூடாது? என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கையிலிருந்து சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்கென விசேட வரி விதிப்புகள்மேற்கொள்ளப்படாதிருக்கும் நிலையில், அந்த நாட்டுடன் விசேட வர்த்தக ஒப்பந்தம் ஒன்றுக்கு செல்ல வேண்டிய பாரிய அழுத்தங்கள் என்ன? என்ற கேள்வியே இன்று பலராலும் முன்வைக்கப்படுகின்றது.

அதேநேரம், மேற்படி ஒப்பந்தத்திற்கு கிடைத்துள்ளதாகக் கூறப்படுகின்ற அமைச்சரவை அனுமதி தொடர்பிலும் சந்தேகங்கள் வெளியிடப்படுகின்றன. மேற்படி ஒப்பந்தம் காரணமாகப் பாதிக்கப்படக் கூடியவர்களாகக் கூறப்படுகின்ற தொழிற்றுறைகள் சார்ந்த தொழிற் சங்கத்தினருக்கோ, கைத்தொழிலாளர்களுக்கோ ஒப்பந்தம் தொடர்பில் அறிவுறுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகின்றது.

எனவே, இத்தகைய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோது, உரிய தரப்பினர் அனைவரும் அறிவுறுத்தப்படவேண்டும் என்ற விடயத்தை நான் மீண்டும் இந்த சபையிலே வலியுறுத்த விரும்புகின்றேன்.

மேலும் இந்த நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்பதற்கு நீங்கள் முயல்வதாகக் கூறுகிறீர்கள். அதற்காக அவசரப்பட்டு மேலும் மேலும் இழப்புகளை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு துணை போகாதீர்கள்.


இன்று இந்த நாட்டில் அபிவிருத்தி என்ற பெயரில் பல அமைச்சுக்கள் இருக்கின்றன. இவற்றில் எத்தனை அமைச்சுக்கள் செயற்பாட்டில் இருக்கின்றன என்ற கேள்வி எமது மக்களிடையே இல்லாமல் இல்லை. வடக்கின் அபிவிருத்திக்கு என்றும் ஓர் அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது. கிழக்கிற்கு தேவையில்லை என நினைத்து விட்டீர்கள்.

மேல் மாகாணத்திற்கும், தென் மாகாணத்திற்கும், வடமேல் மாகாணத்திற்கும் அபிவிருத்தி அமைச்சுக்களை ஏற்படுத்திய நீங்கள், ஏனைய மாகாணங்களில் அபிவிருத்தி தேவையில்லை என்று நினைத்தோ, அல்லது ஏனைய மாகாணங்கள் அனைத்தும் முழுமையான அபிவிருத்திகளை கண்டு விட்டன என நினைத்தோ அவற்றுக்கென அபிவிருத்தி அமைச்சுக்கள் உருவாக்காமல் இருந்துவிட்டு, இப்போது வடக்கு மாகாணத்திற்கும், கண்டி மாவட்டத்திற்கும் உருவாக்கியுள்ளீர்கள். இதனாலாவது ஏதேனும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமா? என்ற கேள்வியும் எமது மக்கள் மத்தியில் இல்லாமல் இல்லை. மத்திய அரசில் ஸ்திரத்தன்மை இன்னமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாரதம்

## தூத்துக்குடியில் ஒரு ஜாலியன் வாலாபாக்!

## பொலிஸார் அராஜகம் குறித்து வைகோ கண்டனம்



(சென்னை)

ஜாலியன் வாலாபாக்கில் பிரிட்டிஷ் இராணுவம் உயிர்களை வேட்டையாடியதைப் போல தமிழக பொலிஸும் மனித உயிர்களைப் பலி வாங்கியுள்ளதுஎன்றுமதிமு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், தூத்துக்குடியில் நாசகார நச்சு ஆலையான ஸ்டெர்லைட் ஆலை தொடங்கப்பட்டதை எதிர்த்து, மீனவர்கள், விவசாயிகள், பொதுநல அமைப்பினர் உட்பட எங்கள் ம.தி.மு.கவும் தொடக்க நாளில் இருந்து இடைவிடாத அறப் போராட்டங்களை நடத்தி வருகின்றோம்.

சென்னை உயர் நீதி மன்றத்தில் நான் வழக்கு தொடுத்து, 1998 செப்டெம்பர் 28 ஆம் திகதி ஆலையை நிரந்தரமாக மூடும் தீர்ப்பு பெற்றபோதும், ஸ்டெர்லைட் நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து, 2013 பெப்ரவரி 2 இல் ஆலையை இயக்கும் தீர்ப்பைப் பெற்றது.

உச்ச நீதிமன்றம் தன் தீர்ப்பில், சுற்றுச் சூழல் பாதிக்கப்படுமானால், எதிர்காலத்தில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று குறிப்பிட்டது.

ஸ்டெர்லைட் ஆலை நச்சு வாயுவினால் புற்றுநோய், நுரையீரல் தொற்றுநோய், சரும நோய் இவற்றால் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். விவசாயமும் அடியோடு நாசமாகும் நிலை ஏற்பட்டதால், இன்னும் இரண்டு மடங்கு ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்திற்கு எதிராக குமரெட்டியாபுரம், தெற்கு வீரபாண்டியபுரம், சில்வர்புரம் மற்றும் தூத்துக்குடி மாநகர மக்கள் கடந்த 100 நாட்களாக போராடி வந்தனர். வணிகப் பெருமக்கள் இருமுறை கடையடைப்பு செய்தனர்.

தமிழக அரசு பல மாவட்டங்களிலிருந்து பொலிஸாரை திரட்டி ஸ்டெர்லைட்டைப் பாதுகாக்கவும், பொதுமக்கள் போராட்டத்தை அடக்கு முறையால் நசுக்கவும் முற்பட்டதன் விளைவுதான் 11 பேர் உயிரிழக்கவும் பலர் காயமடையவும் காரணம்.

"தூத்துக்குடி திரேஸ்புரத்தில் பிற்பகலில் பொலிஸார் திடீரென்று பிரவேசித்து நான்கு பேரை சுட்டுக்கொன்றுள்ளனர் என்றும், ஒருவர் தலை வெடித்து மூளை சிதறி உள்ளது என்றும், இதில் ஒரு பெண்ணும் கொல்லப்பட்டார் என்றும் செய்தி வந்துள்ளது.

பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு தமிழக அரசும், பொலிஸாரும் தான் பொறுப்பு.

தூத்துக்குடி மாநகரிலும், பக்கத்துக் கிராமங்களிலும் காவல்துறையினர் பல இடங்களில் வீடு வீடாகச் சென்று பொதுமக்களைக் கடுமையாகத் தாக்குவதும் மிரட்டுவதும் தொடர்கின்றது.

அறப்போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் சாதி, மதம், கட்சி எல்லைகளைக் கடந்து பங்கேற்றனர். குறிப்பாக ஏராளமான தாய்மார்கள் கைக்குழந்தைகளோடு பங்கேற்றனர்.

ஜாலியன் வாலாபாக்கில் பிரிட்டிஷ் இராணுவம் உயிர்களை வேட்டையாடியதைப் போல தமிழக பொலிஸாரும் மனித உயிர்களைப் பலி வாங்கயுள்ளனர்.

உயிர்ப்பலி வாங்கிய துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணமான பொலிஸார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்குப் பதிந்து கைது செய்யப்பட வேண்டும். தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட கொடிய அடக்கு முறையை நடத்தி வரும் பொலிஸாரின் அராஜகம் குறித்து தேசிய மனிதவுரிமை ஆணையமும், மாநில மனிதவுரிமை ஆணையமும் இணைந்து தாங்களாகவே விசாரணையை நடத்த முன்வர வேண்டும்.


உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு 20 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகையும், படுகாயமுற்றவர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகையும் தமிழக அரசு வழங்க வேண்டும்.

தமிழக அரசு ஏவிய பொலிஸாரின்பாசிச அடக்குமுறையை எதிர்த்து நீதிகேட்டு அறப்போராட்டம் இன்னும் வீறு கொண்டு எழும் என்பதையும், மக்கள் உரிமைக் கிளர்ச்சியை நசுக்க முடியாது என்று வைகோ தெரிவித்துள்ளார். (இ-7)

## பலியானோர் உடல்

## தூத்துக்குடி வைத்





(தூத்துக்குடி)

ஸ்டெர்லைட் ஆலை மூடப்படும் என அரசு அறிவித்தால்தான் பலியானவர்களின் உடல்களை வாங்குவோம் என்று தூத்துக்குடி அரசு வைத்தியசாலையில் பொதுமக்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடு

## ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்திற்கு அடிபணியாததால் தமிழர் படுகொலை

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு



(டில்லி)

ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்திற்கு அடிபணிய மறுத்ததால் தூத்துக்குடியில் நடந்த போராட்டத்தில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதாக ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டனர். தடியடி நடத்தியும் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் போராட்டக்காரர்களை விரட்டியடித்தனர். இந்த தாக்குதல்களில் 11 பேர் பலியாகியுள்ளனர்.



இந்நிலையில், பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதற்கு பல்வேறு அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவத்திற்கு பொறுப்பான அதிகாரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் பொலிஸ் துப்பாக்கிச் சூடு நடத்தியதை கண்டித்து காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அதில் 'தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். ஏனென்றால் அவர்கள் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்திற்கு அடிபணிய மறுக்கின்றனர்.

ஆர்.எஸ்.எஸ். மற்றும் மோடியின் தோட்டாக்களால் ஒருபோதும் தமிழ் மக்களின் உணர்வுகளை நசுக்க முடியாது. தமிழ் சகோதர சகோதரிகளே, நாங்கள் உங்களுடன் இருக்கிறோம் என ராகுல் டுவிட் செய்துள்ளார். (இ-7)

## தூத்துக்குடியில் 144 தடை உத்தரவு 25ஆம் திகதி வரையும் நீடிப்பு

(தூத்துக்குடி)

தூத்துக்குடி மற்றும் திருச்செந்தூர் வட்டத்தில் 144 தடை உத்தரவு நாளை 25 ஆம் திகதி வரையும் நீட்டிக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியாளர் வெங்கடேஷ் அறிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டம் நடைபெறுவதைத் தொடர்ந்து கடந்த 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நடந்த போராட்டம் கலவரமாக மாறியது.

11 பேர் துப்பாக்கிக் குண்டுக்கு பலியானதால் தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. இதைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சியாளர் வெங்கடேஷ் 144 தடை உத்தரவை மேலும் நீடித்து நேற்று ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது.

தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளை கருத்தில் கொண்டு சட்டம்-ஒழுங்கை பராமரித்திட நேற்று (23 ஆம் திகதி)




ஒரு மணி முதல் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி வரை குற்றவியல் நடைமுறை சட்டம் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த தடை உத்தரவு தூத்துக்குடி, திருச்செந்தூர் வட்டத்தைச் சேர்ந்த பகுதிகள் மற்றும் வேம்பார், குளத்தூர், ஆறுமுகமங்கலம், வேடநத்தம், ஓட்டப்பிடாரம், எப்போதும் வென்றான் ஆகிய குறுவட்டங்களுக்குட்பட்ட பகுதிகள் முழுவதற்கும் அமுல்படுத்தி உத்தரவிடப்படுகிறது.

இதன்படி 5 மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடுவதற்கும், ஊர்வலம் செல்வதற்கும், பொதுக்கூட்டம் நடத்துவதற்கும், சைக்கிள் மற்றும் வாகனங்களில் பேரணியாக செல்வதற்கும், அரிவாள், கம்பு உள்பட அபாயகரமான பொருட்களை கொண்டு செல்வதற்கும், சாதி கொடிக்கம்புகள் கொண்டு செல்வதற்கும், வாடகை வாகனங்கள் மூலம் ஆர்ப்பாட்டத்திற்கு பொதுமக்களை அழைத்து செல்வதற்கும் 144 பிரிவின் கீழ் தடை விதிக்கப்படுகிறது.

இந்த தடை உத்தரவு பாடசாலை, கல்லூரி வாகனங்கள், தினசரி வாகனங்கள், அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு செல்லும் வாகன்ங்கள், சுற்றுலாவிற்காக வரும் வாகனங்கள், சரக்கு வாகனங்கள், ஆம்னி பேருந்துகள் ஆகியவற்றிற்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது என அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-7)



# வெளிநாடு



# ...ல்களை வாங்க மறுப்பு; ...வைத்தியசாலை முற்றுகை



பட்டனர்

தூத்துக்குடி துப்பாக்கி சூட்டில் 11 பேர் பலியானார்கள். 100 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பலியான 11 பேரின் உடல்களும் தூத்துக்குடி அரச வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை கூடத்தில் வைக்கப்பட்டு உள்ளது. பலியானவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் நேற்றுக் காலையில் தூத்துக்குடி அரச வைத்தியசாலைக்கு திரண்டு வந்தனர்.

அவர்கள் வைத்தியசாலையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அரசை கண்டித்தும் கோஷம் எழுப்பினர். ஏற்கெனவே தூத்துக்குடி அரச வைத்தியசாலையில் ஏராளமான பொலிஸார் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்தனர். பொதுமக்கள் அதிகளவில் கூடியதால் அங்கு கூடுதல் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். இதனால் அங்கு பதட்டம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே ஸ்டெர்லைட் ஆலை மூடப்படும் என அரசு அறிவித்தால்தான் பலியானவர்களின் உடல்களை வாங்குவோம் என்று அவர்களது உறவினர்கள் அறிவித்தனர். இது தொடர்பாக பொதுமக்கள் கூறுகையில், ஸ்டெர்லைட் ஆலையை மூட எழுத்து பூர்வமாக அரசு உத்தரவாதம் கொடுக்க வேண்டும். துப்பாக்கி சூடு நடத்திய காவலர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்றனர்.

தொடர்ந்து அரசை கண்டித்தும், பொலிஸாரை கண்டித்தும் கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். (இ-7)

# பயங்கரவாதிகளின் தாக்குதலில் படையினர் 26 பேர் உயிரிழப்பு!

## சிரியாவில் சம்பவம்

(டமாஸ்கஸ்)

ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டுத் தாக்குதலில் சிரியா படையினர் 26 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஜிஹாதி குழுவினர் நாட்டின் பல பகுதிகளை கையகப்படுத்தி, தங்களது ஆதிக்கத்தின்கீழ் வைத்து நிர்வகித்து வருகின்றனர்.

இதுதவிர, ஐ.எஸ். பயங்கரவாதிகளும் சில பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.

இந்த குழுக்களையும் வேட்டையாட அமெரிக்க விமானப்படையின் துணையுடன் அந்நாட்டு முப்படைகளும் தீவிரமாக போரிட்டு வருகின்றன.

இதற்கிடையே, கடந்த சில தினங்களுக்கு முன் நடைபெற்ற சண்டையில் கூட்டுப்படையினர் ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் இருந்து கடைசி நகரையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், சிரியாவின் படியா பகுதியில் சென்ற படையினர் மீது ஐ.எஸ். பயங்கரவாதிகள் கார் குண்டு மூலம் தாக்குதல் நடத்தினர். இந்த வெடிகுண்டு தாக்குதலில் படையினர் 26 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும், பலர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் சிரியாவிலுள்ள மனிதவுரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. (இ-7)



# 2ஆவது நாளாகவும் பதற்றம் நீடிப்பு பொலிஸ் வாகனங்களுக்குத் தீ வைப்பு

(தூத்துக்குடி)

தூத்துக்குடி அரசு வைத்தியசாலை அருகே நேற்று 2 பொலிஸ் வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டது. 2 ஆவது நாளாக அங்கு பதட்டம் நிலவி வருகிறது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் போராட்டம் தீவிரமடைந்த நிலையில், போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியது.

இந்தச் சம்பவம் நாடெங்கும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்நிலையில், ஸ்டெர்லைட் ஆலையின் 2 ஆவது பிரிவின் விரிவாக்கத்திற்கு எதிராக பாத்திமா என்பவர் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடர்ந்தார். ஆலை விரிவாக்கம் தொடர்பாக பொதுமக்களின் கருத்தையும் நிர்வாகம் கேட்கவில்லை என்றும் மனுவில் கூறியிருந்தார்.

இவ்வழக்கின் வாதப்பிரதிவாதங்கள் முடிவடைந்த நிலையில், ஸ்டெர்லைட் ஆலையின் விரிவாக்கப் பணிகளை நிறுத்தும்படி நீதிபதிகள் சுந்தர், அனிதா சுமந்த் நேற்று உத்தரவிட்டனர். மேலும், ஆலையை நடத்துவதற்காக சுற்றுச்சூழல் அனுமதி கோரும் வேதாந்தா நிறுவனத்தின் மனுவை மத்திய அரசு பிரிசீலித்து 4 மாதங்களில் முடிவு செய்யவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தூத்துக்குடியில் செயற்பட்டு வரும் ஸ்டெர்லைட் ஆலையை மூட வலியுறுத்தி 18 இற்கும் மேற்பட்ட கிராம மக்கள், நேற்று முன்தினம் 100 ஆவது நாளாக போராட் டத்தில் ஈடுபட்டனர். பொலிஸின் தடுப்பை மீறி, போராட்டத்தின் போது ஆயிரக்கணக்கானோர் பேரணியாக சென்றனர். அப்போது பொலிஸாருக்கும், மக்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. பின்னர் தடையை மீறி மக்கள் தூத்துக்குடி ஆட்சியர் அலுவலகத்திற்குள் நுழைந்தனர்.

இதையடுத்து போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்தத் துப்பாக்கிச்சூட்டில் 3 பெண்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். இதற்கு அரசியல் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை நடத்த ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசனை தமிழக அரசு நியமனம் செய்து உள்ளது.

இந்த நிலையில் தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தமிழக அரசுக்கு



தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு தொடர்பாக பொலிஸ் டி.ஜி.பி., தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளது. 2 வாரங்களுக்குள் பதில் அளிக்குமாறு உத்தரவிட்டு உள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கார்த்திக் என்பவர் உயிரிழந்தார். காயமடைந்த பலர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் தூத்துக்குடி அரசு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிச்சூட்டில் பலியானவர்களின் உடல்களை பிரேத பரிசோதனை செய்ய எதிர்ப்பு தெரிவித்து உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வைத்தியசாலை வளாகத்தில் பொலிஸாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பொதுமக்களை கண்ணீர் புகை குண்டு வீசியும் லேசான தடியடி நடத்தியும் கலைத்தனர்

தூத்துக்குடி அரசு வைத்தியசாலையில் போராட்டம் நடத்தி வருபவர்களிடம் மதுரை டி.ஐ.ஜி. பிரதீப்குமார் பேச்சுவார்த்தை நடத்தினார். தற்போது தூத்துக்குடி கலவரத்தில் உயிரிழந்தோர் உடல்களை பிரேதபரிசோதனை செய்யும் பணி தொடங்கியது.

4 நீதிபதிகள் முன்னிலையில், 6 பேர் கொண்ட மருத்துவக்குழு பிரேத பரிசோதனை நடத்தி வருகிறது.

வைத்தியசாலை வளாகத்தில் போராட்டக்காரர்கள் கல்வீசி தாக்கியதில் பொலிஸாரின் பேருந்து மற்றும் கார் கண்ணாடிகள் உடைந்தன.

இந்த நிலையில் வீதியோரம் நிறுத்தப்பட்டு இருந்த பொலிஸ் வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டு உள்ளது. வாகனங்களுக்கு தீ வைத்தவர்கள் யார் என்று தெரியவில்லை.

ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு பொலிஸார் அமைதி காக்குமாறு வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். (7)

# வருடத்திற்கு 2500 வாய்ப்புற்று நோயாளர்கள் இலங்கையில் புதிதாக இனம் காணப்படுகின்றனர்

(கொழும்பு)

இலங்கையில் ஒரு வருடத்துக்கு 2500 வாய்ப் புற்று நோயாளர்கள் இனங்காணப்படுவதாகவும் இவர்களுக்காக வேண்டி இலங்கை அரசாங்கம் 2 இலட்சத்து 50 ஆயிரம் மில்லியன் ரூபாவினை செலவு செய்து வருவதாக மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பல் மற்றும் முகத்தாடை சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் அனுஷன் மதுஷங்க தெரிவித்தார்.

பல் மற்றும் முகத்தாடை புற்றுநோய் தொடர்பான மாபெரும் இலவச வைத்திய முகாமும், குறித்த நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும் நேற்று முன்தினம் மட்டக்களப்பு வாகனேரியில் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். வாயில் ஏற்படும் புற்றுநோய் தெற்காசிய நாடுகளில் அதிகரித்து வருவதாவும், இந்த நோய்க்கு சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள காலதாமதமாவதால் உலகில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாவும் தெரிவித்தார்.

வாய்ப் புற்றுநோயானது 25 விதமானவை வெளியேயும், 75 விதமானவை உள்ளேயும் காணப்படுகின்றன. இந்த நோயுள்ளவர்கள் மிக இலகுவில் இதனை அடையாளம் கண்டுகொள்ளமாட்டார்கள். இவர்கள் வேறு வைத்திய சிகிச்சையை பெற்றுக் கொள்ள வரும்போதுதான் அவர்களுக்கு வாய்ப் புற்று நோய் இருப்பதை வைத்தியர்கள் மூலம் அறிந்துகொள்கின்றார்கள்.

இவ்வாறு வருகின்றவர்களின் வாய்ப் புற்றுநோயை முற்று முழுதாக இல்லாமல் செய்யமுடியாது, ஓரளவுதான் குணமாக்கலாம். இதனை ஆரம்பத்தில் அடையாளம் கண்டு அதற்கான வைத்திய சிகிச்சையை பெற்றுக்கொள்வார்களானால் அதனை முற்று முழுதாக குணமாக்கலாம்.

வாயில் ஏற்படும் கொப்புளங்கள் ஆறாமல் குறைந்தது 10 நாட்களாவது இருக்குமாக இருந்தால், வாயில் இருந்து இரத்தக்கசிவு ஏற்பட்டால் வெள்ளை அல்லது சிவப்பு நிற புள்ளிகள் வாயின் உட்புறத்தில் காணப்பட்டால், நாக்கின் அடியில் சிறுகட்டிகளும், வாயின் மேற்புறத்தில் சிறு புண்களுடனான வீக்கம் காணப்படல் போன்றன இதற்கான அறிகுறிகளாக காணப்படும். இவ்வாறு காணப்பட்டால் உடனடியாக வைத்தியரைச் சந்தித்து அதற்கான வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு சிகிச்சையை பெற்றுக்கொள்வதன் மூலம் நாட்டில் ஒரு சிறந்த பிரஜையாக வாழலாம் என்றும் ஒரு வருடத்தில் அடையாளம் காணப்படுகின்ற 2500 வாய்ப் புற்றுநோயாளர்களில் 1000 பேரை இதிலிருந்து பாதுகாக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸாரின் உத்தரவை மீறியவரின் மோட்டார் சைக்கிள் பறிபோனது

(கொழும்பு)

சிலாபம் - கொழும்பு வீதியின் மாதம்பே பிரதேசத்தில் நபர் ஒருவர் நீரில் அடித்து செல்லப்பட்ட நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளார்.

குறித்த பகுதி ஊடாக பயணிக்க வேண்டாம் என பொலிஸார் வழங்கிய ஆலோசனையை மீறி மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரே இவ்வாறு நீரில் அடித்து செல்லப்பட்டுள்ளார்.

பின்னர் அந்த இடத்தில் இருந்த மாதம்பே பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இளைஞர்கள் சிலர் இணைந்து நீரில் அடித்துச் செல்லப்பட்ட நபரை காப்பாற்றியுள்ளனர்.

இருப்பினும் அவர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளை கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது. (இ-7)



உயிர் தப்பியது

# பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு துரிதமாக நிவாரணங்களை வழங்கக் கோரிக்கை



(கொழும்பு)

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு துரிதமாக நிவாரணங்களை வழங்குமாறு கூட்டு எதிரணி, அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார். (இ-7)

# தெஹிவளையை சுற்றிவளைக்கத் தயாரா? போஸ்டர் குறித்து பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

சர்ச்சையை ஏற்படுத்திய தெஹிவளை போஸ்டர், சிங்கள பாடசாலை ஒன்றின் நடைபவனி தொடர்பான பிரசார நடவடிக்கை எனத் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

"மே 26 தெஹிவளையை சுற்றிவளைக்கத் தயாரா?" என்ற சிங்கள வாசகத்துடன் ஒரு சுவரொட்டி கடந்த இரு தினங்களுக்கு முன்னர் தெஹிவளை பிரதேசத்தில் பொது இடங்களில் ஒட்டப்பட்டிருந்தது.



நாட்டில் காணப்படும் இனவாத சூழ்நிலைகளுக்கு மத்தியில் இதுபோன்ற ஒரு சுவரொட்டி சிறுபான்மையினர் மத்தியில் பெரும் சந்தேகத்தைத் தோற்றுவித்திருந்தது.

குறித்த சுவரொட்டி தொடர்பில் முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா தலைவர் என். எம். அமீனின் ஆலோசனைக்கு அமைய தெஹிவளை நகரசபை உறுப்பினர் மரீனா ஆப்தீன் தெஹிவளை பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இதன்போது தெஹிவளை எஸ்.டி.எஸ் ஜெயசின்ஹ பாடசாலை பழைய மாணவர்களால் எதிர்வரும் மே 26ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடைபவனி தொடர்பான பிரசார நடவடிக்கை எனத் தெரியவந்துள்ளது.

பின்னர் நடைபவனியை ஏற்பாடு செய்த குறித்த பாடசாலை பழைய மாணவர்களை வரவழைத்த பொலிஸார், பொதுமக்களை அச்சமூட்டும் வகையில் மேற்கொண்ட பிரசார நடவடிக்கைகளைக் கண்டித்ததுடன், உடனடியாக மக்கள் தெளிவு பெறும் விதமான சுவரொட்டிகளை காட்சிப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# சொல் சிக்கனம்

"சகஜமாகப் பேசுகிறோம், கலகலப்பாகப் பேசுகிறோம்" என்று எண்ணிக் கொண்டு கண்டபடி எதையாவது பேசி வைக்கிறோம். சம்பந்தப்பட்டவர்கள் புண்பட்டுப் போகிறார்கள். "என்ன இப்படிச் சொல்லி விட்டாரு" என்று அதிர்ந்து போகிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் நம் வார்த்தைகளால் அவர்கள் காயப்பட்டுப் போயிருக்கிறார்கள் என்பதை நாம் கடைசி வரை உணர்ந்து கொள்ளாமல் இருப்பது தான். அப்புறம் தெரிய நேர்ந்து "நான் சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன், தமாஷுக்குச் சொன்ன அதையா சீரியஸா எடுத்துக்கிட்டீங்க?" என்று எத்தனை சமாதானங்களைச் சொன்னாலும் அவை எடுபடுவதே இல்லை.

நாம் எதைப் பேசினாலும் நம்மையும் அறியாமல் வில்லங்களில் மாட்டிக் கொள்கின்றோம். பேச்சு வாக்கில் எப்படியும் மற்றவர்களை விமர்சிக்க நேரிடுகிறது. அதுவும் நகைச்சுவையாகப் பேசுகிறோம் பேர்வழி என்று உளறிக் கொட்டுபவர்கள் சிலர். இது சம்பந்தப்பட்ட நபர்களைப் போய்ச் சேர்ந்த விடயம் விவகாரமாகி விடுகிறது.

பல்லாண்டுகளாய் வளர்க்கப்பட்ட பிரியமும் நட்பும் சில அதிகப் பிரசங்கத்தனமான வார்த்தைகளால் சிதைந்து சின்னாபின்னமாகி விடுகின்றன. இது தேவையா?

புண்படுத்தாத முறையில்தான் நான் பேசுகிறேன் என்று சொல்கிறவர்கள் கூட மற்றவர்களைப் பேசவிடாமல் அப்படி இப்படித் திரும்பக் கூட விடாமல் தொண தொணக்கிறபோது எதிராளிகளுக்குச் "சே என்று ஆகிவிடுகிறது. அன்பை வளர்க்க வேண்டிய வாயால் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வது எந்த வகையில் சரி?" ஒரு சமயம் பெங்களூர் மெயில் ஒரு சக பயணியிடம் ஏதோ கேட்கப்போக அந்த மனிதர் தொணதொண என்று பேசி என்னை வெறுப்படையச் செய்துவிட்டார். ஏன்தான் இந்த மனிதரிடம் பேச்சுக் கொடுத்தோமோ என்று ஆகிவிட்டது.

மற்றவர்கள் விரும்புகிறார்களா? காது கொடுத்துக் கேட்கிறார்களா? நம் உரையாடலைத் தூண்டுகிறார்களா? அல்லது ஏதும் அவ்தியில் இருக்கிறார்களா? என்றெல்லாம் நாடி பிடித்துப் பார்த்துத்தான் வாக்கியங்களை வெளியே விட வேண்டும். உடைக்கப்பட்ட உண்டியல் மாதிரி இருப்பதையெல்லாம் கொட்டித் தீர்க்க வேண்டிய அவசியம் என்ன?

அமெரிக்காவுக்கு எஸ்.டி.டி.பேச நேர்ந்து நாம் பில் கட்ட நேர்ந்தால் எப்படிச் சிக்கனமாகப் பேசுவோமோ அப்படிப் பேசினால் நம்மை எல்லோருக்கும் பிடித்துப் போகும். ஓசியில் கிடைத்த உள்ளூர் போன் மாதிரிப் பேசிக் கொண்டே இருந்தால் வெறுப்பை சம்பாதித்துக்கொள்ள இதைவிட பெரிய வழி வேறு எதுவும் இருக்க முடியாது.

**லேனா தமிழ்வாணன்**

# புதிய மாகாண சபை தேர்தல் முறையில் எல்லை நிர்ணயம்



கலாநிதி
க.தவலிங்கம்,
தவிசாளர்,
எல்லை நிர்ணய ஆணைக்குழு.

பொதுமக்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுகின்ற, இறுதியாக பொதுமக்கள் வசம் அதிகாரம் சென்றடைகின்ற ஆட்சி முறையொன்றாக சனநாயக ஆட்சி முறை ஏற்றுக்கொள்ளப்படுவதனால், பொதுமக்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு எடுத்துக்கொள்வது எவ்வாறென்பது முக்கியமான ஒரு விடயமாகும். பொதுமக்கள் ஆட்சியில் பங்கு கொள்வது பிரதிநிதிகளூடாக வாதலால் நிகழ்கால சனநாயகம் "பிரதிநிதித்துவ சனநாயகத்துவம்" என அழைக்கப்படுகின்றது.

பொதுமக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஆட்சி அமைப்பும், அதற்கான பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறையும் ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமான அந்நாட்டின் அரசியல் அமைப்பிலும் தேர்தல் நியதிச்சட்டங்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஒரு நாட்டின் தேர்தல் முறை அந்நாட்டின் வரலாற்று, சமூக மற்றும் அரசியல் நிலைமைகளோடு பிணைந்த பல்வேறு காரணிகளின் அழுத்தம் காரணமாக உருவானதும் மக்களின் தேவைகளுக்கேற்ப அடிக்கடி திருத்தங்களுக்குள்ளானதுமான ஒரு முறையென அழைக்க முடியும். காலனித்துவ நாடுகளாகக் காணப்பட்ட உலகின் பெரும்பாலான நாடுகள் சுதந்திரம் கிடைத்ததன் பின்னர், அமைத்துக்கொண்ட தமது நாடுகளுக்கான ஆட்சிமுறைமைகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைமைகள், காலனித்துவ ஆட்சியாளர்களின் தாய்நாடுகளில் பின்பற்றப்பட்ட முறைகளைப் பெரிதும் ஒத்தமுறைகளில் அமைப்பதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அத்தகைய நாடுகளின் வரலாற்றுத் தகவல்களைப் பரிசீலிக்கின்ற போது தெளிவாகின்ற ஒரு விடயமாகும். இவ்விதத்திலான அழுத்தமொன்று பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களினால் இலங்கையின்விடயத்திலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"பிரதிநிதித்துவம்" தொடர்பான கோட்பாடு நிகழ்காலத்தில் பல்வேறு விதங்களில் பொருள் கோடல் செய்யப்படுகின்றது. சட்டவாக்கச்சபையொன்றிற்கு ஏதேனுமொரு தேர்தல் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதி அத் தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்ப டுத்துவதாகக் கூறப்படுவதால் இங்கு நிகழ்கின்ற பிரதிநிதித் துவமுறை "அபிலாசைப்பிரதிநிதித்துவம்" என அழைக்கப்படுகின்றது. பிரதிநிதி தமது தொகுதிக்குள் உள்ள வாக்காளர்கள் சார்பாக சட்டவாக்க சபைக்குள் பிரதிநிதித் துவத்தை மேற்கொண்டு வாக்கா ளரின் நலனுக்காக நடவடிக்கை யெடுப்பாரென நம்பப்படுகின்றது. அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டிய விதம் குறித்த இரண்டு கருத்துக்கள் காணப்படுகின்றன. பிரதிநிதிதான் சட்டவாக்கச் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப் பட்ட தேர்தல் தொகுதியின் விருப் பத்திற்கமைய நடந்து கொள்ளல் வேண்டுமென்பது ஒரு கருத்தாகும். அது தொடர்பாகவுள்ள அடுத்த கருத்து யாதெனில் பிரதிநிதி தமது தொகுதிக்கு சிறந்தவை யெனத்தான் கருதுகின்ற விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தாகும்.

நிகழ்காலத்தில் அரசியல் கட்சிகள் என்ற அமைப்புக்களின் சில கொள்கைகளின் அடிப்படையில் நடவடிக்கையெடுப்பதற்கு, அங்கத்தினர்களாக அவற்றோடு இணைந்து நடவடிக்கையெடுப்பவர்கள் தேர்தல்களின் போது கட்சியினால் தேர்தலுக்கான வேட்பாளர்களாக முன் வைக்கப்படுகிறார்கள். இப் பணியின்போது அரசியல் கட்சிகள், இடைத்தரகர்களாக செயற்படுவதனால் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படுகின்ற வேட்பாளர்களில் ஒருவரை நிகழ்கால தேர்தல்களின் போது தமது வாக்கினை வழங்கி தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை வாக்காளருக்கு ஏற்பட்டுள்ளது.

தேர்தல் முறைமைகளுக்கமைய மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் பெருமளவிலான முறைமைகள் உலகெங்கிற்கும் செயற்படுவதைக் காண முடிகின்றது. உலக நாடுகளில் காணப்படுகின்ற அத்தகைய முறைமைகளில் ஒன்றுக்கு ஒன்று முரணான விடயங்கள் பல காணப்பட்ட போதிலும் அவை அனைத்தும் முக்கியமாக பெரும்பான்மை முறைமை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு விளக்கப்படுகின்றது.

இம் முறைமைகளில் பெரும்பான்மை முறைமையின் (Majority System) கீழ் தேர்தல் தொகுதியின் அதிகூடுதலான வாக்குகளை பெற்றுக்கொள்கின்ற வேட்பாளர், பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். (First Past the Post System – FPP) அவர் உரிய தேர்தலில் செல்லுபடியான வாக்குகளில் அறு திப் பெரும்பான்மையொன்றை (Absolute Majority) பெற்றி ருக்கின்றார் எனக்கருத்தில் கொள் ளப்படவும் மாட்டாது. "இது எளிய பெரும்பான்மை தேர்தல்முறை" எனவும் அழைக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் நடத்தப்படுகின்ற மாகாண சபைத் தேர்தல்களின் போது நிர்வாக மாவட்டங்களிலி ருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை யில் அரைவாசி (50% ) இம் முறையின் கீழ் தொகுதிவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

விகிதாசார பிரதிநிதித்துவ முறையொன்றின் கீழ் (Proportional Representative System) ஒரு கட்சி அல்லது குழுசார்பாக வாக்காளரினால் தமது வாக்குகள் பயன்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக வாக்களிக்கப்பட்ட அக் கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளர்கள் பலர் சார்பாக விருப்புகளை அடையாளமிடுவதற்கும் வாக்காளருக்கு இடமளிக்கப்படுகின்றது. உரிய கட்சி அல்லது குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையின் சதவீதத்திற்கமைய அவற்றிற்கான ஆசன உரித்துரிமை கிடைக்கப் பெறுவதோடு, வேட்பாளர்கள் பெற்றுக்கொள்கின்ற விருப்புகளின் எண்ணிக்கை ஒழுங்கு வரிசைக்கமைய உரிய உறுப்புரிமைக்கான வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தற்போது இலங்கையில் அமுல் செய்யப்படுகின்ற பாராளுமன்றத் தேர்தல்களிலும், மாகாணசபைத் தேர்தல்களிலும் இதற்கமையவே பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறைமையின் அடிப்படைத்தத்துவம் யாதெனில், ஒரு தரப்பினரால் உரித்தாக்கிக் கொள்ளப்படுகின்ற உறுப்புரிமைகளின் எண்ணிக்கைக்கும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வாக்குகளுக்குமிடையே குறிப்பான ஒரு விகிதாசாரமுறை பேணப்படுகின்றதென்பதாகும்.

விகிதாசார முறைமையின் கீழ் வாக்காளருக்கு உரிய கட்சியை (தரப்பை) மாத்திரம் தேர்ந்தெடுப்பதற்கு இடமளிக்கப்படுகின்ற ஒருமுறையும் சில நாடுகளில் செயற்படுத்தப்படுகின்றன. அத்தகைய நாடுகளில் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியலின் தொடர் ஒழுங்கு தீர்மானிக்கப்படுவது கட்சியினாலேயேயாகும். இவ்வாறான பட்டியல் முறை பின்பற்றப்படுகின்ற நாடுகளில் கட்சிகளுக்கு தொகுதிகளின் உரித்துரிமை கிடைக்கப்பெறுகின்றமை காரணமாக தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குகளில் ஒரு குறிப்பிட்ட வெட்டுப்புள்ளி வாக்குகளின் சதவீதத்தைப் பெற்றுக் கொள்வதும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் 12 1/2 சதவீதமாகவிருந்த இச் சதவீத அளவு பின்னர் 5% சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் உட்சேர்க்கப்பட்ட முதலாவது சட்டத்திற்கமைய கட்சியினால் அல்லது குழுவொன்றினால் கையளிக்கப்பட வேண்டிய வேட்புமனுப்பத்திரமொன்றில் வேட்பாளர்களின் பெயர்கள் அவ்வேட்பாளர்களின் முன்னுரிமை ஒழுங்கிற்கமையவே (the order of Priority) உட்சேர்க்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இம்முறைமை 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச்சட்டத்தினால் மாற்றியமைக்கப்பட்டது.

## இலங்கையின் மக்கள் பிரதிநிதிகள் நிறுவனங்களும் தேர்தல் முறைகளும்

இலங்கைப்பாராளுமன்றம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் ஆகிய மக்கள் பிரதிநிதிகளின் நிறுவனங்களுக்குரிய தேர்தல்கள் நியதிச் சட்டங்களுக்கமைய தேர்தல்களை நடத்தி உரிய காலப்பகுதிக்காக அவற்றிற்கான மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 1977 ஆம் ஆண்டு வரை தேர்தல் தொகுதிகளின் கீழ் எளிய பெரும்பான்மை முறைக்கமைய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் முறை, 1978 ஆம் ஆண்டின் புதிய அரசியலமைப்பைத் தொடர்ந்து விகிதாசாரமுறையாக மாற்றியமைக்கப்பட்டது. 1950களிலிருந்து பிரதிநிதித்துவ தேர்தல் தொகுதியின் கீழ் தேர்தலொன்றிலே போட்டியிட்ட வேட்பாளர்களில் அதிக வாக்குகளைப்பெற்ற வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் முறையிலேயே உள்ளூர் அதிகாரசபைகளுக்கான பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அத்தேர்தலும் 1989 ஆம் ஆண் டிலிருந்து விகிதாசார முறைக்க மைய செயற்படுத்தப்படுவதற்குத் தேவையான சட்டம் இயற்றப்பட்டது. 1987ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மாகாண சபைகளுக்கும் ஆரம்பம் முதலே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் மேற்கொள்ளப்படுவதற்குத் தேவையான நியதிச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கம் மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்டது.

மேற் குறித்த தேர்தல் முறைகள் தவிர நிறைவேற்று ஜனா திபதியை நேரடியாக மக்களின் வாக்குகள் மூலம் தேர்ந்தெடுப்ப தற்குத் தேவையான நியதிச் சட்டம் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர் தல் சட்டத்தின் மூலமும் 1981 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க மக்கள் தீர்ப்புச்சட்டத்தின் மூல மும் மக்கள் தீர்ப்பை நடத்தி, சிற்சில விடயங்களில் சட்ட ஆக் கத்தோடு தொடர்புடைய மக்கள் கருத்துக்களை நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கு 1978 ஆம் ஆண்டின் புதிய அரசியலமைப்பின் மூலம் அவகாசம் அளிக்கப்பட்டது.

## மாகாண சபைகளுக்காக புதிய முறையில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

இலங்கை அரசியலமைப்பின் சட்ட ஏற்பாடுகளுக்கமைய இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் தாபிக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்காக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிக்காகவும், முன்னர் கூறியது போல அதனோடு தொடர்புடைய வேறு விடயங்கள் தொடர்பாகவுமான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக 1988 ஆம் ஆண்டின்2 ஆம்இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் (முதன்மை சட்டவாக்கம்) 1988 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது. 1988 ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அச் சட்டம் 1988 பெப்ரவரி 2 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டது.

(தொடரும்)

# வலுவான பேரிடர் தயார் நிலை இலங்கைக்கு மிகவும் அவசியம்

## ஆஸியும் ஐ.நா. அமைப்புக்களும் முன்வருகை



(கொழும்பு)

இலங்கையின் இயற்கை அனர்த்த் தயார் நிலையை மேலும் வலுப்படுத்துவதற்கு உதவ அவுஸ்திரேலியாவும் ஐ.நா. அமைப்புகளும் முன் வந்துள்ளன.

இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ளும் விடயத்தில் இலங்கைக்கு உதவுவதற்காக அவுஸ்திரேலிய அரசாங்கமும் யுனிசெவ் மற்றும் உலக உண வுத்திட்டமும் ஒப்பந் தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இதனடிப்படையில் அவுஸ்திரேலிய அரசாங்கமும் ஐ.நா. அமைப்புக்களும் இயற்கை அனர்த்தங்களை எதிர் கொள்ளும் இலங்கையின் திறனை வலுப்படுத்துவதற்கான மூன்று வருட திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தவுள்ளன.

இந்தத் திட்டத்திற்கு 750,000 அவுஸ்திரேலிய டொலர்களை செலவிடுவதற்கு அவுஸ்திரேலியாவும் ஐ.நா. அமைப்புக்களும் இணங்கியுள்ளன.

2004 ஆம்ஆண்டுசுனாமி இலங்கையை தாக்கியதிலிருந்து அவுஸ்திரேலியா இலங்கையின் பேரிடர் முகாமைதுவம் மற்றும் அவசரநிலை நடவடிக்கைகளிற்காக உதவி வருகின்றது என இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதரகத்தின் அபிவிருத்தி ஒத்துழைப்பு பிரிவின் தலைவர் விக்டோரியா கோக்லே தெரிவித்துள்ளார்.

இலங்கை இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்வதற்காகவும், துரித நடவடிக்கைகளை எடுப்பதை உறுதி செய்வதற்காகவும் ஐ.நா.வின் இரு அமைப்புகளுடன் இணைந்து திட்டமொன்றை முன்னெடுப்பது குறித்து மகிழ்ச்சியடைகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, மட்டக்களப்பு, இரத்தினபுரி, காலி உட்பட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மாவட்டங்களை இலக்குவைத்தே இந்ததிட்டத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவசர நிலையை எதிர்கொள்வதற்கு தயார்நிலையில் இருப்பதை உறுதிசெய்வதிலும், உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய திறனை வலுப்படுத்துவதிலும் முதலீடு செய்யவேண்டியது அவசியம் என உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதி இயக்குநர்நகுயென் டக்ஹோங் தெரிவித்துள்ளார். இயற்கை அனர்த்தங்களின் போது 25,000 பேருக்கு இந்த திட்டத்தின் கீழ் யுனி செவ்வும் உலக உணவுத்திட்டமும் உதவிகளை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்களே இந்த திட்டத்தின் முக்கிய இலக்கு எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் யுனிசெவ் ஆற்றும் பணிகளில் சிறுவர்களிற்கே மிக முக்கிய இடத்தை வழங்குகின்றோம் என அந்த அமைப்பின் பிரதிநிதி டிம் சட்டன் தெரிவித்துள்ளார். (இ-7)

# சு.கவின் செயலாளர் பதவிக்கு எஸ்.பி.யின் பெயர் முன்மொழிவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்காலிக நிர்வாகிகள் சபைக்கு பொதுச் செயலாளராக முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எஸ்.பி. திஸாநாயக்க எதிர்வரும் நாட்களில் கட்சியின் தலைமையகத்துக்குச் சென்று அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் இதற்கு முன்னரும் கட்சியின் செயலாளர் பதவியை வகித்தவர். தற்போதும் கட்சியில் பொறுப்பு வகிக்கின்றார்.

எது எவ்வாறிருப்பினும், கட்சிக்கான அதிகாரிகளை நியமிக்கும் இறுதி அதிகாரம் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இருப்பதாகவும், எதிர்வரும் 3 ஆம் திகதி கட்சியின் புதிய நிர்வாக சபை தெரிவு இடம் பெறவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)



## மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மெனிக் சந்தையில் மரக்கறிகளின் விலை 30 வீதத்தால் அதிகரித்துள்ளதாக மெனிக் சந்தை வர்த்தக சங்கத்தின் செயலாளர் காமினி ஹந்துன்கே தெரிவித்துள்ளார்.

மலையகப் பகுதிகளில் மரக்கறிகளின் விலை 50 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை 30 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 53

பரமசாமி பஞ்சாட்சரம்

இலக்ஷ்மி நாராயணன் சன்னதி

இலக்ஷ்மி நாராயணன் சன்னதி இராவணன் வெட்டிற்கு அருகில் இருக்கின்றது. இச்சன்னதியில் இருக்கும் இலக்ஷ்மி அம்மன் சிலையும் மகா விஷ்ணு சிலையும் நிலத்தைத் தோண்டும் போது எடுக்கப்பட்டவை என்பர். இச்சன்னதி இராவணன் வெட்டுக்குச், கிழக்குப் பக்கமாகப் பெரிய அளவில் இருந்தது. தற்பொழுது சிறிய அளவில் இலக்ஷ்மி நாராயணன் சன்னதியும், தியான மண்டபமும் கட்டப்பட்டு இருக்கிறது.

மாதுமை அம்மனும் சக்தி பீடமும்

கோணமாமலையில் மாதுமையம்பாளின் ஆலயம் அமைந்திருந்த இடம் விரிந்து, பரந்த பெரிய சமதரையாய் இருந்த காரணத்தால் இவ்வாலயத்தைச் சுற்றித் தேரோடும் வீதியும் அமைந்து இருந்தது. பாவநாசத் தீர்த்தத்தைச் சுற்றி ஐந்து கிணறுகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் இப்போது மூன்று கிணறுகள் தான் இருக்கின்றன. தேர் ஓடும் சமதரையில் காவல் துறையின் குடியிருப்பும் "கிளிவ் கொட்டேச்"சும் காணப்பட்டது. அத்துடன் விமான எதிர்ப்புப் பீரங்கியும் இங்கே பொருத்தப்பட்டிருக்கின்றது.

திருக்கோணேஸ்வரத்தைச் சக்தி பீடமென்றும் மாதுமை அம்பாள் சன்னதியைச் சங்காரதேவி சன்னதி என்றும் போற்றிப் புகழ்ந்து வழிபட்டு வந்துள்ளார்கள். உமாதேவியாரின் நெஞ்சுப் பாகம் இங்கு விழுந்ததாக ஆதி சங்கரருடைய சக்திபீடத் தோத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த ஆலயம் முக்கிய தலமாக அக்காலத்தில் விளங்கியது. சக்தி மிக்க மாதுமை அம்மன் கோவில் இன்னும் நிறுவப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. திருக்கோணேசப் பெருமானின் தீர்த்தமாடும் கேணி மூடப்பட்டு ஒரு கிணறு போலக் காட்சி தருகின்றது. இதை புதை பொருள் ஆராய்ச்சி செய்தால் பழைய பாவநாசக் குளம் கிடைக்கும் என்பது நிச்சயம். அத்துடன் இக்கிணற்றை அகழ்ந்து பெருப்பித்தால் மீண்டும் குளத்தை மீட்டதோடு சில தொன்மங்



களையும் மீட்கலாம் என நம்பப்படுகிறது.

கோவிலின் ஆக்கிரமிப்பும் புதுநிர்வாகமும்

1979 ஆம் ஆண்டிலிருந்து கோணேஸ்வரர் கோவிலுக்கருகில் புத்த விகாரை ஒன்றை நிறுவி அதற்குக் கோகர்ண விகாரை என்று பெயர் சூட்டியதொடு கோவில் நிலத்திலும் சிலர் உரிமையைக் கோரியதாகவும், அக்காலத்தில் இருந்த கோயில் நிர்வாகசபை இச்செயலை எதிர்த்து வழக்கொன்றைத் தாக்கல் செய்தது என்றும் சரித்திரம் கூறுகிறது.

அக்காலத்தில் கோட்டையையும் அதற்கு அண்டிய இடங்களையும் இலங்கை இராணுவம் கைப்பற்றி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வழக்குத் தொடர்பாக அதைத் தாக்கல் செய்யப்பட்டவர்களால் கோணேசர் ஆலயத்தின் புதுநில அளவை வரைவுப் (Land plan-Dept of Survey) படம் வரையப்பட்டு போர்த்துக்கல் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட சகல ஆவணங்கள், 'யாழ்ப்பாணச் சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட ஆவணங்கள், கோட்டை வாசல் மதில், வாசலின் உட்பக்கம் போன்ற இடங்களின் படங்கள் அடங்கிய ஆவணங்கள் ஆகியவையை சேகரிக்கப்பட்டு வழக்கு நடக்கும் போது நீதிபதிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு வாதாடப்பட்டது. 2010 ஆம் ஆண்டு கோகர்ணம் வளைகுடாவும் (Bay), இந்த இடத்திலுள்ள எல்லாச் சொத்துக்களும் தட்சண கயிலாயச் கோணேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமானது என்றும், இந்த ஆலயம் சம்பந்தமாக எதிர்காலத்தில் எந்த ஒரு வழக்கும் நீதிமன்றத்திற்கு வரக் கூடாது என்றும், வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அத்துடன், திருகோணமலை மாவட்ட நீதி மன்றம் வழக்குத் தீர்ப்பை அமுலாக்கம் செய்ய ஒரு கட்டளை பிறப்பித்தது. அதன்படி தட்சண கயிலாய கோணேஸ்வரர் ஆலய யாப்பிற்கு அமைய கோயில் நிர்வாகம் (ஆலயப் புது நிர்வாக சபையைத் தேர்ந்தெடுக்கும் வரை) ஒரு தற்காலிக ஆலயப் பரிபாலன சபை (Monitoring committee) யிடம் ஒப்படைக்கப்பட்டது. தற்பொழுது திருகோணமலை வட்டாரரீதியாக அங்கத்தவர்களைத் தேர்ந்து, ஆலய பரிபாலன சபையையும், ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையையும் நீதிமன்றத் தீர்ப்பின்படி தெரிவு செய்து கோயிலை நடத்துகின்றார்கள்.

திருக்கயிலாசமும் திருக்கோணேஸ்வரமும்

கயிலாசமலையும் திருகோணமலையும் (81 Degree Longitude), ஒரே பாகையில் இருக்கின்றபடியாலும்,

(தொடரும்)

# தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு; வரம்புமீறிய மிருகத்தனம்!



## பொலிஸார் மீது ரஜினி பாய்ச்சல்

(சென்னை)

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பொலிஸாரின் வரம்புமீறிய மிருகத்தனமான செயலைக் கண்டிக்கிறேன் என சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் செயற்பட்டு வரும் ஸ்டெர்லைட் ஆலையை மூட வலியுறுத்தி 18இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் நேற்று முன்தினம் 100 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர். பொலிஸாரின் தடுப்பை மீறி, போராட்டத்தின் போது ஆயிரக்கணக்கானோர் பேரணியாகச் சென்றனர். அப்போது பொலிஸ் துறையினருக்கும், மக்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. பின்னர் தடையை மீறி மக்கள் தூத்துக்குடி ஆட்சியர் அலுவலகத்திற்குள் நுழைந்தனர்.

இதையடுத்து போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்தத் துப்பாக்கிச்சூட்டில் 3 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். இதற்கு அரசியல் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் குறித்து ரஜினிகாந்த் வெளியிட்டுள்ள காணொலியில் பொலிஸாரின் வரம்பு மீறிய மிருகத்தனமான செயலைக் கண்டிக்கிறேன். துப்பாக்கிச்சூட்டு சம்பவம் உளவுத் துறை, தமிழக அரசின் தோல்வியைக் காட்டுகிறது என அவர் விமர்ச்சித்துள்ளார். (இ-7)

## மின்சாரக் கம்பங்கள் ஊடாக தொலைக்காட்சிக்கு இணைப்பு உடன் நிறுத்தப்படல் வேண்டும்

(கரணவாய்)

மின்சாரக்கம்பங்கள் ஊடாக தொலைக்காட்சி இணைப்புக்கள் வழங்கப்படுவதை உடனடியாக தடைசெய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை காலை கரணவாய் கிழக்கு, நாவலர் மடம்பகுதியில் தொலைக்காட்சி இணைப்பின் வழியாக பாய்ந்த மின்சாரம் தாக்கி தந்தையும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

இதேவேளை 2016 ஆம் ஆண்டு மே மாதம் மந்திகை வெள்ளிருவைப்பகுதியில் தொலைக்காட்சி இணைப்பு வழியாக பாய்ந்த மின்சாரம் தாக்கி அஜந்தன் என்ற இளைஞர் பலியானார். இதன்போது தொலைக்காட்சி இணைப்பு வழங்குவது தடை செய்யப்பட வேண்டும் என பலராலும் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. ஆனால் சிறிது காலம் சென்றதும் அது கிடப்பில் போடப்பட்டது.

2017 ஆம் ஆண்டு பிற்பகுதியில் தும்பளை பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் தொலைக்காட்சி இணைப்பு வழியாக பாய்ந்த மின்சாரம் தாக்கிப் பலியானார்.

இதேபோன்று நேற்று தந்தையும் மகனும் பலியான சம்பவத்தை அடுத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கூடிய பலரும் இது தொடர்பாகவே கருத்துக்களைக் கூறினர்.

மின்சாரக்கம்பங்கள் வாயிலாக நீண்ட தூரங்களுக்கு தொலைக்காட்சி இணைப்புக்கள் வழங்கப்படுகின்றன.

அவை தெளிவாக இருப்பதற்காக இடையிடையே மின்சாரம் வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஏதாவது கோளாறு ஏற்படுமாயின் நேரடியாக தொலைக் காட்சி இணைப்பு வயரில் மின்சாரம் பாயும்.

எனவே மின்சாரக்கம்பங்கள் ஊடாக தொலைக்காட்சி இணைப்புவழங்குவதை உடனடியாக நிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடமராட்சி மக்கள்மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் குடிநீர் சுத்திகரிப்பு தொகுதி திறப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 1986 ஆம் ஆண்டு க.பொ.த.. (உ/த) பிரிவினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இரண்டு பாரிய நவீன குடிநீர் சுத்திகரிப்பு தொகுதி திறப்பு விழா நேற்று கல்லூரி அதிபர் சதா நிமலன் தலைமையில் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகியது. மேற்படி நிகழ்வுக்கு அன்பளிப்புச் செய்த மாணவர்களின் புகழ் பூத்த முன்னை நாள் கணித ஆசான் முத்து நடராஜாவும் அவரது பாரியாரும் கலந்து சிறப்பித்தனர். 1986 ஆம்ஆண்டு பழைய மாணவர்கள் சார்பில் யாழ். போதனா வைத்தியசாலை இருதய சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பூ.லக்ஸ்மன் மற்றும் வைத்திய கலாநிதி ஸ்ரீ.கோணேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். 1986 ஆம் ஆண்டு க.பொ.த.(உ/த) பிரிவு கே.ரீ.கோணேஸ்வரனின் பெரும் ஒத்துழைப்பில் குறித்த திட்டம் செயற்படுத்தப்பட்டது பலராலும் பாராட்டப்பட்டது. மாணவர்களின் அடிப்படைத் தேவையினை பூர்த்தி செய்த பழைய மாணவர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக அனைவராலும் நன்றியும்பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1421

Search for people, places and things | Nagendram Home

### ராம்குமார்

நாம் கண்டு அஞ்சும் மனிதரிடம் அன்பு செலுத்த முடியாது...!



உண்மையான அன்பில் அச்சம் கலந்திருக்க முடியாது...!

### ராகவ்

இளமையை வயதைக் கொண்டு கணக்கிடாதீர்கள்



தன்னம்பிக்கை மனதில் இருக்கும்வரை இளமை உடலில் இருக்கும்...

### ரகுமான்

உண்மையான காதல் கடவுள் போல பார்த்தவர் யாருமில்லை



உண்மையான நட்பு தாயின் கருவறை போல பார்க்காதவர் யாருமில்லை...!

### ரிந்தியா

தினமும் வயிற்றை நிரப்ப ஓடுகின்றான் ஏழை...



தினமும் வயிற்றைக் குறைக்க ஓடுகின்றான் பணக்காரன்...!

### ரிஷி

சில மாமியார்களுக்கு மட்டுமே மருமகள் மகளாக கிடைக்கின்றனர்



சில மருமகளுக்கு மட்டுமே மாமியார் இன்னொரு தாயாகக் கிடைக்கின்றனர்...!

### ரியாஸ்

ஏமாற்றியவர்களுக்கு நன்றி சொல்லுங்கள்... அவர்கள் ஏமாறக் கற்றுத் தரவில்லை...



இனி ஏமாறாமல் இருக்கின்ற அனுபவத்தைத் தந்திருக்கின்றனர்...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கல்வித்துறையில் பயன்படுத்தப்படும் குறியீடுகளும் குறிப்புக்களும்

உலகில் உள்ள செல்வங்களுள் பெருஞ்செல்வம் கல்விச்செல்வம் ஆகும். கல்விச் செல்வம் காலத்தால் அழியாதது. கள்வர்களால் களவெடுக்க முடியாது, தீயினால் வேகாது என்றெல்லாம் வர்ணித்துள்ளார்கள். கற்க நன்றே கற்க நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்பது திருவள்ளுவரின் திருக்குறள். பிச்சை எடுத்தாவது கல்விச் செல்வத்தைப் பெற வேண்டும் என்று வலியுத்தப் படுகின்றது. கல்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை என்பது யுனெஸ்கோவின் வாசகமாக உள்ளது. கல்வியே சிறந்த மூலதனம் என்பது அறிவுசார் பொருளாதாரத்தின் அரிச்சுவடியாகக் காணப்படுகிறது. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது நிதர்சனமாக காணப்படுகின்றது.

சுற்றிவரும் பூமியில் உலகமயமாக்கலில் உலகம் உருண்டு கொண்டிருக்கின்றது. உலகமயமாக்கலில் இரண்டு தத்துவங்கள் காணப்படுகின்றன.

1. அறிவுசார் பொருளாதாரம் (Knowledge Economy)

2. நுகர்வோர் இறைமை (Cosumer's Sovereignty)

கல்வி அறிவுசார் பொருளாதாரமாக இருப்பதால் கல்வி பற்றிய ஆய்வுகள் வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன. கல்வியில் புரட்சிகர மாற்றங்கள் நிதமும் நிகழ்கின்றன. தொழில்நுட்ப புரட்சியானது கல்வியில் புரட்சிகர மாற்றங்களை புகுத்தி உள்ளன. அந்த வகையில் கல்வித் துறையில் காணப்படும் குறியீடுகளை புரிந்து கொள்வது அவசியம். இதை தெரிந்து கொள்ளாவிட்டால் நாம் வேகமான உலகத்தில் வேகமாக வீசி எறியப்பட்டு விடுவோம். இனி குறியீடுகளை கவனமாக கண்ணோட்டம் இடுவோம்.

| பாடசாலை (School) | | |
|---|---|---|
| S | - | Sincerity- உண்மை |
| C | - | Capacity --கொள்ளளவு |
| H | - | Honesty - நேர்மை |
| O | - | Obedient - கீழ்ப்படிவு |
| O | - | Orderliness -ஒழுங்குபடுத்தல் |
| L | - | Learn - கற்றல் |

| ஆசிரியர் (TEACHER) | | |
|---|---|---|
| T | - | Talent - திறமை |
| E | - | Education - கல்வி |
| A | - | Attitude- மனப்பாங்கு |
| C | - | Character - நடத்தை |
| H | - | Harmony- ஒழுங்கு |
| E | - | Efficient- வினைத்திறன் |
| R | - | Relation- உறவு |

| மாணவன் (STUDENT) | |
|---|---|
| S - | Sincerity - உண்மை |
| T - | Talent - ஆற்றல் |
| U - | Unity - ஒற்றுமை |
| D - | Discipline - ஒழுக்கம். |
| E - | Education - கல்வி |
| N - | Neatness - தூய்மை |
| T - | Technique - நுட்பம் |

| மாணவத்தலைவர் (PREFECT) | |
|---|---|
| P - | Personality - ஆளுமை |
| R - | Readiness - தயார்நிலை |
| E - | Efficient - வினைத்திறனுள்ள |
| F - | Fitness - பொருத்தப்பாடு |
| E - | Education - கல்வி |
| C - | Character - நடத்தை |
| T - | Timeliness - நேர ஒழுங்கு |

| வகுப்புத்தலைவன் (MONITOR) | |
|---|---|
| M - | Moderate - வழிநடத்தல் |
| O - | Obedient - கீழ்படிவு |
| N - | Neatness - தூய்மை |
| I - | Intelligence - புத்திசாலித்தனம் |
| T - | Talent - ஆற்றல்/திறமை |
| O - | Order - ஒழுங்கு/கட்டளை |
| R - | Readiness - ஆயத்தநிலை |

| SWOT | |
|---|---|
| S - Strength (பலம்)<br>W - Weak (பலவீனம்) | Internal Factors (அகக்காரணிகள்) |
| O - Opportunity (சந்தர்ப்பம்/வாய்ப்பு)<br>T - Neatness (அச்சுறுத்தல்) | External Factors (புறக்காரணிகள்) |

| 3R |
|---|
| R - Re-Use மீள் பாவனை |
| R - Reduce குறைத்தல் |
| R - Recycle மீள் சுழற்சி |

5S ⟶ 6S

| | ஜப்பான் மொழி | ஆங்கிலமொழி | தமிழ்மொழி |
|---|---|---|---|
| 1. | Seiri (செய்ரி) | Sorting out | தேவையற்றவைகளை அகற்றுதல் |
| 2. | Seitan (செய்த்ரென்) | Systematic Attangement | வகைப்படுத்தல் |
| 3. | Seiso (செய்சோ) | Spick & Span | தூய்மைப்படுத்தல் |
| 4. | Seiketsu (செய்கெட்சு) | Standardization | தரநிர்ணயம் |
| 5. | Shitsuke (வுட்சுகே) | Self-discipline | சுயகட்டுப்பாடு |
| 6. | | Safety | பாதுகாப்பு |

Remark (குறிப்பு) :- ஜப்பான் 5S ஐ அறிமுகம் செய்தது. இலங்கை அதனை 6S ஆக மாற்றியது.

| 5E | |
|---|---|
| Engagement - | ஈடுபாடு |
| Exploration - | ஆராய்வு |
| Explanation - | விளக்குதல் |
| Elaboration - | விரிவாக்கம் |
| Evaluation - | மதிப்பீடு |

| KASP | | |
|---|---|---|
| K - | Knowledge - | அறிவு |
| A - | Attitude - | மனப்பாங்கு |
| S - | Skills - | திறன்கள் |
| P - | Practise - | பயிற்சி |

MMPI - Methods of Measuring Personality Index (116)

ஆளுமை அளவீட்டுமுறைமை சுட்டிகள்

EPI - Eyenck Presonality Index (95)

ஐசனக் ஆளுமை சுட்டிகள்

LACE- Londan Association of Comparative Education

இலண்டன் ஒப்பீட்டுக் கல்வி சங்கம்

NATE - National Authority for Teacher's Education

ஆசிரியர் கல்விக்கான தேசிய அதிகார சபை

PSI - programme for School Improvement

பாடசாலை மேம்பாட்டுத் திட்டம்

SBTD - School Based Teacher's Development

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி

SDP - School Development Plan

பாடசாலை அபிவிருத்தி திட்டம்

SMC - School Management Committee

பாடசாலை முகாமைத்துவ குழு

or

School Monitoring Committee

பாடசாலை கண்காணிப்பு குழு

PBL - Project Based Learning

செயற்திட்ட அடிப்படை பயன் கற்றல்

SEMP - Secondary Educational Modernization Project

இரண்டாம் நிலைக்கல்வியை நவீனமயமாக்கும் திட்டம்

PMI - Plus Minus Interest

சாதக பாதக விடயம்

TQM - Total Quality Management

முழு தர முகாமைத்துவம்

ZPD - Zone of Proximal Development

அண்மை விருத்தி வலயம்

B.Ed - Bachelor of Education

கல்விமாணி

M.Ed - Master of Education

முது கல்விமாணி

PGDE - Post Graduate Diploma in Education

பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா

M.Phil - Master of Philosophy

முது தத்துவமானி

Ph.D - Doctor of Philosophy

தத்துவத்தில் கலாநிதி

I.Q - Intelligense Quotient

புத்திசாலித்தன திறன்

SSC- Senior School Certificate

சிரேஸ்ட பாடசாலை சான்றிதழ்

HSC - High School Certificate

உயர் பாடசாலை சான்றிதழ்

G.C.E O/L - General Certificate of Education (Ordinary Level)

கல்விப் பொதுத்தராதரப்பத்திரம் (சாதாரண தரம்)

G.C.E A/L - General Certificate of Education (Advance Level)

கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (உயர் தரம்)

P.D.E - Provincial Director of Education

மாகாண கல்விப்பணிப்பாளர்

Z.D.E - Zonal Director of Education

வலயக் கல்விப்பணிப்பாளர்.

D.D.E - Deputy Director of Education

பிரதி கல்விப்பணிப்பாளர்

A.D.E - Assistant Director of Education

உதவி கல்விப்பணிப்பாளர்

I.S.A - In Service Advisor

சேவைக்கால ஆலோசகர்

A.O - Administrative Officer

நிர்வாக உத்தியோகத்தர்

S.L.A.S - Sri Lanka Administrative Service

இலங்கை நிர்வாக சேவை

or

Sri Lanka Accountant Service

இலங்கை கணக்காளர் சேவை

S.L.E.A.S - Sri Lanka Educational Administrative Service

இலங்கை கல்வி நிர்வாக சேவை

S.L.P.S - Sri Lanka Principal Service

இலங்கை அதிபர் சேவை

or

Sri Lanka Planning Service

இலங்கை திட்டமிடல் சேவை

S.L.T.S - Sri Lanka Teacher's Service

இலங்கை ஆசிரியர் சேவை

எனவே மேற்கூறியவை கல்வியில் பயன்படுத்தப்படுகின்ற குறியீடுகளாக இனங்காணப்படுகின்றன. கல்வி ஆய்வில் மாற்றங்கள் மலர்கின்றன. புதுமைகள் புகுத்தப்படுகின்றன. முயற்சி திருவினையாக்கும். கல்வியில் முயற்சியும் தேடலும் கூடும் போது புதுமை, புரட்சி, புத்துணர்ச்சி, புத்வேகம் ஏற்படும். தேடல் உள்ள வரை தினமும் பசியிருக்கும். தேடல் உள்ளவரை வாழ்வில் ருசி இருக்கும் என்ற பாடல் வரிகள் மாற்றங்களையும் திருப்பங்களையும் சுட்டிக் காட்டுகின்றன. ஆகவே கல்வியை நேசிப்போம்.

"கல்வி இன்பத்தை நுகர்வோம் அதனை மற்றவருக்கு பகிர்வோம்"

**ச.வரிக்நிலான்**



# கோத்தபாய கூறிய பொருளாதாரக் கொள்கையை 2025ஆம் ஆண்டுக்குள் கொண்டு வருவோம்

## அமைச்சர் மலிக் சமரவிக்ரம சவால்



(கொழும்பு)

"பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர், கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்ட 2030ஆம் ஆண்டு பொருளாதார கொள்கையை, நாம் 2025 இல் கொண்டு வந்து காட்டுவோம்" என அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத் திட்டங்கள் சட்டமூலம், மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த நாட்டுக்கு ஒரு நாய்கூட முதலீடுகளை மேற்கொள்ள வரவில்லை என எதிரணியினர் தெரிவிக்கின்றனர். இது அப்பட்டமான பொய். எமது ஆட்சிக்காலத்தில் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இன்னும் ஒன்றரை மாதங்களில் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு கிடைக்கப்பெறவுள்ளது. அத்துடன், ஆசிய நாடுகளுடன் இணைந்து ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட எதிர்ப்பார்க்கிறோம். இதன்மூலம் ஆசிய பொருளாதார கொள்கையை பின்பற்றி பொருளாதார வளர்ச்சியை எட்ட விளைகிறோம்.

மேலும், சட்டரீதியான, ஊழலற்ற வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்வதே, இந்த அரசாங்கத்தின் நோக்கமாகும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பில் மாலைதீவு பிரஜைகள் அதிகம் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் தகவல்

(கொழும்பு)

கொழும்பு நகரம் மாலைதீவு பிரஜைகள் அதிகளவில் வசிக்கும் பகுதிகளில் இரண்டாவது இடத்தில் இருப்பதாக மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி கொழும்பு மாநகர மேயர் ரோசி சேனாநாயக்கவை நேற்று முன்தினம்




சந்தித்தார். இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் நஷீட் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத்துடன் இந்த சந்திப்பில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கு இடையிலான வரலாற்று சிறப்புமிக்க வர்த்தக மற்றும் கலாசார தொடர்புகள் பற்றியும் கலந் துரையாடியதாக மொஹமட் நஷீட் தெரிவித்துள்ளார். (இ-7)

# மழை வெள்ளத்திடமும் இந்த அரசிடமும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்

## ஜே.வி.பி. எம்.பி. சுனில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

"அரசாங்கத்திடம் இருந்தும் மழை வெள்ளத்திடம் இருந்தும் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்" என நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டமூலம், மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்திடமுள்ள பொறிமுறையாலேயே நாட்டு மக்கள் பிரச்சினைகளுக்கு



முகங்கொடுக்க நேரிடுகிறது. ஏதாவது ஒரு அனர்த்தம் வந்தாலும் அதனை முன்கூட்டிய ஆயத்தங்கள் எதுவும் முன்னெடுப்பதில்லை. அனர்த்தங்கள் ஏற்பட்டதன் பின்னரே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே இந்த அரசாங்கத்திடம் இருந்தும் வெள்ளத்திடம் இருந்தும் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

கடந்த மகிந்த ஆட்சிக் காலத்தில் இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டபோது ஐ.தே.கவும் ஜே.வி.பியும் எதிர்த்தன. ஆனால்இன்று தாம் எதிர்த்த இந்த சட்டமூலத்தை ஐ.தே.க.கொண்டு வந்துள்ளது. இது அழிவுப் பாதைக்கு கொண்டு செல்லும் செயல்.

அமைச்சர் மலிக் கொமிஷனை எதிர்பார்த்த இந்த சட்டமூலத்தை கைச்சாத்திட்டுள்ளார் எனக் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் மலிக் சமரவிக்ரம, "நான் கொமிஷன் எதிர்பார்க்கவில்லை. நான் தேவையான அளவு பணத்தை சம்பாதித்த பின்னரே அரசியலுக்குள் வந்தேன்" எனத் தெரிவித்தார். (இ-7)

# பிரிட்டன் ரக்பி வீரர்களின் மரணம் குறித்து ஆட்டோ சாரதிகளிடம் தீவிர விசாரணை

(கொழும்பு)

இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்ட இரு பிரிட்டனின் ரக்பி வீரர்களின் மர்ம மரணம் குறித்து ஆட்டோ சாரதிகள் சிலரை விசாரணை செய்து வருவதாக இலங்கையின் குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பின் இரவு விடுதியொன்றிற்கு சென்ற பின்னர் ரக்பி வீரர்கள் மரணமடைந்தது குறித்தே குற்றப்புலனாய்வு பிரிவினர் ஆட்டோ சாரதிகள் சிலரை விசாரணை



செய்தனர்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள இரவு விடுதிக்கு ரக்பி வீரர்கள் சென்று கொண்டிருந்த வேளை அவர்களிற்கு பிரவுண்சுகரை வழங்கிய ஆட்டோ சாரதியை கைதுசெய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மரணமடைந்த இரு ரக்பி வீரர்களில் ஒருவரான தோமல் பட்டி தனது மரண வாக்குமூலத்தில் ஆட்டோ சாரதி கொடுத்த பிரவுன் சுகரை தான் பயன்படுத்தியதாக கூறினார்.

இது தொடர்பில்பல ஆட்டோ சாரதிகளிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இயற்கை அனர்த்தம் ஏற்பட அரசாங்கம்தான் காரணம்

## அசாத்சாலி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் கடந்த மூன்று வருட காலமாக வெள்ளம், வரட்சி என இயற்கை அனர்த்தத்தால் மக்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளாகி வருகின்றனர். எனினும், இதனைத் தடுக்க அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் பயனற்றவை என கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அசாத்சாலி குற்றம்சாட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் சட்டவிரோதமான கட்டடங்கள் அதிகரித்துச் சென்றமை, கடந்த காலத்தில் இயற்கை அனர்த்தம் ஏற்பட காரணமாக அமைந்தது. இந்நிலையில், அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு முப்படையினருக்கு அரசாங்கம் அறிவித்திருந்த போதும், அதில் 50 வீதமான பணிகள்கூட நிறை



வடையவில்லை.

இவ்வாறு அரசாங்கத்தின் செயற்பாடுகள் பேச்சளவில் மாத்திரமே காணப்படுகின்றதென தெரிவித்த அசாத்சாலி, இவ்வாறு சென்றால் 50,60 வருடாங்களுக்கு முன்னர் இலங்கையில் ஏற்பட்ட பாரிய அனர்த்தங்களை போல மீண்டும் ஏற்படுவதை தடுக்க முடியாதெனத் தெரிவித்தார்.

இந்நிலையில், பாதிக்கப்பட்டமக்களுக்குநிவாரணங்களை வழங்குவதோடு நிறுத்திவிடாமல், எதிர்காலத்தில் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# மனவடு பற்றி உரை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் இம்மாத உரைநிகழ்ச்சி எதிர்வரும் 27 ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு, நூலக குவிமாடக் கேட்போர்கூடத்தில்நடைபெறும் இந் நிகழ்ச்சியில், உளவள ஆலோசகரும் மூத்த எழுத்தாளருமான கோகிலா மகேந்திரன், 'மனவடு' என்னும் தலைப்பில் உரையாற்றுவார். முடிவில் கலந்துரையாடலும் இடம்பெறும். ஆர்வமுள்ள யாரும் இதில் பங்குபற்றலாமென, வாசகர் வட்டத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7)

# இலங்கை - ருவாண்டா இடையே பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கைமற்றும்ருவாண்டாவிற்குமிடையில் பாதுகாப்புத் துறையில் இருநாட்டு ஒத்துழைப்பு தொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை நடைமுறைப்படுத்த பாதுகாப்பு அமைச்சுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

ருவாண்டா நாட்டுடனான பாதுகாப்புத் துறையின் புரிந்துணர்வு ஒப்பந்தம் எமது நாட்டின் பாதுகாப்புத் துறையில் செயற்படுத்த வேண்டிய தேவை தற்போது காணப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பில் பரிசீலனைகளை மேற்கொள்ள கடந்த வாரம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன ருவாண்டா நாட்டிற்கு உத்தியோகபூர்வ அரச பயணத்தினை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான பல எதிர்கால செயற்றிட்டங்கள் முன்மொழியப்பட்டது. தற்போது எமது நாட்டில் நடைமுறையில் காணப்படுகின்ற பாதுகாப்புத் திட்டங்களில் புதிய தொழிநுட்ப முறைமைகளை உள்ளடக்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

ருவாண்டா நாட்டின் பாதுகாப்புத் துறையில் காணப்படுகின்ற நவீன தொழிநுட்ப உபாய முறைமைகள் அந்நாட்டு தேசிய நல பாதுகாப்பிற்கு பொருத்தமாகவே காணப்பட்டுள்ளது. ஆனால் எமது நாட்டில் இதுவரை காலமும் பின்பற்றி வருகின்ற தேசிய பாதுகாப்பு கொள்கைத்திட்டங்கள் மக்கள் மத்தியில் வேறுபடுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக பாதுகாப்பு விடயத்தில் பல பிரச்சினைகள் கடந்த காலங்களில் தோற்றம் பெற்றுள்ளது.

ஆகவே இந்த அரசமுறை பயணத்தின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை எமது நாட்டு பாதுகாப்புத் துறையிலும் செயற்படுத்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவது தொடர்பில் அரசாங்கத்திடம் அனுமதி கோரப்பட்டது. ஆகவே தேசிய பாதுகாப்பினை கருத்திற் கொண்டு இரு நாட்டு பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பு தொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ள அரசாங்கம் பாதுகாப்புத் துறைக்கு அனுமதி வழங்கியுள்ளது. (இ-7)


# சிறுவர் அரங்கம்

## புறாவும் கட்டெறும்பும்

ஒரு ஊரில் ஒரு பெரிய ஆற்றங்கரை இருந்தது. அந்த ஆற்றங்கரையின் ஓரத்தில் ஒரு பெரிய அரச மரமும் இருந்தது. அந்த அரச மரத்தின் கிளையில் ஒரு புறா எப்போதும் வந்து அமர்வது வழக்கம். அப்படி ஒரு நாள் அந்த மரக்கிளையில் புறா அமர்ந்து ஆற்றில் ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டிருந்தது. அப்போது ஆற்று நீரில் ஒரு கட்டெறும்பு சிக்கி தத்தளிப்பதைக் கண்டது.

மறுநிமிடம் அந்தப் புறாவிற்கு அந்தக் கட்டெறும்பின் மீது பரிதாபமும், இரக்கமும் பிறந்தது. மறுவினாடி அது ஏதோ சிந்தித்து விட்டு அரச மரத்தின் இலையில் ஒன்றை பறித்து எறும்பு தத்தளிக்கும். இடத்திற்கு சற்று முன்னால் போட்டது.

ஆற்று நீருடன் மெல்ல அடித்து வரப்பட்ட எறும்பு அந்த அரச இலையின் மீது பட்டதும் கப்பென அந்த



இலையைப் பற்றிக் கொண்டது. இலைகள் நீரில் அமிழாது அல்லவா? எனவே, அந்த இலையின் மீது ஊர்ந்த எறும்பும் நீருக்குள் அமிழாமல் கரையோரம் இலையுடன் வந்தது.

கரையில் இலை ஒதுங்கியதும் இலையை விட்டு இறங்கியது. மரத்தின் கிளையில் அமர்ந்திருந்த புறாவிற்குத் தனது நன்றியைக் கூறியது. தினந்தோறும் எறும்பும், புறாவும் அதே மரத்தடியில் சந்தித்தன. இரண்டும் நல்ல சிநேகிதர்களாயின.

ஒரு நாள் அந்த மரத்தடிக்கு ஒரு வேடன் வந்தான். அவன் மரக்கிளையில் அமர்ந்திருந்த புறாவைக் கண்டான். ஆனால், வேடன் வந்ததையோ, அவன் தன்னைப் பர்த்ததையோ புறா கவனிக்கவே இல்லை.

காப்பது எத்தனை அவசியமானது என்பதை உணர்ந்தது.

அடுத்த நிமிடம் அந்த வேடனின் காலில் நறுக்கென்று கடித்தது. எதிர்பாராமல் கட்டெறும்பு கடித்த வலியில் வேடனின் குறி தவறியது. அவன் எய்த அம்பு எங்கோ போய் விழுந்தது.

இப்படி ஏற்பட்ட திடீர் சத்தத்திலும், சலசலப்பிலும் கவனம் சிதறிய புறா வெடுக்கென திரும்பியது. மறுநிமிடம் தனக்கு வர விருந்த பேராபத்தை உணர்ந்தது. தன் நண்பனான எறும்பு தன்



வேடன் தன் அம்பையும், வில்லையும் எடுத்தான். மரக்கிளையில் இருந்த புறாவை நோக்கி குறி வைத்தான். ஏதும் அறியாத புறா பேசாமல் எங்கோ பார்த்தபடி இருந்தது. ஆனால், வேடனின் காலடியில் நின்ற எறும்பிற்கு வேடன் தனது நண்பனான புறாவை குறி வைப்பது வெகு எளிதில் தெரிந்து விட்டது.

உடனே தன் நண்பனின் உயிரை

னைக் காப்பாற்றியதையும் உணர்ந்தது. மறுபடியும் வேடன் தன்னை நோக்கி குறி வைக்கும் முன்பாக அந்த இடத்தை விட்டுப் பறந்தது.

மறு நாள் தன் நண்பனான எறும்பைப் பார்த்து நன்றி தெரிவித்தது. இரண்டும் ஒன்றின் உயிரை ஒன்று காப்பாற்றிய நன்றியில் கடைசிவரை நட்புடன் இருந்தன.

முற்றும்.

## 2018.05 24 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖1738-மெதடிஸ்த இயக்கம் ஜோன் உவெசுலியால் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖1798-அயர்லாந்தில் பிரித்தானிய ஆக்கிரமிப்புக்கெதிராக ஐரியர்களின் எழுச்சி ஆரம்பமாயிற்று.
- ❖ 1844-முதலாவது மின்னியல் தந்திச் செய்தி சாமுவெல் மோர்சு என்பவரால் வாஷிங்டன் டிசியில் இருந்து மேரிலாந்துக்கு அனுப்பப்பட்டது. அனுப்பப்பட்ட செய்தி: What hath God wrought.
- ❖ 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் வேர்ஜீனியாவின் அலெக்சாண்டிரியா நகரைக் கைப்பற்றினர்.
- ❖1901- தெற்கு வேல்சில் இடம்பெற்ற விபத்தில் 78 சுரங்கத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- ❖1941-இரண்டாம் உலகப் போர்: வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் "பிஸ்மார்க்" என்ற ஜேர்மன் போர்க்கப்பல் "ஹூட்" என்ற பிரித்தானியக் கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.
- ❖ 1962-அமெரிக்க விண்வெளி வீரர் ஸ்கொட் கார்ப்பென்டர் அவ்ரோரா 7 விண்ணூர்தியில் மூன்று முறை பூமியைச் சுற்றி வந்தார்.
- ❖ 1991-எத்தியோப்பியாவில் இருந்து யூதர்களை இஸ்ரேலுக்குக் கொண்டு வரும் சொலமன் நடவடிக்கையை இஸ்ரேல் ஆரம்பித்தது.
- ❖1993-எதியோப்பியாவிடம் இருந்து எரித்திரியா விடுதலை அடைந்தது.
- ❖2000-இலங்கையில் நோர்வேத் தூதரகம் மீது குண்டு வீசப்பட்டது.
- ❖2001-எவரெஸ்ட் சிகரத்தை 15 வயது ஷெர்ப்பா டெம்பா ஷேரி எட்டினார். அச்சிகரத்தின் உச்சியை எட்டியவர்களில் வயதில் குறைந்தவர் இவரே.
- ❖2007-ஈழப்போர்: யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவில் இலங்கைக் கடற்படைத்தளத்தைக் கடற்புலிகள் தாக்கியழித்தனர்.
- ❖2007-ஈழப்போர்: கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்து நால்வர் காயமடைந்தனர்.

### பிறப்புகள்

- ❖1686-டானியல் ஃபேரென்ஃகைட், போலந்து-செருமானிய இயற்பியலாளர், பொறியியலாளர் (இ. 1736)
- ❖ 1794-வில்லியம் ஹியூவெல், ஆங்கிலேய மெய்யியலாளர், மதகுரு (இ. 1866)
- ❖1905-மிகயீல் ஷோலகவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் (இ. 1984)
- ❖1921-சு. வேலுப்பிள்ளை, ஈழத்து நாடகாசிரியர், எழுத்தாளர்
- ❖1941-பாப் டிலான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பாடகர், இசைக்கலைஞர்
- ❖1942-பிரேசர் இசுட்டோடார்ட்டு, இசுக்காட்டுலாந்திய வேதியியலாளர்
- ❖1949-ரொஜர் டிக்கின்சு, ஆங்கிலேயத் திரைப்பட ஒளிப்பதிவாளர்
- ❖ 1953-ஆல்ஃப்ரெட் மோலினா, ஆங்கிலேய நடிகர்
- ❖1955-ராஜேஷ் ரோஷன், இந்திய இசையமைப்பாளர்

### இறப்புகள்

- ❖1543-நிக்கோலாஸ் கொப்பர்னிக்கஸ், போலந்து கணிதவியலாளர், வானியலாளர் (பி. 1473)
- ❖ 1981-சி. பா. ஆதித்தனார், தமிழக ஊடகவியலாளர், அரசியல்வாதி (பி. 1905)
- ❖1981-ஆ. தியாகராஜா, இலங்கை அரசியல்வாதி (பி. 1916)
- ❖ 2008-சி. வேலுசுவாமி, மலேசிய எழுத்தாளர் (பி. 1927)
- ❖2012-பாலாம்பிகை நடராசா, இலங்கை வானொலிக் கலைஞர், இசைக்கலைஞர்.
- ❖2016-இரா. வை. கனகரத்தினம், இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர், எழுத்தாளர் (பி. 1946)

### சிறப்பு நாள்

- ❖ விடுதலை நாள் (எரித்திரியா, 1993)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 60 | 60 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 80 | 70 | 100 | 70 |
| தக்காளி | 200 | 200 | 180 | 120 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 35 | 40 | 40 |
| கோவா | 100 | 100 | 90 | 80 | 100 | 75 |
| கரட் | 180 | 200 | 200 | 80 | 300 | 240 |
| பூசணி | 40 | 20 | 30 | 20 | 40 | 30 |
| புடோல் | 100 | 100 | 80 | 55 | 120 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 35 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 160 | 130 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 85 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 120 | 120 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 60 | 160 | 60 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 60 | 65 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 70 | 100 | 140 |
| லீக்ஸ் | 150 | 250 | 240 | – | 280 | 220 |
| பீற்றூட் | 80 | 100 | 60 | 35 | 100 | 60 |
| கறிமிளகாய் | 150 | 100 | 120 | 60 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 180 | 200 | 190 | 280 | 250 |
| போஞ்சி | 200 | 250 | 200 | – | 240 | 200 |
| கத்தரிதப்புள்ள | 70 | 60 | – | – | 80 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 250 | 200 | 220 | 200 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70-100 | 65 | 30-70 | 50-75 | 80 |
| இராசவள்ளி | 150 | 200 | 160 | – | 160 | 180 |
| வெங்காயப்பூ | 320 | – | – | – | – | 200 |
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 35 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 10 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | – | – | – | – | 80 | 80 |

அறுப்புக் காலத்தில் எலிக்கு ஆயிரம் பெண்டாட்டிகள்.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## இங்கிருந்து அள்ளிச் செல்பவர்கள் கிள்ளித் தெளிக்கவும் மாட்டார்களாம்

வட புலத்தின் பொருளாதார நிலைமை குறித்துப் பல தடவைகள் இவ்விடத்தில் பிரஸ்தாபித்து விட்டோம். கண்ட பலன் எதுவுமில்லை.

இப்போது எங்கள் வர்த்தகர்கள் நட்டமடைந்து மனமுடைந்து செய்தொழிலை விட்டு வெளியேறுவதே ஒரே வழி என்ற நிலைமைக்கு வந்து விட்டனர்.

மாறாக தென்பகுதியில் இருந்து இங்கு வந்து ஆக்கிரமித்துள்ள வர்த்தக நிறுவனங்களும் தெருவோர வியாபாரிகளும் நிதி அமைப்புகளும் வடக்கின் உழைப்பு முழுவதையும் அள்ளிச் செல்கின்றனர்.

இவற்றையெல்லாம் பார்த்திருப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய எங்களிடம் யாரும் இல்லை என்ற நிலைமையே உள்ளது.

இதற்கு மேலாக இலங்கை முழுவதிலும் ஒப்பிடும்போது, வட மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலேயே வருமானம் அதிகம் என்ற புள்ளிவிபரப் பதிவுகளைத் தமக்காக்கிக் கொண்ட நிறுவனங்கள் பல இருக்கின்றபோதிலும் அவை ஒரு சிறுவீதத்தையேனும் வட பகுதி மக்களுக்காகச் செலவிடவில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

குறிப்பாக டயலொக் நிறுவனம், ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் போன்ற தொலைத்தொடர்பு நிறுவனங்கள் வட புலத்தாரின் பொருளாதாரத்தில் பெரும்பகுதியை அள்ளிச் செல்கின்றனர்.

ஆனால் இந்த நிறுவனங்கள் சமூக சேவை என்ற அடிப்படையிலேயோ அல்லது தமது நிறுவன பிரசாரத்தின் அடிப்படையிலேயோ தமிழ் மக்கள் நன்மையடையக் கூடிய எந்தச் சேவையையும் செய்யவில்லை என்பது பலராலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை மேலே பெயர் குறிப்பிட்டு கூறப்பட்ட நிறுவனங்களுடன் மட்டும் மட்டுப்படுத்திக் கொள்ள முடியாது.

மாறாக விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள் விற்பனையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள், வங்கிகள், கடன் வழங்கும் கம்பனிகள் எனப் பலவற்றையும் குறிப்பிட முடியும்.

இத்தகைய நிறுவனங்களின் ஒட்டுமொத்த நோக்கமும் வடபுலத்து வருமானத்தை தென்பகுதிக்கு அள்ளிச் செல்வதுதான்.

எனினும் இது பற்றிய தெளிந்த சிந்தனை எதுவும் எங்களிடம் இல்லை. மேலும் தென்பகுதியில் இயங்குகின்ற இதே நிறுவனங்கள் அங்கு வீதிப் போக்குவரத்தை விதிமுறையுடன் சாரதிகளும் பாதசாரிகளும் அனுசரிப்பதற்கு உதவி செய்கின்றன.

வீதிகளின் ஒவ்வொரு வளைவுகளிலும் சந்திகளிலும் வாகனங்களின் வேகங்களைக் கட்டுப்படுத்துமாறு சிறுபிள்ளைகள் கூறுவது போன்ற விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன.

இது தவிர, அங்குள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான உதவிகள், விளையாட்டு மைதானத் திருத்தங்கள், பல்கலைக்கழகங்களுக்கான வேலைத்திட்டங்கள் என ஏகப்பட்ட சமூகப்பணிகளை குறித்த நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. ஆனால் இங்கு எதுவும் இல்லை எனலாம்.

எனவே இத்தகைய நிறுவனங்கள் வீதி விபத்தைத் தடுப்பதற்காவது ஏதேனும் செய்யலாமல்லவா?

## வட மாகாணத்தில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கான மேலதிக கொடுப்பனவு இவ்வாரத்துக்குள் வழங்கப்படும்

### சுகாதார அமைச்சர் குணசீலன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில்கடமையாற்றுகின்ற அரச வைத்தியர்களுக்கான மேலதிக நேர கொடுப்பன்வுகள் பல மாதங்களாக வழங்கப்படாது நிலுவையில் காணப்பட்ட நிலையில் , நிலுவையில் உள்ள மேலதிக நேரக் கொடுப்பனவை இவ் வாரத்துக்குள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் உள்ள அரச வைத்தியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் நீண்டகாலமாக வழங்கப்படாத நிலையில் நிலுவையில் காணப்பட்டது. குறித்த பிரச்சினை தொடர்பாக வட மாகாண சுகாதார அமைச்சு மத்திய அரசுடன் பல்வேறு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது.

எனினும் மேலதிக நேர கொடுப்பனவுகள் வழங்கப்படாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் அடையாள பணிப் பகிஷ்கரிப்பு ஏற்பாடு செய்யப்பட்டு பணிப் பகிஷ்கரிப்பும் இடம்பெற்றது.

எனினும் மத்திய அரசாங்கத்திடம் இருந்து இதற்கான நிதி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டபோதும் உரிய காலத்தில் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தற்போது மத்திய அரசாங்கத்தின் திறைசேரியில் இருந்து குறிப்பிட்ட காலத்திற்குள் மாகாண திறைசேரிக்கு நிதி வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக மாகாண திறைசேரியில் இருந்து குறிப்பிட்ட காலத்துக்குரிய நிலுவைகளை இந்த வாரத்துக்குள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே மாகாண திறைசேரியில் இருந்து இவ்வாரத்துக்குள் வைத்தியர்களுக்கான நிலுவையில் உள்ள மேலதிக நேர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் மத்திய திறைசேரியினால் மாகாண திறைசேரிக்கு குறித்த பணம் வழங்கப்படும் என உறுதி வழங்கப்பட்டுள்ளதாகவும் வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ. குணசீலன் மேலும் தெரிவித்தார். (ம-4)

## பாடசாலைகளில் பணியாற்றும் கர்ப்பிணி ஆசிரியர்களுக்கு எளிமையான ஆடை

### கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்

(கொழும்பு)

பாடசாலைகளில் பணியாற்றும் கர்ப்பிணி ஆசிரியர்களுக்கு எளிமையான ஆடை ஒன்றை அணிந்து செல்வதற்கான புதிய நடைமுறை ஒன்றை மேற்கொள்ள உள்ளதாக கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தலைமையில் கல்வித் திணைக்களத்தில் இது தொடர்பான அங்குரார்பண நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

வைத்தியர்களின் அறிவுரைகளுக்கு அமைய பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியைகளுக்கு உடலுக்கு மிகவும் எளிமையான ஆடை ஒன்றை தமது கர்ப்ப காலத்தில் அணியும் சந்தர்ப்பம் இந்த புதிய திட்டத்தினால் வழங்கப்படுகிறது.

இலங்கையில் 236,000 ஆசிரியர்கள் கடமையாற்றுவதாகவும் அதில் 172,000 பேர் ஆசிரியைகள் எனவும் இவர்களில் சுமார் 10,000 பேர் வருடம் ஒன்றிற்கு கர்ப்பம் தரிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, பாடசாலைகளில் கடமையாற்றும் கர்ப்பிணி ஆசிரியைகளுக்கு இன்று முதல் இந்த எளிமையான ஆடையை அணிய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வெள்ளத்தில் மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலையால் களுகங்கையின் நீர் மட்டம் அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையில்மீன பிடிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கெகுலலிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மீன் பிடிக்கச் சென்று காணாமல் போயிருந்த குறித்த நபரை தேடும் நடவடிக்கை இடம்பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் சடலமாக கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கெகுலலிய பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஹொரணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம)

## 2.39 கிலோ ஹெரோயினுடன் மாலைதீவு பிரஜை கைது

2.39 கிலோ கிராம் ஹெரோயினுடன் மாலைதீவு பிரஜை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

33 வயதுடைய மாலைதீவு பிரஜை ஒருவரையே பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் இவ்வாறு கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரிடம் இருந்து 24.4 மில்லியன் பெறுமதியான 2.39 கிலோ கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. (ம)

## சத்திய தரிசனம்



### குறுக்குவழி பணம் ஆபத்து

❖ சொர்க்கத்தை தேடிப்போக வேண்டியதில்லை, கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம், பிறரிடம் காட்டும் அன்பு, நமக்கு உதவ முடியாத உயிர்களிடம் காட்டும் இரக்கம் இவற்றினால் நம்முடைய மனதுக்கு கிடைக்கும் மனநிறைவே சொர்க்கம்.

❖ குறுக்கு வழிகளில் பணம் சம்பாதிக்கலாம். ஆனால் அது நிலைக்காது. கடைசியில் அவமானத்திலும், அவப்பெயரிலும் தான் கொண்டு போய்விடும். தர்மப்படி சம்பாதிப்பவனே உயர்வடைகிறான்.

❖ நமக்கு எது வேண்டுமோ அதை இறைவனிடம் கேட்பதில் தவறில்லை. இறைவன் உங்களுடைய தகுதிக்கு ஏற்பக் கொடுத்தருள்வான், ஆனால், எனக்கு எல்லாம் நீயே உன்னையே எனக்குக் கொடு என்று வேண்டிக் கொள்ளும் பக்தி மார்க்கம் தான் அனைத்தையும் விடச் சிறந்தது.

❖ இதயத்தில் தெய்வம் இருப்பதால் இதயமே தெய்வத்தின் கோயிலாகும். அந்த இதயத்தை தயை (இரக்கம்) மூலம் நிரப்ப வேண்டும்.

❖ பொறுமையே அனைத்துலகிற்கும் பொதுவானது. பொறுமை, சகிப்புத்தன்மை இவற்றிற்கு மிஞ்சிய தெய்வம் உலகத்தில் வேறு எதுவும் இல்லை.

## 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு தங்கக் கட்டிகளுடன் பிரித்தானியர் ஒருவர் கைது

(கொழும்பு)

பிரித்தானியாவில் குடியுரிமை பெற்றுள்ள இலங்கையர் ஒருவர் சட்டவிரோதமாக கொண்டு வந்த 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு தங்கக் கட்டிகளை கட்டுநாயக்க சுங்க அதிகாரிகள் நேற்று காலை கைப்பற்றியுள்ளனர்.

பிரித்தானியாவில் வசித்து வரும் 55 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்க திணைக்களத்தின் பேச்சாளர் சுனில் ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 5.20 அளவில் டுபாயிலிருந்து வந்த டுபாய் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் இவர் கட்டுநாயக்கவுக்கு வந்துள்ளார்.

கிறீன் சேனல் வழியாக விமான நிலையத்தில் இருந்து வெளியேற முயற்சித்த போது சுங்க அதிகாரிகள் மறித்து சோதனையிட்டுள்ளனர்.

சோதனையின்போது பிரித்தானிய பிரஜை தனது காற்சட்டை பொக்கட்டில் 100 கிராம் எடை கொண்ட இரண்டு தங்க கட்டிகளை மறைத்து வைத்திருந்த நிலையில் சுங்க அதிகாரிகள் அதனை கைப்பற்றியுள்ளனர்.


விமான நிலைய் சுங்க பணிப்பாளர் ஓ.எம். ஜாப்பீரின் ஆலோனையின் கீழ் பிரதி சுங்க பணிப்பாளர் அசோக ரஞ்சித் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணி யிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில விநாயகபுரம், இயக்கசசி, முகாவில், மல்வில், இயக் கச்சி இராணுவமுகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சிதம்பரபுரம், கற்குளம், ஆசிகுளம், ஆச்சிபுரம், எல்லப்பர்மருதங்குளம், கூமரசங்குளம், குடாகச்சகொடிய, மகாமயிலங்குளம், துட்டுவாகை, குடாகச்ச கொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

# மெரினாவை வென்ற கூட்டம் கிண்ணத்தை வெல்லாமல் விடுமா?

## ஹர்பஜன் சிங் டுவிட்




ஐ.பி.எல். தொடரின் முதல் பிளே-ஆப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் சென்னை அணி வெற்றி குறித்து ஹர்பஜன் சிங் டுவிட்டரில் பதிவு செய்திருப்பதாவது: "விதைகள் கீழ் நோக்கி எறியப்பட்டால் தான் விருட்சங்கள் மேல் நோக்கி வளரும். மக்கள் எங்களை விதைகளாய் வித்திட்டார்கள் இன்று அரை இறுதியில் வென்று உங்கள் முன் விஸ்வரூபம் எடுத்துள்ளோம்.

மெரீனாவை வென்ற கூட்டம் கோப்பை வெல்லாமல் போய் விடுமா. அறம் கூற்று சொல்லும் நெஞ்சுக்குநீதி. இவ்வாறு ஹர்பஜன் சிங் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (க)

## சதம்-டக்அவுட் ராயுடு சாதனை




ஐ.பி.எல். 2018 தொடரின் பிளே ஒப் போட்டி நேற்று முன்தினம் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. இதில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் - சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஐதராபாத் 139 ஓட்டங்கள் சேர்த்தது. பின்னர் 140 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி களம் இறங்கியது.

4-வது ஓவரை சித்தார்த் கவுல் வீசினார். இந்த ஓவரின் 3-வது பந்தில் ரெய்னா க்ளீன் போல்டானர். அதன் பின் இந்த தொடரில் அசத்தி வரும் அம்பதி ராயுடு களம் இறங்கினார். இவர் தான் சந்தித்த முதல் பந்திலே க்ளீன் போல்டானார். இதன்மூலம் ஒரே அணிக்கெதிராக ஒரு சீசனில் சதமும், டக்அவுட் ஆகியும் சாதனை புத்தகத்தில் அம்பதி ராயுடு இடம்பிடித்துள்ளார்.

இதற்கு முன் ஏபி டி வில்லியர்ஸ் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கெதிராக 2009-ல் சதமும், டக்அவுட்டும் ஆகியுள்ளார். டேவிட் வார்னர் 2010இல் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கெதிராகவும், கிறிஸ் கெய்ல் 2011இல் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கெதிராகவும், 2011-ல் கில்கிறிஸ் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருக்கு எதிராகவும், முரளி விஜய் 2012இல் டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்கெதிராகவும், விராட் கோலி 2016இல் குஜராத் லயன்ஸ் அணிக்கெதிராகவும் சதம் அடித்ததுடன் டக் அவுட்டும் ஆகியுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)



தெல்லிப்பளை பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான பிரதேச மட்ட துடுப்பாட்டப் போட்டிகளில் மல்லாகம் சென்.சேவியர் இளைஞர் கழகம் முதலாம் இடத்தையும் கருகம்பனை இந்து இளைஞர் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

## உலக கிண்ண கால்பந்தாட்டத்திற்கு விசேட வடிவமைப்பில் பந்து தயார்




21வது உலகக்கால்பந்து கிண்ண தொடருக்கான பந்துகள் பாகிஸ்தானில், இந்திய எல்லையை ஒட்டியுள்ள பகுதியான சியால்கோட்டில் தயாரிக்கப்படுகின்றன.

ரஷ்யாவில் உலகக் கிண்ண கால்பந்து தொடர் ஜூன் 14ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்த தொடருக்காக உலகளவில் உள்ள அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த உலகக் கிண்ண போட்டியில் பயன்படுத்தப்படும் Adidas Telstar 18 என்று பெயரிடப்பட்டுள்ள Special கால்பந்து பயன்படுத்தப்பட உள்ளது.

இந்த கால்பந்து, தொலைக்காட்சியில் பார்க்கும்போது எங்கு உள்ளது என்பதை தெளிவாக தெரியும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர இந்த பந்தில் Chip ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம், பந்து எங்கு உள்ளது என்பதை கைப்பேசியில் இருந்து தெரிந்து கொள்ள முடியும். Telstar என்பது தகவல் ஒலிபரப்புக்காக நாசா அனுப்பிய செயற்கைக் கோளின் பெயர் ஆகும். அதன் நினைவாகவே இந்த பெயர் கால்பந்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 1970ஆம் ஆண்டிலிருந்து கால்பந்துகளை தயாரித்து வரும் Adidas நிறுவனம், கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் இந்த ஆண்டு உலகக் கிண்ண கால்பந்து தொடருக்கு 'Telstar 18' என்ற பெயரில் தயாரித்துள்ளது.

உலகிலேயே அதிக அளவு கால்பந்து பாகிஸ்தானில் தான் தயாராகிறது. பாகிஸ்தானின் சியால்கோட் பகுதியில் ஆண்டுக்கு 3 கோடி பந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இது உலக அளவில் தயாரிக்கப்படும் பந்துகளில் 40 சதவீதம் ஆகும்.

இந்நிலையில், பல சிறப்பு அம்சங்களை கொண்ட 2018 தொடருக்கான கால்பந்தும் பாகிஸ்தானில், இந்திய எல்லையை ஒட்டியுள்ள சியால்கோட் நகரில் Forward Sports என்னும் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் கால்பந்துகளை Adidas நிறுவனத்திற்காக பிரத்தியேகமாக தயாரித்துள்ளது. இந்த உலகக் கிண்ண தொடருக்கு எத்தனை பந்துகள் தயாராகின்றன என்பது தெரியாத நிலையில், மாதத்துக்கு 7 லட்சம் கால்பந்துகளை Forward Sports நிறுவனம் தயாரித்து வருகிறது.

கடந்த 1990 முதல் 2010 வரை நடந்த உலகக் கிண்ண தொடர்களுக்கு, கைகளால் தைக்கப்படும் கால்பந்துகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், 2014ஆம் ஆண்டு ஒரு மாற்றமாக தெர்மோ முறையில் சூடேற்றப்பட்டு ஒட்ட வைக்கப்பட்ட கால்பந்துகளே பயன்படுத்தப்பட்டன.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான தொடரிலும் இந்த வகை கால்பந்துகளே பயன்படுத்தப்பட உள்ளன. சியால்கோட் நகரில் ஆண்டுக்கு 3 கோடி பந்துகள் தயாரிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## நடன மங்கையர்களுடன் விருந்து டெல்லி அணிக்கு புதிய சிக்கல்




இரவு விருந்தில் நடன மங்கைகளுடன் கலந்துகொண்ட டெல்லி அணிக்கு பி.சி.சி. எச்சரிக்கை விடுத்துள்ளது.

தனது கடைசி போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக ஆடிய டெல்லி டேர் டெவில்ஸ் அணி, அதில் வெற்றி பெற்ற பின்னர், குருக்கிராமில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் இரவு விருந்து நிகழ்ச்சிக்கு, டெல்லி அணி நிர்வாகம் ஏற்பாடு செய்தது.

இதில் அந்த அணியின் வீரர்களுடன், அந்த அணி விளையாடிய போட்டிகளில் ரசிகர்களை உற்சாகப்படுத்திய நடன மங்கைகளும் விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

நடன மங்கையர்கள் , வீரர்கள் பங்கேற்கும் விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அனுமதி இல்லாத காரணத்தினால் பி.சி.சி.ஐ-யின் ஊழல் தடுப்பு பிரிவினர் டெல்லி அணி நிர்வாகத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெளியாட்கள் அணி வீரர்களுடன் கலப்பது விதிகளின்படி தவறு என்பதால் இது குறித்து அறிக்கை அளிக்கப்படும் என்றும் இது போன்று மீண்டும் ஒரு முறை நடக்கக்கூடாது என்று டெல்லி அணிக்கு பிசிசிஐ அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.



வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கும் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி.அஷிகா 170 கிலோ கிராம் நிறையினை தூக்கி தங்கம் வென்றார். அத்துடன் வடமாகாண சிறந்த பளுதூக்கும் வீராங்கனையாகவும் தெரிவானார்.

## "கோத்தா" பயம்...

மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பொரளையில் நேற்று இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நல்லாட்சி அரசாங்கத்திற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பில் பாரிய அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனால் அரசாங்க தரப்பிற்கு தற்போது தூக்கம் போவதுமில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான மங்கள சமரவீர, மலிக்சமரவிக்கிரம உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்களும் கோத்தபாய ராஜபக்ஷவை தூற்றிக்கொண்டிக்கின்றனர். ஏனெனில் அவர் மீதான பயம் அரசாங்கத்தின் சகல துறைகளிலும் தொற்றியுள்ளது என்றார். (ம)

## மின்சார தாக்குதலுக்கு...

மேலும் தெரியவருவதாவது,

ஜெகநாதன் என்பவர் தமது வேலியில் குழை வெட்டியதாகவும் இதன்போது தொலைக்காட்சி வழாங்குநர் ஒருவரினால் அவர்களின் வீட்டு வேலியில் சுற்றி வைக்கப்பட்டிருந்த இணைப்பு வயரில் இருந்து பாய்ந்த மின்சாரம் அவரைத் தாக்கியுள்ளது.

குழை வெட்டச் சென்ற தந்தையைக் காணாது அவரைப் பார்க்கச் சென்ற மகனான சஞ்சீவன் வீழ்ந்து கிடந்த தந்தையை பிடித்தபோது அவரும் மின்தாக்குதலுக்கு இலக்கானதாக கூறப்படுகிறது.

மற்றைய மகன் ஒருவர் பின் பக்கம் சென்ற இருவரையும் காணவில்லை எனப் பார்க்கச் சென்றபோது இருவரும் நிலத்தில் வீழ்ந்து கிடந்துள்ளனர். இவர்கள் ஏன் கிடக்கின்றார்கள் என எண்ணி அவர்களின் கையைப் பிடித்தபோது அவரையும் மின்சாரம் தாக்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கு வந்தவர்கள் கடைசியாக சென்ற மகனை கட்டை ஒன்றினால் அடித்து காப்பாற்றியதாக கூறப்படுகிறது.

அவர்களின் வீட்டு வேலிப் பகுதியில் சுற்றி வைக்கப்பட்ட வயர் சம்பவ இடத்தில் காணப்பட்டது. தொலைக்காட்சி இணைப்பு வழங்குபவரின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாகவே இச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்சார தாக்குதலுக்கு இலக்கான தந்தையும் மகனும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும் அவர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணையினை முன்னெடுத்துள்ளனர்.

ஜெகநாதன் யாழ்ப்பாணத்தில் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றினை நடத்தி வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-4,9,60)

## ரயில் கடவையில்...

முற்பட்ட கார் மோதி விபத்துக்குள்ளானதில், கார் முற்றுமுழுதாக சேதம் அடைந்ததுடன், சாரதி சிறு காயத்துடன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த யாழ்தேவி புகையிரதம் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு அரியாலை தபால்கட்டை சந்திக்கு அருகில் வந்தபோது பாதுகாப்பற்ற கடவையில் கார் ஒன்று வீதியை கடக்க முற்பட்டுள்ளது.

திடீரென வந்த புகையிரதம் காரை மோதியதில் கார் முற்றுமுழுதாக சேதம் அடைந்துள்ளது. காரில் பயணித்தவர் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

புகையிரத கடவை காப்பாளர்கள் தற்போது பணிப்புறக்கணிப்பில் உள்ள காரணத்தினால் பொதுமக்கள் கடவையில் அவதானத்துடன் நடந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-9)

## அச்சுவேலியில் உள்ள...

காகி படுகாயமடைந்த இருவர் அச்சுவேலி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி தோப்பு பகுதியில் உள்ள உணவகத்துக்கு நேற்று இரவு 4 மோட்டார் சைக்கிளில் வாள்கள், பொல்லுகள், கோடாரியுடன் சென்ற 7 பேர் கொண்ட குழுவினர் கடை முழுவதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். அத்துடன் கடைக்கு முன்னால் நின்றிருந்த கார் ஒன்றின் மீதும் தாக்குதல் மேற்கொண்டு சேதப்படுத்தியுள்ளனர்.

பின்னர் அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த ஊழியர்களான 42 வயதுடைய கு.கதீஸ், 32 வயதுடைய கு.மகிந்தன் ஆகியோரை வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வெட்டுக்காயங்களுக்குள்ளாகிய இருவரும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தனிப்பட்ட பகை காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என்றும் குறித்த கடைக்கு நேற்று காலை உணவு உண்பதற்கு ஒரு குழுவினர் வந்துள்ளனர். அங்கு கடை முதலாளியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுவிட்டு சென்றுள்ளனர். அதன் தொடர்ச்சியாக இந்த வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-9)

## குடும்பப்பெண்...

இணுவில் மஞ்சத்தடியை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான நிசாந்தன் சங்கீதா (வயது 27) என்பவரே மேற்படி பரிதாபமாக உயிரிழந்தவராவார்.

குறித்த பெண்ணின் தந்தை 25 வருடங்களுக்கு முன்னர் காணாமல் போயுள்ளார். வறுமையில் இருந்த இவர் கடந்த 5 வருடத்துக்கு முன்னர் காதல் திருமணம் செய்திருந்தார். ஆனால் திருமண பதிவு செய்திருக்கவில்லை, 4 வயதில் ஒரு ஆண் குழந்தையும் உள்ளது. குறித்த பெண்ணின் கணவர் கடந்த ஒருவருடத்துக்கு முன்னர் வேறு ஒரு பெண்ணை திருமணம் முடித்துள்ளார். இதை தற்போது அறிந்த குறித்த பெண் கணவரை தன்னுடன் வருமாறு கேட்டுள்ளார். கணவன் வர மறுத்ததும் கடந்த 17ஆம் திகதி தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளித்துள்ளார்.

அயலவர்கள் உடனடியாக தீயை அணைத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்திருந்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த இவர் ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## ரணில்-மைத்திரி அரசு...

இதன்படி அடுத்த மாதத்திலிருந்து நாடு முழுவதிலும் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை நடத்த திட்டமிட்டிருப்பதாக ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த எதிரணி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே, வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தின் முதலாவது போராட்டம் கொழும்பில் ஆரம்பிக்கப்படும் என்று கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்-இந்த நாட்டின பொருளாதாரம் தொடர்பாக அனைத்து தீர்மானங்களையும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனே மேற்கொள்கின்றார்.

அவர்தான் இந்த நாட்டின் முதலமைச்சராக இருக்கின்றார். 2014ஆம் ஆண்டில் நல்லாட்சியிடம் அரசை வழங்கும்வரை மக்களிடம் இருந்து அறவிடப்படும் வரிவருமானம் 1 ரில்லியன் ரூபாயாகும்.

ஆனால் 2018ஆம் ஆண்டு டிசம்பர் ஆகும்போது 2 ரில்லியன் ரூபாயாக அதனை அதிகரிக்கவுள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. எனவே 100 வீதத்தில் வரி அதிகரிக்கப்படுகிறது.

இலங்கை வரலாற்றில் இப்படியான வரி அறவிட்ட அரசாங்கம் இதற்கு முன்னர் இருந்ததில்லை. எனவே ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்றவகையில் மக்கள் மீது குவிக்கப்படுகின்ற வரிச்சுமைக்கு எதிராகவும், பொருட்களின் விலைகள் அதிகரிப்பிற்கு எதிராகவும் அடுத்த மாதத்திலிருந்து நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளோம்.

அதன் முதற்படியாக கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம். நாடு முழுவதிலும் போராட்டங்களை நடத்தி இந்த வருடம் டிசம்பருக்கு முன்னதாக நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்பிவைக்கும் வேலைத்திட்டத்தை அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பிக்க உள்ளோம்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னை சந்திப்பதற்கு முயற்சித்ததாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்த கருத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்திருப்ப தாகவும், எந்த சந்தர்ப்பத்திலும் அமைச்சர் மங்கள சமரவீரவை சந்திப்பதற்கு முயற்சிக்கவில்லை என்பதை நேற்றைய சந்திப்பின் போது மகிந்த ராஜபக்ஷவே கூறியிருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். (ம)

## வட பகுதியில்...

ள்ளது.

குறிப்பாக வட மாகாணத்தின் பல பகுதிகளிலும் சப்ரகமுவ, மேல், மத்திய மற்றும் வடகிழக்கு மாகாணங்களிலும் இன்று பலத்த மழை பெய்வதோடு இடி மின்னல் தாக்கமும் இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது காங்கேசன் துறையில் இருந்து புத்தளம் வரையிலான கடல்பிரதேசங்களில் 70 கிலோமீற்றறிலும் அதிகமான காற்று வீசும். அத்தோடு இடி மின்னலோடு அதிக மழை பெய்யவுள்ளதாகவும் இதனால் கடற்கரையோரங்களில் இருக்கும் மக்கள் சற்று அவதானமாக இருக்குமாறும் இடி மின்னல் மற்றும் மழைகளால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து தவிர்த்துக் கொள்ள பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ம)

# ஹற்றன் நஷனல் வங்கி யாழ் மெற்றோ கிளையின் நடைபயணம்

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கி புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள ஆரோக்கியமான ஆற்றல் தரும் வாழ்க்கைப்பயணத்திற்கு வாடிக்கையாளரை அழைத்துச் செல்லும் HNB FIT கணக்கினை அறிமுகப்படுத்துவதற்காக ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்ப்பாணம் மெற்றோ கிளையினால் இன்றைய தினம் வியாழக்கிழமை விசேட நடைப்பயணம் ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

காலை 6.15 மணிக்கு HNB யாழ்.மெற்றோ கிளையில் இருந்து ஆரம்பமாகும் நடைப்பயணம் பண்ணைப்பாலம் ஊடாக மண்டைதீவு சந்தி வரை பயணித்து மீண்டும் யாழ். மெற்றோ கிளையினை காலை 7.30 மணிக்கு வந்தடையும்.

இவ் ஆரோக்கியமான நடைப்பயணத்திற்கு வைத்தியர்கள், பொறியியலாளர்கள், மாணவர்கள் என பல்வேறுபட்ட அரச திணைக்கள ஊழியர்கள் மற்றும் வங்கி ஊழியர்கள் உட்பட்ட 200இற்கு மேற்பட்டவர்கள் பங்குபெற உள்ளனர்.

உடல்நல ஆர்வலர்கள் அனைவரையும் இப் பயணத்தில் இணைந்து ஆரோக்கியமான உடல் நலத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் என HNB யாழ்.மெற்றோ குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ம)

# மீள்குடியேற்றத்திற்கான வசதிகள் கிடைக்காதவர்கள் விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகால உள்ளக இடம்பெயர்ந்தவர்களை வடமாகாணத்தில் மீள்குடியேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அனுமதி மீள்குடியேற்ற அமைச்சிடமிருந்துகிடைத்துள்ளது. எனவே இதுவரை அவ்வாறான வசதிகள் கிடைக்காதவர்கள் தங்கள் பகுதி கிராம சேவகரிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு வடக்குமாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் மா.ச. உறுப்பினருமாகிய வைத்தியர் பத்மநாதன் சத்தியலிங்கம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த தாவது,

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக வட மாகாணத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பூர்வீக இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுவதற்காக விசேட செயலணியொன்று மீள்குடியேற்றஅமைச்சினால் கடந்த 2016ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் நிறுவப்பட்டது.

குறித்த விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே 1990ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெயர்ந்து இதுவரை மீள்குடியேற்றத்திற்கான வசதிகள் கிடைக்காதவர்கள் உங்கள் பகுதி கிராமசேவகர்களிடம் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவித்துள்ளார். (ம)

# நினைவேந்தலில் பல்கலை மாணவர்கள் தேசிய பல்கலை ஆசிரிய ஒழுங்கமைப்பு அதிருப்தி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்றமை தொடர்பில், தேசிய பல்கலைக்கழக ஆசிரியர் ஒழுங்கமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிலையில், அது குறித்து தேசிய பல்கலைக்கழக ஆசிரியர் ஒழுங்கமைப்பின் செயலாளர் பேராசிரியர் ச்சன்ன ஜயமன்ன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சருக்கு பிரத்தியேக பாதுகாப்பு அதிகாரிகள் போல யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் செயற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்களை அனுமதிக்கக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசியல்வாதிகள் இளைஞர்களை தவறாக வழிநடத்தி மற்றுமொரு பொறுப்பற்ற திட்டத்துக்குள் அவர்களை கொண்டு செல்வதை தாம் அவதானிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ம)

# விளையாட்டுப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வானது யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நாளை (25.05.2018) அன்று நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் மேற்படி நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. உரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம)

## சீரற்ற காலநிலை...

லுள்ள மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த கால நிலை காரணமாக உயிரிழந்தோரின் எண் ணிக்கையும் நேற்று நண்பகல் வரை 13 ஆக உயர்வடைந்துள்ளது.

இதுவரை அனர்த்தம் காரணமாக 18 ஆயிரத்து 542 குடும்பங்களைச் சேர்ந்த 84 ஆயிரத்து 943 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் வெள்ளம், மண் சரிவு அபாயம் காரணமாக 7ஆயிரத்து526 குடும்பங்க ளைச் சேர்ந்த 27ஆயிரத்து 621 பேரை 194 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப் பட்டு, அவர்களுக்கான வைத்திய பரிசோத னைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின் றது. இந் நிலையில் அனர்த்தம் காரணமாக இதுவரை 29 வீடுகள் முற்றாகவும் 2 ஆயிர த்து 527 வீடுகள் பகுதியளவிலும் சேதமடை ந்துள்ளது.

அத்துடன் நில்வள, கிங், களு, களனி, மகாவலி, ஆகிய கங்கைகளும், அத்தன கல்ல ஓயா, மா ஓயா, கட்டுபிட்டி ஓயா, ரத்த ஓஸ ஓயா, கலா ஓயா, தெதுரு ஓயா ஆகியன வும் பெருக்கெடுத்துள்ளதனால் குறித்த ஆறுக ளுக்கு அருகில் உள்ளோர் தொடர்ந்தும் எச்ச ரிக்கையுடன் இருப்பதற்கும் வலியுறுத்தப்பட் டுள்ளது.

மேலும் பல நீர்த்தேக்கங்களில் நீர் மட் டம் தொடர்ச்சியாக உயர்வடைந்து வரும் நிலையில் நீர்த்தேக்கங்களின் வான் கதவு கள் திறக்கப்பட்டுள்ளன. அடுத்துவரும் நாட் களுக்கும் மழை நீடிக்குமானால் நீர்த்தேக்க ங்களின் வான் கதவுகள் தொடர்ச்சியாக திறக்கப்படலாம்.

எனவே அனர்த்த வலயங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் மறு அறிவித்தல் வரும்வரை அப்பகுதிகளுக்கு செல்ல வேண் டாம் என்றார். (ம)


### அறிவித்தல்

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 05.06.2018ம் திகதி பி.ப 01.00 மணிக்கு ஏலவிற்பனை நடைபெறவுள்ளது. பொருட்கள் பற்றிய விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்

(4187)



சவுதி அல்மராய் கம்பனிக்கு யாழிலிருந்து 9 பேர் தெரிவாகினர்!

நீங்களும் இந்த அரிய வாய்ப்பைப் பெற!

45,000 - 80,000/- உடன்

மெக்கானிக், A/C டெக்னீஷியன், வெல்டர், வீட்டு & வாகன மின் இணைப்பாளர், பிளம்பர், விற்பனை உதவியாளர், சாரதிகள், தொழிலாளர்

வாகன சாரதிகளுக்கு வாசியான வேலைவாய்ப்புக்கள்!

| | | |
|---|---|---|
| மோட்டார் சைக்கிள் | டெலிவரி றைடேர்ஸ் | 63,000/- + |
| சிறிய ரக வாகனம் | டக்சி ட்றைவர் | 49,200/- + கமி |
| கன ரக வாகனம் | விற்பனை சாரதிகள் | 80,000/- + கமி |
| | ட்ரெய்லர் டிறைவர் | 70,000/- + OT |

அரச அங்கீகாரம் பெற்ற வட க்கின் ஓரே வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

பதிவுகளுக்கு 077 36 16 798

SIKARAM ACADEMY

221 - 1/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் 021 - 222 00 11 www.sikaram.lk

TGL Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 www.tgl.lk


## சாவகச்சேரி மகளி...

யின் தீயணைப்புப் பிரிவினர் சாவகச்சே ரிக்குச் விரைந்தனர். இலங்கை மின்சார சபையினரும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி க்குச் சென்று பார்வையிட்டனர். சம்பவத்தை யடுத்து, கல்லூரி மாணவிகள் அச்சமடைந்து காணப்பட்டனர்.

மேலும் கீரிமலை நகுலேஸ்வர ஆலய கோபுரத்தில் காணப்பட்ட சிற்பங்கள் மின் னல் தாக்கத்தால் சேதமடைந்தன.

கோபுரத்தின் வர்ணப்பூச்சு வேலைகள் இடம்பெற்று வரும் நிலையில் இந்தச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாக்கவே கோபுர கலசங்களில் வரகு தானியம் இடப்படு கின்றது. எனினும் நகுலேஸ்வர ஆலய கோபுரத்தின் சீரமைப்பு பணிகள் இடம்பெறு வதால் கலசங்கள் பிரதிஷ்டை செய்யப்பட வில்லை. அதனால் மின்னல் தாக்கம் ஏற்ப ட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குடாநாட்டில் வேறு இர ண்டு இடங்களில் மின்னல் தாக்கத்தால் 2 தென்னை மரங்களில் தீப் பிடித்ததுடன், வீடு ஒன்றின் மின் இணைப்பு பழுதடைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)


### கடை வாடகைக்கு உண்டு

554B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு. மேற்குறித்த விலாசத்திற்கு நேரில் வரவும்.

(4110)

### விற்பனைக்கு

* மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

வேம்படி வல்வெட்டித்துறை — தொடர்புகளுக்கு 077 357 3055

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /-Kg

கனடா-900 /-Kg

ஜேர்மனி- 700 /-Kg

நெதர்லாந்து-700 /-Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


## தர்மபுரத்தில் வெடி...

படையில் நேற்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் குறித்த இடத்தில் அகழ்வை மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டது.

தர்மபுரம் 7-ம் யூனிற் பகுதியில் உள்ள குறித்த வீட்டிற்கு சென்ற விமானப்படையின ரும், விசேட அதிரடிப்படையினரும் தர்மபுரம் பொலிஸார், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவையாளர் முன்னிலை யில் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் பொழுது சுமார் ஆறு அடி ஆழத் தில் பொலித்தீன் கொண்டு சுற்றப்பட்டு பெட்டி ஒன்றினுள் வைத்து புதைக்கப்பட்டிருந்த வெடி பொருட்களை அடையாளம் காட்டும் கருவி மற்றும் கைத்துப்பாக்கி தோட்டா ஐந்து என்பன மீட்கப்பட்டுள்ளன. (ம-15-312)

## நிலத்தில் புதைக்க...

வேலுப்பிள்ளை மாணிக்கவாசகர் என்ற பொதுமகனின் வீட்டு வளவில் வெடிபொருள் கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன என்று தக வல் கிடைத்ததையடுத்து,

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் அனு மதி பெற்று மண்ணை அகழ்ந்து வெடிபொ ருள்களை மீட்கும் பணி நேற்று நண்பகல் ஆரம்பிக்கப்பட்டது.

அட்ராக் கண் என அழைக்கப்படும் ஆயு தத்துக்குப் பயன்படுத்தப்படும் குண்டுகளே பெருமளவு மீட்கப்பட்டன.

ஒரு பெட்டியில் 90 குண்டுகள் வீதம் 38 பெட்டிகள் தோண்டி எடுக்கப்பட்டன. அத்து டன் ரி56 துப்பாக்கிப் பயன்படுத்தப்படும் சி56 என்ற ரவைகள் 2 பெட்டிகள் (ஆயிரத்து 500 ரவைகள்) மீட்கப்பட்டன என்று கிளிநொச்சிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-312)

## 50 ஆயிரம் குடும்...

ரர்களிடம் கேள்விமனு கோரப்பட்டது. அதில் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விமனுக்களில் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான வீடமைப்பு வேலைத்திட்டம், ஐக்கியநாடுகள் சபையின் திட்டம் தொடர்பான அலுவலகம், இலங்கையில் மனித நேயத்திற்கான நிழல் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றால் முன்னெடுக்கப்படும் இலாப த்தை இலக்காக கொள்ளாத தொண்டு அமைப்புகளால் சமர்ப்பிக்கப்பட்ட வீடமைப்பு நிர்மாணத்துறையில் 3 மாற்று ஆலோச னைகள் மிகவும் பயனுள்ளதாக இருப்பது டன் இவை தொடர்பில் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சு இணக்கப்பாட்டு குழு வின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக முதற்கட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல் லைத்தீவு திருகோணமலை மற்றும் மட்டக் களப்பு ஆகிய மாவட்டங்களில் இவ்வாறான 25 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு இந்த அமைப்புக்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோச னைகளுக்கு அமைவாக மேலதிக நடவடிக் கைகளை மேற்கொள்வதற்காக தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல் கள் அமைச்சு என்ற ரீதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. (ம)


### வேலைவாய்ப்பு - 2018

எமது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் யாழ் புதிய கிளைகளிற்கு முகாமைத்துவத்துறையில் பயிற்சிக்கான நேர்முகத்தேர்வு ஆரம்ப மாகவுள்ளது. (தகுதி O/L Pass) 180 நாட்கள் பயிற்சியின் பின்பு சாவ தேச ரீதியாக வணிகத்துறையில் இணைந்த எமது நிறுவனத்திலே நிரந்தரமான பதவிகளும் வழங்கப்படும். யாழ் மாவட்டத்தினைத் தவிர்ந்த வெளிமாவட்டத்தினருக்குப் பயிற்சிக்காலத்தில் தங்குமிட வசதி, பயிற்சியின் போது 15,000/= - 25,000/= வரை பெற்றுக்கொள்ள முடியும். பயிற்சியின் பின் மாதமொன்றிற்கு 45,000/= க்கு அதிகமான கொடுப்பனவும் வேறு சலுகைகளும் உண்டு.

தொடர்பு :- 076 676 7620

### விற்பனை

வல்வெட்டித்துறை ஊறணியில் அமைந்திருக்கும் அந்தியேஷ்டி மடத்துக்கு முன்பாக பருத்தித் துறை பிரதான வீதியில் காணியும் கடைகளும் விற்பனைக்குண்டு.

(4184)

தொடர்புகளுக்கு:- 077 618 4746

### போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

வட மாகாண ஆசிரியர் தெரிவு

June 9 பரீட்சை நடைபெறவுள்ளது. சனி, ஞாயிறு 09.30-02.30 மணிவரை

கணக்காய்வாளர்

சனி, ஞாயிறு 09.30-03.30 மணிவரை

SLEAS மற்றும் SLAS

பயிற்சி வகுப்புக் கள் பிரதி ஞாயிறு 09.00-03.00

0766883394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்சல் வங்கியருகில்)



# வட மாகாண விளையாட்டு விழா 2018

### முதல் நாள் நிகழ்வுகள் - (26.05.2018 சனி)

- காலை 07.00 மணி முதல்
  - ★ வட மாகாணத்தின் சிறந்த மெய்வல்லுநர்கள் கலந்து கொள்ளும் மெய்வல்லுநர் போட்டிகள்.
- மாலை 02.30 மணி முதல்
  - ★ மெய்வல்லுநர் போட்டி இறுதி நிகழ்வுகள்.
  (200m ஆண்-பெண், 800m ஆண்-பெண், ஈட்டி எறிதல் ஆண், 4x100m ஆண்-பெண்)
  - ★ பரிசளிப்பு நிகழ்வுகள்.

உதைபந்தாட்டம் 6.30 மணி
தமிழ் யுனைற்றெட் - வவுனியா வோறியஸ்

இடம்
துரையப்பா விளையாட்டு அரங்கு, யாழ்ப்பாணம்.

காலம்
26.05.2018 சனிக்கிழமை,
27.05.2018 ஞாயிற்றுக்கிழமை

(ஜி - 2594)

### இரண்டாம் நாள் நிகழ்வுகள் -27.05.2018 ஞாயிறு

- காலை 07.00 மணி முதல்
  - ★ வட மாகாணத்தின் சிறந்த மெய்வல்லுநர்கள் கலந்து கொள்ளும் மெய்வல்லுநர் போட்டிகள்.
- மாலை நிகழ்வுகள் பி.ப 02.30 மணி முதல்
  - ★ பாரம்பரிய மற்றும் மேலைத்தேய வாத்திய அணிவகுப்புக்கள்
  - ★ மெய்வல்லுநர் போட்டி இறுதி நிகழ்வுகள்
  (1500m ஆண்கள்-பெண்கள், 100m ஆண்கள்-பெண்கள், 4X400m ஆண்கள்-பெண்கள்)
  - ★ கலாசார நிகழ்ச்சிகள்.
  - ★ கண்கவர் வாண வேடிக்கைகள் ★ பரிசளிப்பு நிகழ்வுகள்.



உதைபந்தாட்டம் 6.30 மணி
திருமலை றைரான் -யாழ்மாவட்ட தெரிவு அணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.